கல்கி

KALKI 30.7.89 ரூ. 2.



அடுக்கடுக்காய்
நன்மைகளை
அளிக்கப் போகும்
திட்டம்!

பஞ்சாயத் ராஜ்



அதிகாரங்களைப்
பறிக்கும்
அரை வேக்காட்டுத்
திட்டம்


நறுமணம் நிலவட்டும்...
வியர்க்குரு விலகட்டும்.
இது ஒரு அற்புதமான உணர்வு. நைஸில் லாவெண்டர்; லாவண்டர் மற்றும் கோலோனின் புதுமணத்துடன் மேனியைத் தழுவிடும் ஓர் அழகிய உணர்வு. இன்றே முயன்று பாருங்கள். இதை மிகவும் விரும்புவீர்கள்.
புதிய
நைஸில்
லாவெண்டர்
nycil
PRICKLY HEAT POWDER
வியர்க்குருவை எதிர்த்திடும்.
லாவெண்டர், கோலோனின் நறுமணம் பரப்பிடும்.
1511

சியாசின் சிக்கல்

சமீபத்திய ராஜீவ் — பேனசிர் சந்திப்பின் போது பேசப்பட்ட விஷயங்களில் ஒன்று சியாசின் பிரச்னை. அதற்கு என்ன பின்னணி? விளக்குகிறார், தினமணிக் (கதிர்) பொறுப்பாசிரியர் கி. கஸ்தூரி ரங்கன்...



■ அந்தக் கடும் குளிரில் நம் வீரர்கள் உயிர் வாழ்வதே ஒரு சாகசம்தான்!

"சியாசின் எங்கே இருக்கிறது? அதன் பூகோள ரீதியான முக்கியத்துவம் என்ன?"

"இமய மலையில் காஷ்மீர் பகுதியில் சுமார் 22,000 அடி உயரத்திற்கு மேல் உள்ள பனி ஆற்றுப் பகுதிதான் சியாசின். 'சியாசின்' என்றால் 'ரோஜா பூந்தோட்டம்' என்று பொருள். ஆனால் அங்கே புல் பூண்டு முளைக்காது. சியாசின் பனி ஆறு சுமார் 75 கிலோ மீட்டர் நீளமானது. இந்தப் பகுதியினை உலகின் மிகவும் ஆபத்தான பிரதேசங்களில் ஒன்று என்று குறிப்பிடலாம். மனித வாழ்க்கைக்குத் துளியும் லாயக்கில்லாத இடம். அங்கே குளிர்காலத்தில் குளிர் மைனஸ் 55 டிகிரியைத் தொடும். இந்திய — பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள இந்த சியாசின் பகுதி, உலகின் மிக உயரமான போர்க்களங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது."

"சியாசின் பிரச்னை உருவானது எப்படி?"

"1949 — இல் காஷ்மீரில் போர் நிறுத்தம் ஏற்பட்டதிலிருந்து 1971 வரை சியாசின் பகுதி யாருடைய கட்டுப்பாட்டிலும் இல்லை. 1949 — இல் போர் முடிந்த போது போர் நிறுத்தக் கோடு ஒன்று நிர்ணயிக்கப்பட்டது. இந்தக் கோட்டுப் பகுதிக்கு வடக்கே, இரு நாடுகளின் பகுதிகளுக்கும் அப்பால், சீன எல்லையருகே சியாசின் பகுதி அமைந்திருப்பதால் அந்தப் பகுதியில், போர் நிறுத்தக் கோடு வரையறுக்கப்படவில்லை. மேலும், மிக உயரத்திலிருக்கும், பனிப் பரப்பு ஆதலால், இந்தியா, பாகிஸ்தான் இரண்டுமே அங்கே சென்று படைகளை நிறுத்தும் என அப்போது யாரும் எதிர்பார்க்க

வில்லை. ஆனால் அங்கே இந்தியாதான் 72 — இல் தன் துருப்புக்களை அனுப்பி, சில இலக்குகளைத் தன் வசப்படுத்திக் கொண்டது. இதற்குப் பாகிஸ்தான் எதிர் நடவடிக்கை எடுத்தது என்றுதான் சொல்ல வேண்டும். சீனாவோ, பாகிஸ்தானோ சியாசின் வழியே, லடாக் பகுதிக்கு வந்து விடுமோ என்கிற எண்ணத்தில்தான் இந்தியா சியாசினைப் பிடித்தது.''

''இந்தியாவின் அந்த எண்ணம் தவறானதா?''

''அப்படித்தான் சொல்ல வேண்டும். காரணம், அந்தப் பகுதியில் சாலை அமைப்பதும், பெரிய தாக்குதலுக்குத் தேவையான சப்ளைகளைக் கொண்டு செல்வதும் சாத்தியமற்றவை. எனவே, சியாசின் பிரச்னையை இரண்டு நாடுகளுமே எழுப்பாமல் தவிர்த்திருக்கலாம். ஆனாலும், போர் என்று வந்து விட்டால் சியாசின் ஒரு 'ஸ்டிராடஜிக் பாயிண்ட்' என்று இந்தியா கருதுவதால், அங்கே நம் படைகள் இருக்க வேண்டியது கட்டாயமாகிறது.''


''இதனால் இந்திய அரசுக்குப் பல கோடி ரூபாய் வீண் செலவு என்று சொல்லப்படுகிறதே!''

''அது வாஸ்தவம்தான். 1984 முதல் ஆயிரக்கணக்கான இந்திய ஜவான்கள் அங்கே இறந்திருக்கிறார்கள். பலர் ஊனமடைந்திருக்கிறார்கள். அத்தனை உயரமான இடத்துக்கு நம் படை வீரர்களை அனுப்புவதிலும், அவர்களை அங்கே நிறுத்துவதிலும், சப்ளைகளை அனுப்பி வைப்பதிலும் இந்தியாவுக்கு ஏராளமான சேதமும், செலவும் ஏற்படுகின்றன. அங்கே வீரர்கள் உயிர் வாழ்வதே பெரிய சாகசம்தான்! ஒரு புள்ளி விவரப்படி, அங்கே அனுப்பப்படும் வீரர்களில் ஏறத்தாழ ஐம்பது சதவிகிதத்தினர் மரணமடைகின்றனர். (கடுமையான போரில் கூட உயிர்ச் சேதம் '20%தான்.) துருப்புக்களின் கூடாரங்கள் பனி அருவியில் சிக்குவதும் பனிப்பாறை உருகி நகரும் போது அடித்துச் செல்லப்படுவதும் சகஜமான ஒன்று. அவ்வளவு உயரத்தில் போதிய ஆக்ஸிஜன் கிடைக்காமல் கூடப் பலர் உயிரிழக்கிறார்கள்.''

''இந்தப் பிரச்னைக்குத் தீர்வுதான் என்ன?''


''இந்தியா — பாகிஸ்தான் நட்புறவை மேலும் பலப்படுத்துவதுதான் வழி. 1972—ஆம் ஆண்டுக்கு முந்தைய நிலைக்கு இரு நாட்டுத் துருப்புக்களும் திரும்ப வேண்டும் என்கிற கருத்தை இரு நாடுகளும் ஏற்றுக் கொண்டு, செயல்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால், சியாசின் பகுதியில், படைகளை நிறுத்துவதற்கும், ராணுவ மோதல்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியும்.''

பேட்டி: **எஸ். சந்திரமௌலி.**



சமீபத்திய விம்பிள்டனில், இந்தியர், லிஷென் அலி உள்பட மொத்தம் பதினைந்து விளையாட்டு வீரர்களிடமிருந்து 8850 டாலர் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஈக்வடார் நாட்டைச் சேர்ந்த ஆன்ட்ரஸ் கோமெஸ் என்பவர்தான் அதிகபட்சமாகத் திட்டியதற்கும் மட்டையைத் தரையில் அடித்ததற்குமாக 1500 டாலர் அபராதம் கட்டியிருக்கிறார்!

நன்றி: ஹிந்து: தகவல்: சங்கர்.



'19—1(a) ஜட்ஜ்' என்றால் அது சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி ஈ.எஸ். வெட்கட்ராமையாவைத்தான் குறிக்கும் என்பார்கள். (அரசியல் சாசனச் சட்டத்தில் 19—1(a) பேச்சு — எழுத்துரிமையை வலியுறுத்துகிறது.)

அமிர்தலிங்கம்: மாறுவேடம் போட்டாலும் மாறாத பண்புள்ளம்



* அமிர்தலிங்கம்: ''போளி பிரியர்''


சமீபத்தில் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவர் அமிர்தலிங்கம் 1983ல் இலங்கையில் ஏற்பட்ட மிகக் கொடிய இனக் கலவரத்துக்குப் பிறகு சென்னையில் தான் வசித்து வந்தார். அந்த இனக் கலவரத்தின் போது சிங்கள வெறியர்களிடமிருந்து தப்பிக்க, பல மாறுவேடங்களைப் போட்டு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்து சேர்ந்தார். பின்னர் விமானத்தில் சென்னை வந்தார். இளைஞர்களையும், ''வாங்க, வாங்க'' என்று மரியாதை கொடுத்து வரவேற்கும் பண்பாளர். யாராவது திருநெல்வேலி பக்கம் போவதாகச் சொன்னால் ''போளி வாங்கிட்டு வாங்க என்று அன்புடன் வேண்டுகோள் விடுப்பார். சென்னையிலிருந்து மதுரைக்கு 'வைகை'யில் சென்றால் (பாண்ட்ரி கார்) டிபன் தயாரிப்புப் பகுதிக்குப் போய் 'போளி இருக்கிறதா?' என்று ஆவலுடன் விசாரிப்பார். இன்றைக்குத் தீவிரவாதிகளாக இருக்கின்ற பிரபாகரன், கிட்டு, மாத்தையா, மறைந்த டெலோ தலைவர் சபாரத்னம், சமீபத்தில் கொல்லப்பட்ட 'பிளாட்' தலைவர் முகுந்தன் என்கிற உமா மகேஸ்வரன், தற்போது வட கிழக்கு மாநிலத்தின் முதல்வராக இருக்கும் வரதராஜ பெருமாள் ஆகியோர் ஒரு காலத்தில் அமிர்தலிங்கத்தின் தலைமையின் கீழ் பணியாற்றியவர்கள்தாம்.

'**யா**ழ்ப்பாண நாவலர்' என்று அழைக்கப்பட்ட அமிர்தலிங்கத்தின் சொல்வன்மை பலரைக் கவர்ந்துள்ளது. இந்தோ — சீன மற்றும் இந்தோ — பாக் யுத்தங்களின்போது, இலங்கை அரசு சீனாவையும் பாக்கையும் ஆதரித்தது. அப்போது இலங்கை பார்லிமெண்டில் 'எங்கள் தாய்நாட்டைப் போன்ற இந்தியாவுக்கு எதிரான இக்கொள்கையை வன்மையாகக் கண்டிக்கிறேன்' என்று பேசினார் அமிர்தலிங்கம்.

பல சத்தியாக்கிரகப் போராட்டங்களில் அமிர்தலிங்கம் கலந்து கொண்டார். அவருடன் அவர் மனைவி மங்கையர்க்கரசியும் உறுதுணையாகப் போராட்டத்தில் இறங்குவார். ஒருமுறை அமிர்தலிங்கம் சிங்கள போலீஸால் தாக்கப்பட்டு, நெற்றியில் அடிபட்டு இரத்தம் சொட்டச் சொட்டச் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது அவருடன் சிறை சென்ற மங்கையர்க்கரசிக்கு இரண்டாவது மகன் பிறந்து நான்கைந்து நாட்களே ஆகியிருந்தன!

அமிர்தலிங்கத்துடன் சேர்த்துக் கொலை செய்யப்பட்ட யோகேஸ்வரனும், 1983 இனக் கலவரத்தின் போது சென்னைக்கு வந்தவர்தான். இலங்கையிலிருந்து வரும் போது தமது சொத்துக்களை விற்றுவிட்டுக் கையில் பல லட்சங்களோடு வந்து சென்னையில் ஒரு சீட்டுக் கம்பெனியில் 'டெபாஸிட்' செய்தார். அதில் கிடைக்கும் வட்டியில் வசதியாக வாழ எண்ணிக் கீழ்ப்பாக்கத்தில் ஒரு நல்ல வீட்டில் குடி இருந்தார். ஆனால் திடீரென்று சீட்டுக் கம்பெனி இழுத்து மூடப்படவே யோகேஸ்வரனுக்குப் பெரு நஷ்டம். வசதிகளைச் சுருக்கிக் கொண்டு சிறு வீட்டில் வசித்தார். இருந்த போதிலும் அவரது மனைவி விருந்தோம்பலில் சளைத்தவர் அல்ல. யார் வந்தாலும், 'என்ன சாப்பிடுகிறீர்கள்' என்று கேட்டுவிட்டுத்தான் மற்ற விஷயங்களைப் பேச ஆரம்பிப்பார். காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர் யோகேஸ்வரன்.

— கௌசல்யா



பஞ்சாயத்

—பரபரப்பான

ரேடியோவைப் போட்டால் பஞ்சாயத் ராஜ், ம. வி. யைப் போட்டால் பஞ்சாயத் ராஜ். 'கல்கி'யிலுமா என்று முணு முணுக்காமல் படித்தால் ஆளும் கட்சியின் நிலையும் எதிர்க்கட்சிகளின் நிலையும் தெளிவாகப் புரியும்.

"தேர்தலுக்காக இந்தத் திருத்தம் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறீர்கள். தேசத்துக்கு நன்மை பயக்கும் போது அதன் மூலம் எங்களுக்கும் தேர்தலில் ஒரு நன்மை ஏற்பட்டால் என்ன தவறு?"

ஜெயந்தி நடராஜன் (எம்.பி.—இ. காங்): நமது பிரதமர் பதவிக்கு வந்தவுடன் இந்தியா முழுவதும் பல கிராமங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்த போதே மத்திய அரசு போடும் திட்டங்களினால் அடிமட்டத்திலுள்ள மக்களுக்கு எந்தப் பயனும் போய்ச் சேர்வதில்லை என்று உணர்ந்தார். அவ்வாறு போய்ச் சேர வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டுமென்று பலமுறை மாவட்ட கலெக்டர்கள் மாநாடுகளைக் கூட்டி விவாதித்தார். முதலாவதாக, மத்திய அரசு மக்களுக்கு ஒரு ரூபாய் செலவழிக்க முன் வந்தால் அதில் எண்பது காசு நிர்வாகச் செலவுகளுக்கே போய் விடுகிறது. மீதமுள்ள இருபது பைசா கூட மக்களுக்குச்

சரியாகச் சென்றடைவதில்லை. இரண்டாவதாக டெல்லியில் உட்கார்ந்து கொண்டோ அல்லது மாநிலத் தலைநகரங்களில் உட்கார்ந்து கொண்டோ கிராம மக்களுக்கு என்ன வேண்டுமென்று நிர்மானிப்பதை விட அந்தந்த கிராம மக்களே தங்களுடைய தேவைகளுக்கேற்பத் திட்டங்களை வகுத்துக் கொள்ளும் அதிகாரம் தரப்பட வேண்டும்; மூன்றாவதாக, அடிமட்டத்தில் ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டும். திட்டமிடுவது மாவட்ட அளவிலும் அதை அமுலாக்குவது ஒன்றியங்கள் அளவிலும் இருப்பின் கிராம அளவில் மக்கள் நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்வார்கள்; என்று முடிவுக்கு வந்துள்ளோம். இது மிகச் சிறந்த பலன்களை விளைவிக்கும் என்று நாங்கள் கருதுகிறோம்.

உ. ரா. வரதராஜன் (எம். எல். ஏ. — சி. பி. ஐ. (எம்): வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டுத்தான் இந்தப் பிரச்னை இப்போது முன்னுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதோ என்ற அடிப்படைச் சந்தேகம் பலருக்கு இருக்கிறது. அது நியாயமான சந்தேகம் என்பது என் கருத்து. இப்பொழுது நீங்கள் கொண்டுவரவிருக்கும் பஞ்சாயத் ராஜ் பற்றிய 64—வது சட்டத்

ராஜ்
விவாதம்

“ நேரு காலத்திலிருந்து செயல்பட்டு வரும் முறையை மாற்ற வேண்டிய அவசியமென்ன...? ‘ராஜீவ் காந்தியின் பணம் உனக்கு நேரடியாக வருகிறது’ என்று தேர்தல் நேரத்தில் மக்களிடம் சொல்லி வோட்டுக் கேட்பதற்காகவா? ”





**அதிகாரங்களும்
நிதியும் பஞ்சாயத்துக்கு
ஒழுங்காகப் போய்ச்
சேரவேண்டும் என்று
நினைப்பது தவறா...?**

இருத்தம். ஜனதா ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட அசோக் மேத்தா கமிட்டி வழங்கிய பரிந்துரைகள்படிதான் செய்யப் படவுள்ளது என்பது பிரதமரின் வாதமாக இருக்கிறது. அசோக் மேத்தா கமிட்டி அமைத்த காலத்திலேயே மாநில அரசாங்கத்தினுடைய அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புக்களுக்குப் பகிர்ந்தளிப்பது மட்டும் போதாது; மத்திய அரசி னுடைய அதிகாரங்களை மாநில அரசுக்குப் பகிர்ந்தளிப்பதையும் சேர்த்துத்தான் ஆராய வேண்டும் என்று நாங்கள் கூறி வந்தோம். அதற்கு ஐந்தாண்டுகள் கழித்து மத்திய, மாநில அரசுகளின் அதிகாரங்கள் மறுபரி சீலனை செய்யப்பட வேண்டும் என்று முன்பு அசோக் மேத்தா கூறியதை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுதான் சர்க்காரியா கமிஷனை அமைத்தது. ஆனால் இப்போதோ இந்த சர்க்காரியா கமிஷன் அறிக்கை முடக்கப்பட்டிருக்கிறது! மேலும், அசோக் மேத்தா கமிட்டி பரிந்துரைகளுக்கும் இன்றைக்கு மத்திய அரசாங்கம் 64—வது அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலமாகக் கொண்டு வர நினைக்கும் மாற்றங்களுக் கும் நிறைய முரண்பாடுகள் உள்ளன... பஞ்சாயத்துக்களைக் கலைப்பதற்கான உரிமையும், பஞ்சாயத்து நிதி அதிகாரங் களைப் பரிசீலிப்பதற்காக அமைக்கப்படும் நிதிக் கமிஷனும் கவர்னரின் அதிகார வரம்புக்கு மாற்றப்பட உள்ளன. நிதிக் கமிஷன் கவர்னருக்குத்தான் பரிந்துரை செய்ய வேண்டும். தற்போது மாநில அரசுக் குட்பட்ட உள்ளாட்சித் தணிக்கை அமைப் புக்கள் (**Local Fund Audit**) வசம் உள்ள பஞ்சா யத்தினுடைய தணிக்கை — உரிமை, மத்திய அரசின் தலைமைக் கணக்காயர் (**C&A.G.**) வசம் மாற்றப்படவுள்ளது. ஆக இப்பொ ழுது மாநில அரசுக்கு இருக்கும் அதிகாரங் கள் மத்திய அரசுக்கோ அதன் பிரதிநிதி களுக்கோ போய் விடும்.

ஜெயந்தி: தேர்தலுக்காக இந்தத் திருத் தம் கொண்டு வருகிறோம் என்று சொல் கிறீர்கள். தேசத்துக்கு நன்மை பயக்கும் பொழுது அதன் மூலம் எங்களுக்கும் தேர்த லில் ஒரு நன்மை ஏற்பட்டால் என்ன தவறு? இந்தப் பஞ்சாயத்து மசோதா மக்களுக்கு நன்மை பயக்குமா? தீமை விளைவிக்குமா? என்பது விவாதமாக இருக்க வேண்டுமே யன்றித் தேர்தலில் எங்களுக்குச் சாதகமாக இருக்கும் என்பதற்காக எதிர்க்கட்சிகள் கண் மூடித்தனமாக எதிர்க்கக் கூடாது. போகட் டும். அசோக் மேத்தா கமிட்டி பரிந்துரைத் ததே ஒரு சட்டத் திருத்தந்தான். பஞ்சாயத் துக்களைக் கலைப்பதற்கான அதிகாரம் நாங்கள் கொண்டு வரவிருக்கும் மசோதாப் படி மாநிலச் சட்ட மன்றத்தின் கையில்தான் இருக்கும். அந்த அதிகாரம் கவர்னருக்கு என்று சொல்வது தவறான பிரசாரம். நிதிக் கமிஷனை அமைப்பதற்காக கவர்னருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைப் பற்றிச் சொன்னீர்கள். கவர்னர் என்பவர் மாநில மந்திரி சபையின் ஆலோசனையின் பேரில் தான் செயல்படுபவர்.

வரதராஜன்: அது சரிப்பட்டு வராது! கவர்னர்களுக்கும் மாநில அரசுகளுக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். உதாரண மாகக் கேரள கவர்னர், துணைவேந்தர் நியமனத்தில் மாநில அரசின் பரிந்துரையை மீறித் தன்னிச்சையாகச் செயல்பட்டிருக் கிறார். இது போல் பல உதாரணங்கள் சொல்லலாம்.

ஜெயந்தி: தனிப்பட்ட ஒரு கவர்னரைப் பற்றி நான் சொல்லவில்லை. நிதிக் கமிஷன் செய்யப் போகும் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் மாநில அரசுக்கு இல்லை. பஞ்சாயத்துக் கணக்கை மத்திய அரசின் அதிகாரிகள் தணிக்கை செய்வது பற்றிச் சொன்னீர்கள். இப்பொழுதும் அதுதானே நடக்கிறது.

வரதராஜன்: கிடையாது. உள்ளாட்சி நிறுவனங்களின் கணக்குத் தணிக்கை, மாநில அரசின் தணிக்கை அதிகாரிகளால் செய்யப்படுகிறது. மாநில அரசின் வரவு செலவு திட்டத் தணிக்கைதான் மத்திய அரசின் கணக்குத் தணிக்கை அதிகாரி

களால் செய்யப்படுகிறது.

ஜெயந்தி: சரி. அதனால் என்ன பாதிப்பிருக்கும்! இந்தப் பஞ்சாயத்து மசோதா மூலம் மாநில அரசின் எந்த அதிகாரத்தையும் நாங்கள் தொடவில்லை. அரசியல் சட்டத்தின் அடிப்படை அப்படியே இருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலம், உள்ளாட்சி நிறுவனங்கள் ஒழுங்காக இயங்கி மக்களுக்கு நன்மையளிக்க வேண்டுமென்பதுதான் எங்கள் நோக்கம்.

வரதராஜன்: அரசியல் சட்டத்தின் நாற்பதாவது பிரிவின்படி உள்ளாட்சி நிறுவனங்களை ஒழுங்காக நிர்வகிக்கும் பொறுப்பு மாநில அரசுக்குத்தான் உள்ளது. அதே போல் அரசியல் சட்டம் 246 வது பிரிவின்படி பஞ்சாயத்துக்களும் மாநிலப் பட்டியலில்தான் உள்ளன. அரசியல் நிர்ணய சபையில் பஞ்சாயத்து விஷயம் விவாதிக்கப்பட்ட பொழுது அது முழுக்க முழுக்க மாநில அரசாலேயே நிர்வகிக்கப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. நீங்கள் கொண்டு வரும் இந்த மசோதா மூலம் தேர்தல் நடத்தும் அதிகாரம், கணக்குத் தணிக்கை அதிகாரம், நிதி அதிகாரம், ஆகியவை மத்திய அரசுக்கோ அல்லது அதன் பிரதிநிதிகளுக்கோ போய் விடும். இது அதிகாரப் பறிப்பு இல்லையா?

ஜெயந்தி: அதிகாரங்களும் நிதியும் பஞ்சாயத்துக்கு ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டும் என்று நினைப்பது தவறா? மேலும், பாராளுமன்றம், சட்டமன்றம் ஆகியவற்றில் இருப்பது போல, உள்ளாட்சி நிறுவனங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். பெண்களுக்கு முப்பது சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நாங்கள் நினைக்கிறோம். அரசியல் சட்டத்தைத் திருத்தினால்தான் இவற்றை அமுல்படுத்த முடியும். ஒரு பாதுகாப்புமிருக்கும். அதே போல் கலைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு ஆறு மாதத்துக்குள் தேர்தல் நடத்த வேண்டுமென்பது நல்ல விஷயம் இல்லையா?

வரதராஜன்: பஞ்சாயத்து நிர்வாகம் சரியாக நடக்க வேண்டுமென்ற நோக்கம் நிறைவேற வேண்டுமென்றால் இரண்டு வழிமுறைகள் இருக்கின்றன. ஒன்று: சர்க்காரியா பரிந்துரைப்படி மாநில கவுன்சில் அமைத்து, அதன் பரிந்துரைகளை எல்லா மாநிலச் சட்ட மன்றங்களும் ஏற்று சட்டம் இயற்ற வேண்டும். மற்றொன்று, மத்திய அரசு எல்லா மாநிலங்களின் சம்மதத்தோடும் ஒரு சட்டத் திருத்தம் செய்யலாம். இவ்விரண்டில் எதையும் கடைப்பிடிக்காமல் எதேச்சாதிகாரத்தைக் கடைப்பிடித்து மாநில அரசின் அதிகாரங்களைப் பறிப்பதென்பது சரியான செயலாகாது. மேலும் மத்திய அரசு கொண்டு வரும் சட்டத்தையொட்டி மாநில அரசும் சட்டம் இயற்ற வேண்டும். ஒரு சில மாநில அரசுகள் இது போல் செய்யா விட்டால் அவற்றைக் கலைத்து விடுவோம் என்று பார்லிமெண்டில் மிரட்டுகிறார் சிவசங்கர்!... நீங்கள் மசோதா கொண்டு வரும் முறையே சரியில்லை. இந்த மசோதா முதலமைச்சர்களின் மாநாட்டில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஜெயந்தி: தேர்தலுக்காகத்தான் நாங்கள் செய்கிறோம் என்று எதிர்க் கட்சிகள் அரசியல் காரணங்களுக்காக எங்களை எதிர்க்கிறார்கள். எங்கள் காங்கிரஸ் ஆளும் மாநிலங்கள் உட்பட எந்த மாநில அரசும் பஞ்சாயத்துக்களை ஒழுங்காக நிர்வகிப்பதில்லை. இதனால்தான் மத்திய அரசுக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. அரசியல் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் மாநில அரசுகள் பஞ்சாயத்து நிர்வாகத்தை ஒழுங்காக நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும்.

வரதராஜன்: அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதென்றால் மத்திய அரசிலிருந்து மாநில அரசுக்கும் மாநில அரசுகளிடமிருந்து பஞ்சாயத்துக்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். அதுதான் உண்மையில் அதிகாரத்தைப் பரவலாக்கும் முறை. அதை விட்டு விட்டுப் பஞ்சாயத்துக்களுக்கு மட்டும் அதிகாரம் கொடுப்பது என்பது ஒரு தலைப்பட்சமாக இருக்கிறது.

ஜெயந்தி: மாநில அரசு அதிகாரங்கள் பறி போய் விடும் என்று நினைத்து எங்

இந்த மசோதா மூலம் பஞ்சாயத்துத் தேர்தல் நடத்தும் அதிகாரம், நிதி அதிகாரம் கணக்குத் தணிக்கை அதிகாரம் ஆகியவை மத்திய அரசுக்கோ அதன் பிரதிநிதிகளுக்கோ போய்விடும்.





சர்வர்: எப்பவும் வெந்நீரே கேட்டு வாங்கிக் குடிக்கிறீங்களே; டாக்டர் பச்சைத் தண்ணீர் ஆகாதுன்னு சொல்லியிருக்காரோ?

அவர்: அப்படியொன்றுமில்லை; வெந்நீர் கேட்டால்தானே நீ உள்ளே விரல் போடாமல் கொண்டு வர்றே! அதுக்காகத்தான்!

— கரம்.

களுக்குள்ள அரசியல் சட்டத் திருத்த உரிமையை நீங்கள் தட்டிப் பறிக்க முடியாது.

வரதராஜன்: நீங்கள் மத்தியில் சட்டத் திருத்தம் கொண்டு வந்தால் கூட அந்தத் திருத்தத்தையொட்டி மாநில அரசுகளும் சட்டம் இயற்ற வேண்டுமே. நீங்கள் எதிர்க் கட்சிகளின் கருத்துக்களுக்கு மதிப்பு அளிக்காமல் போனால் பல மாநிலங்களில் சட்டம் கொண்டு வரப்பட மாட்டாது. உங்கள் நோக்கம் நிறைவேறாது...

ஜெயந்தி: மக்களுக்கு நன்மையளிக்கும் இந்த விஷயத்தில் மாநில அரசுகள் (குறிப்பாக எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலங்கள்) வம்பு செய்தால் மக்கள் தீர்ப்பளிப்பார்கள்.

வரதராஜன்: இந்த மோதலைத் தவிர்க்கலாமே? நான் ஏற்கெனவே சொன்னது போல் இரண்டு வழிமுறைகளில் ஒன்றை ஏற்றிருந்தால் நல்ல விளைவுகளை உத்தரவாதப்படுத்தி இருக்க முடியுமே! மாநில அரசுகளின் சம்மதத்தோடு சட்டம் கொண்டு வருவது சிறப்பாக இருக்குமே.

ஜெயந்தி: அதற்குத்தான் முதல்வர்கள் மாநாடு போட்டோமே. எதையுமே அரசியலாக்கும் எதிர்க் கட்சிகளின் மத்தியில் மாநில கவுன்சில் அமைத்து விவாதித்தால் மட்டும் கருத்தொற்றுமை வந்து விடுமா?

வரதராஜன்: மாநில முதல்வர்களின் ஆலோசனை என்பது ஒரு சிபாரிசுதான். ஆனால் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் அமையும் மாநில கவுன்ஸிலின் (Inter State Council) சிபாரிசுகள் கட்டாயம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவை!

ஜெயந்தி: மாநில முதல்வர்களின் கருத்தைப் பிரதமர் ஏற்றுக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறார். இன்னமும் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பிருக்கிறது. ஏனென்றால் வரும் பாராளுமன்றத் தொடரில்தான் பஞ்சாயத் சட்டம் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

வரதராஜன்: முதல்வர்கள் மாநாட்டிலேயே இந்தச் சட்டத் திருத்தம் தேவைதானா என்ற ஐயப்பாடு எழுப்பப்பட்டது. ஆனால் 'இறுதி முடிவு நான்தான் எடுப்பேன்' என்ற பிடிவாதத்துடன் வெறும் சம்பிரதாயத்துக்காகத்தான் விவாதங்கள் நடக்கின்றன. பல எதிர்க்கட்சி முதல்வர்கள் இந்த மசோதாவைப் பற்றி **Point by point** பேசி இருக்கிறார்கள். அந்தப் பேச்சுக்களில் முரட்டுத்தனமான அல்லது வரட்டுத்தனமான வாதம் எதுவுமில்லையே. என்ன மாறுதல் செய்ய வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அசோக் மேத்தா தயாரித்த மாதிரி மசோதா (**Model Bill**) அடிப்படையில் நீங்கள் சட்டம் இயற்றத் தயாராக இருக்கிறீர்களா?

ஜெயந்தி: நடப்பது காங்கிரஸ் அரசாங்கம். நாங்கள் உங்கள் அபிப்பிராயங்களைக் கேட்கத்தான் முடியும். ஆனால் முடிவெடுப்பது எங்களிடம்தானே இருக்கிறது. முடிவெடுக்கும் உரிமையை நாங்கள் நிறைவேற்றியே ஆக வேண்டும்.

வரதராஜன்: தேசம் பூராவும், நாட்டிலுள்ள மக்கள் எல்லோருக்கும் பொருந்தக் கூடிய இந்தத் திட்டத்தில் ஒரு தேசிய கருத்தொற்றுமை உருவாக்கினால் சிறப்பாக இருக்குமல்லவா! அது உங்கள் கடமையும் அல்லவா! நிலைமை இப்படி இருக்க நீங்கள் ஒரு மசோதாவை அவசர அவசரமாகத் திணிப்பது எந்த விதத்தில் நியாயம்?

ஜெயந்தி: கருத்தொற்றுமை உண்டு பண்ண வேண்டும். ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இரண்டு வருடங்களாக இது ஏற்படவில்லையே. ஆகையால்தான் மக்களுக்கு விரைவில் நன்மை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் மசோதாவைக் கொண்டு வருகிறோம்.

நிருபர்: அது சரி. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்துக்கு வருவோம். கலெக்டர் மூலமாகப் பஞ்சாயத்துக்கு நிதி கொடுக்கிறீர்கள். இந்த முறை மாநில அரசை ஒதுக்கி விட்டுச் செயல்படுவதாகத்தானே உள்ளது?


ஜெயந்தி: கலெக்டர் இந்த விஷயத்தில் ஒரு போஸ்ட்மேன் போலத்தான். மத்திய அரசு கொடுக்கும் செக்கை அப்படியே பஞ்சாயத்துக்குக் கொடுக்க வேண்டிய வேலைதான் அவருக்கு.

வரதராஜன்: ஏற்கெனவே உள்ள மத்திய அரசின் பல திட்டங்கள், ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி. போன்றவை மாநில அரசு மூலமாகத்தானே செயல்படுகின்றன. அதைப் போல ஜவஹர் திட்டத்தையும் செய்தால் என்ன?

ஜெயந்தி: திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட பணம் நேரடியாக மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற காரணத்துக்காகத்தான் பணம் இந்த முறையில் வழங்கப்படுகிறது. பஞ்சாயத்துத் தலைவர் ஊழல் செய்தால் அடுத்த தேர்தலில் மக்கள் அவரை ஓட்டி விடுவார்கள்.

நிருபர்: பஞ்சாயத்துக்களுக்கு நிதி.

ஏன் கவலைப்படறீங்க?



கொடுக்கும் அதிகாரம் உங்களிடம் இருந்தால் தலைவர்கள் எல்லாம் டில்லிக்குத் தானே காவடி தூக்க வேண்டும்?

ஜெயந்தி: அது தேவையே இல்லை. வறட்சிப் பகுதி, வெள்ளப் பகுதி அல்லது ஆதிவாசி வசிக்கும் பகுதி மற்றும் மக்களின் பின்தங்கிய நிலை போன்றவற்றைக் கவனித்து நாங்கள் நிதியைப் பகிர்ந்து அளிப்போம்.

வரதராஜன்: இந்த விஷயங்களை மாநில அரசு இன்னும் நன்றாகக் கணித்துச் செய்யலாம் அல்லவா? பஞ்சாயத்துக்கு நிதி ஒதுக்கும் அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக் கொள்வது அதிகாரக் குவியலுக்குத்தான் வழி வகுக்கும்.

ஜெயந்தி: மக்களுக்குத் திட்டங்களின் பலன் நேரடியாகப் போய்ச் சேருவதற்கு இதை விடச் சிறந்த வழி ஒன்று சொல்லுங்களேன.

வரதராஜன்: ஜனநாயகம் என்னும் கூரையைத் தாங்கும் தூண்களில் மாநில அரசும் ஒன்று என்று நீங்கள் நினைத்தால் இந்த ரீதியில் செயல்பட மாட்டீர்கள்.

ஜெயந்தி: பஞ்சாயத்தையும் அது போலத்தானே நினைக்கணும்? ஆனால் நீங்கள் பஞ்சாயத்தை மாநில அரசின் கீழ்க் கொண்டு வர வேண்டும் என்று சொல்கிறீர்கள்.

வரதராஜன்: மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்லும் போது கூட வலுவான மத்திய அரசு வேண்டும் என்றுதான் எண்ணுகிறோம். அதே போல் வலுவான மாநில அரசு வேண்டும் என்று நினைக்கும் போது உள்ளாட்சிகளின் உரிமைகளை மாநில அரசுகள் மதித்துச் செயல்படுவதுதான் உண்மையான ஜனநாயகமாக இருக்க முடியும். நேரு காலத்திலிருந்து செயல்பட்டு வரும் இந்த முறையை மாற்ற வேண்டிய அவசியமென்ன? ''ராஜீவ் காந்தியின் பணம் உனக்கு நேரடியாக வருகிறது'' என்று தேர்தல் நேரத்தில் மக்களிடம் சொல்லி வோட்டுக் கேட்பதற்காகவா?

ஜெயந்தி: தேர்தல் நடக்கும் வருடத்தில் மக்களுக்கு நன்மை செய்யக் கூடாது என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா என்ன? பஞ்சாயத்து ராஜ் மசோதாவின் ஆரம்பக் கட்டப் பணிகள் 1987லேயே ஆரம்பமாகி விட்டன. அது ஒருபுறமிருக்க, இந்தச் சட்டம் மக்களுக்குப் பிடிக்கா விட்டால் தேர்தலில் காங்கிரஸுக்கு வோட்டுப் போடாமல் இருக்கப் போகிறார்கள். நஷ்டம் எங்களுக்குத்தானே!


வரதராஜன்: வோட்டு அறுவடை காங்கிரஸுக்கு லாபகரமாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் செயல்படுகிறீர்கள் என்பதுதானே எங்கள் குற்றச்சாட்டு!

ஜெயந்தி: மக்களின் தீர்ப்பு எப்படி இருக்கிறது பார்ப்போமே!


வரதராஜன்: மக்கள் ஏமாற மாட்டார்கள்!

ஜெயந்தி: அப்படித்தான் நாங்களும் உறுதியாக நம்புகிறோம்!

உரையாடல் தொகுப்பு: **ப்ரியன்**
மேலட்டை வண்ணப்படம்,
இதர படங்கள்: **கே. வி. ஆனந்த்**



ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



உங்களுக்கும் உங்களது முன்னேற்றத் திற்கும் இடையில் இப்பொழுது உள்ள தூரம் ஒரு போஸ்ட் கார்டு தான் என்று நாங்கள் கூறினால் அது சற்று மிகையாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுதான்.

நீங்கள் வாழ்க்கையில் முன்னேறு வதற்கு ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மை ஒரு தடை யாக இருந்திருந்தால்........

மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசும் போது அதை ஓரளவு புரிந்து கொண் டும், அதற்கு ஆங்கிலத்திலேயே பதில ளிக்க முடியவில்லையே என்ற குறை உங்களிடம் குடி கொண்டிருந்தால்,

பல புத்தகங்களைப் படித்தும் ஆங் கிலத்தில் பேச முடியவில்லையே என்ற சலிப்பு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்,

நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற் றத்தை இப்பொழுது அடைய ஒரே ஒரு போஸ்ட்கார்டுபோதும்...ஆமாம்!

ஆங்கிலத்தில் இலக்கணப் பிழை யின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும், தயக்க மின்றி சரளமாகப் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்று போற்றப்படும் விவேகானந்தா கல்வி நிலையத் திற்கு இன்றே அனுப்புங்கள்.

நீங்கள் மேற்கொள்ள வேண்டிய பயிற்சியைப் பற்றியும் மற்ற தகவல் களையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

வீட்டிலிருந்த படியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இந்த எளிய பயிற்சி முறையை நீங்கள் மேற் கொள்ளலாம்.

"நேர்முகப்பயிற்சியும் உண்டு."

என்ன?.....எங்கே கிளம்பி விட்டீர் கள்? போஸ்ட் கார்டு வாங்கத்தானே?

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி துவங்கிவிட்டது.

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி

விவேகானந்தா கல்வி நிலையம்
9, மேட்லி ரோடு,
தி. நகர், சென்னை - 17.


NAGA


ஒரு வழியா குழி தோண்டிப் புதைச்சுட்டேன். இனிமே நிம்மதி தான்!
போஃபர்ஸ்
தணிக்கை அதிகாரி கண்டனம்
(ருத்திராட்ச) புலி
தமிழ்த்தலைவர்கள் படுகொலை
பேச்சு வார்த்தை
பிரேமதாச
வீரப்பன்



கல்கி

1989 ஜூலை 30
மலர் 47 இதழ் 52
சுக்ல ஆடி 15



சூப்பர் பல்டி!

திருநாவுக்கரசு, காளிமுத்து, எஸ். டி. எஸ். போன்ற பலரும் முன்னர் ஜெயலலிதாவை ஏசியதையெல்லாம் மென்று முழுங்கிவிட்டு அவரிடமே போய்ச் சரணாகதி அடைந்திருக்கும்போது, தாம் மட்டும் தயங்குவானேன் என்ற எண்ணத்தில் வீரப்பனும் ஒரு சூப்பர் பல்டி அடித்து, 'ஜெ'யின் பாதாரவிந்தங்களில் விழுந்திருக்கிறார். இதற்குக் 'காலத்தின் கட்டாயம்' என்ற ஓர் விளக்கத்தையும் தந்திருக்கிறார். ''காலத்தின் கட்டாயம்''; ''போகப் போகத் தெரியும்'' என்பன எல்லாம் அரசியல்வாதிகளுக்கு அவ்வப்போது கைகொடுக்கும் வசதியான நழுவல் வார்த்தைகளே! என்றாலும் கூட்டுப் பொதுக் காரியதரிசி என்ற பதவியையும், கட்சியில் இரண்டாவது இடத்தையும் பெற்றது வீரப்பனுக்கு வெற்றியே. இதனால் மற்றவர்களுக்கு எரிச்சல் ஏற்பட்டாலும் கட்சியிலிருந்து கோபித்துக் கொண்டு அவர்கள் இனி விலக முடியாது. அப்படி விலகினால் ஏற்கெனவே கேலிப் பொருள்களாகியுள்ள அவர்கள், முன்னிலும் மக்கள் பார்வையில் மதிப்பிழந்தவர்களாவார்கள்.

தம்மைத் தூற்றியவர்கள் எல்லாரையும் ஒன்று, அரசியலையே துறந்து ஒதுங்கச் செய்திருக்கிறார்; அல்லது தம்மையே தலைவியாக ஏற்கும்படியான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறார் ஜெயலலிதா. இது அவருக்கு ஒரு மகத்தான வெற்றி என்பதில் ஐயமில்லை. இதன் மூலம் அவர், அ. தி. மு. க. என்று ஒரே ஒரு கட்சிதான் இருக்க முடியும் என்றும், அதற்கு ஒரே ஒரு தலைவிதான் இருக்க முடியும் என்றும், அது ஜெயலலிதாவாகத்தான் இருக்க முடியும் என்றும் நிரூபித்திருக்கிறார். ஜெயலலிதாதான் எல்லாம்; மற்றவர்கள் பூஜ்யம்தான்; மக்கள் அ. தி. மு. க. வுக்கு வோட்டுப் போட்டால் அது ஜெயலலிதாவுக்காகத்தானேயன்றி இதர தலைவர்களுக்காக அல்ல என்பதெல்லாம் உறுதிப்பட்டுப் போயின.

இவ்வாறு தமது தன்னிகரற்ற செல்வாக்கைக் கட்சிக்குள் நிலைநாட்டிக் கொண்டிருக்கும் ஜெயலலிதா, அடுத்தாற்போல் ஆட்சியைக் கைப்பற்றுவதையே நோக்கமாகக் கொள்வார் என்பதில் சந்தேகமில்லை. தி. மு. க. வுக்கு நிஜமான எதிர்ப்பு, பலமான எதிர்ப்பு இப்போது தோன்றிவிட்டது. ஜெ தமது திட்டப்படி நாடாளுமன்றத் தேர்தலுக்குக் காங்கிரஸுடன் கூட்டணி அமைத்தால், அந்தக் கூட்டணி, பெருவாரியான இடங்களை வெல்லும் என்பதைப் பகுத்தறிவுள்ள, கூட்டல் — கழித்தல் தெரிந்த எவரும் ஊகிக்கலாம். ராஜீவ் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்று தில்லியில் ஆட்சி அமைப்பாரா என்பதுதான் சந்தேகம். தலைநகரில் தேசிய முன்னணி ஆட்சி அமைந்தால் இங்கு கருணாநிதி அமைச்சரவை தப்பிக்கும். மாறாக காங்கிரஸ் ஆட்சியே மத்தியில் மீண்டும் உருவானால், கருணாநிதி அமைச்சரவை மக்களின் ஆதரவை இழந்து விட்டதாகக் காரணம் காட்டிக் கலைக்கப்படுவது நிச்சயம். மீண்டும் கவர்னர் ஆட்சி, சட்டமன்றத் தேர்தல் என்று நடந்து காங்கிரஸின் ஆதரவுடன் இங்கு அ. தி. மு. க. அமைச்சரவை உருவாகக் கூடும்.

ஆகமொத்தம், இன்று ஒரு பலமான எதிர்க்கட்சி தோன்றியிருப்பதால், தி. மு. க. அரசு, முன்னெப்போதையும்விட விழிப்புணர்ச்சியுடனும் நேர்மை தவறாமலும் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டும் செயல்பட்டு, நற்பெயர் வாங்குவது இன்றியமையாததாகிறது. மிகக் குறைந்த அவகாசத்தில் மக்களின் மதிப்பில் மிக அதிகமாக உயர வேண்டிய சோதனையான கால கட்டத்தில் தி. மு. க. ஆட்சி இன்று இருக்கிறது. இதனை வெற்றிகரமாகச் சாதித்தால்தான் தமிழ்நாட்டில் தேசிய முன்னணிக்கு நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்புப் பெருகும். நாடாளுமன்றத் தேர்தல்தானே, நம்மைப் பாதிக்கவா போகிறது? என்று தி. மு. க. ஆட்சி அலட்சியமாகக் கருத முடியாது.

இதற்கு மறுபுறமாக அ. தி. மு. க. வும் மக்கள் மதிப்பில் மேலும் உயர, சிறந்த முறையில் எதிர்ப்புப் பணியாற்ற வேண்டும். இந்நாள் வரை இவ்விஷயத்தில் அதன் போக்கு திருப்திகரமாக இல்லை. அற்பத்தனமான குற்றச்சாட்டுக்களைத் தவிர்த்து, பொது வாழ்க்கைக்கு இடையூறு விளைவிக்கும் போராட்டங்களை ஒதுக்கி, சத்தான விஷயங்களில் கவனத்தைத் திருப்ப வேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.




• அழகிய கடற்கரையை அசிங்கப்படுத்தலாமா?

ஆழ்கடலுக்கும் ஆபத்து!

பம்பாய் ப்ரீச் காண்டி பகுதியில் கடல் நீரைப் பயன்படுத்தும் ஒரு நீச்சல் குளத்தில் திடீரென்று எண்ணெய் கலந்து விட்டது! இது எப்படி நேர்ந்தது? சிண்டைப் பிய்த்துக் கொண்டு ஆராய்ந்ததில் ஜூன் 28 அன்று மால்டா நாட்டு எண்ணெய் டாங்கர் கப்பல் எம்.வி. பப்பியும் பிரிட்டனின் எம்.வி. வோர்ல்ட் குவின்ஸும் மோதிக் கொண்ட போது எண்ணெய் டாங்கரில் மூன்று பெரிய ஓட்டைகள் ஏற்பட்டு அதன் வழியே வெளியேறிய நாலாயிரம் டன் எண்ணெயின் ஒரு பகுதிதான் அது என்று கண்டு பிடித்தனர் கடலோரக் காவல்படையினர்.

விபத்து நிகழ்ந்து கிட்டத்தட்ட இருபத்து நாலு மணி நேரத்துக்கு எம்.வி. பப்பி எந்த உதவியும் கேட்கவில்லை. தான் சுமந்து வந்த தொழிற்சாலை உலைக்களனுக்கான எரிபொருள் எண்ணெய் சிந்தியிருந்த இடத்திலிருந்து அகன்று போய் விட முயற்சி செய்தது. பிறகே உதவி கோரி ரேடியோ தகவல் அனுப்பியது.

எம். வி. பப்பி இப்படி நழுவியதற்குக் காரணம், எண்ணெய் கொட்டுவதால் உண்டாகும் தீய விளைவுகளுக்கு அந்தக் கப்பலின் சொந்தக்காரர்கள் பொறுப்பேற்க நேரிடும் என்ற பயத்தின் விளைவே.



• எண்ணெய் டாங்கர் கப்பல்

அதிர்ஷ்டவசமாக, நாலாயிரம் டன் எண்ணெயையும் ஒரே இடத்தில் தேங்க விடாமல் காற்றும் கடலின் சுழல்களும் சிதறடித்து விட்டன. ஒரு பகுதி ஆவியாகி விட்டதோடு, கணிசமான அளவு எண்ணெய் கடலின் கொந்தளிப்பால் emulsify ஆகிவிட்டது. பம்பாய்க்கு வந்து சேர்ந்தது ஒரு சிறு பகுதியே. கொட்டிய எண்ணெய் முழுவதும் ஒரு சேர மிதந்து கடலோர நிலப் பகுதிக்கு வந்திருந்தால் கடல்வாழ்ப் பிராணிகளுக்குப் பேராபத்து நேர்ந்திருக்கும். கடற்கரை முழுதும் பாழாகித் துர்நாற்றம் வீசியிருக்கும்.

எண்ணெயினால் எப்படிக் கடற்கரை பாழாகும்? கடல்வாழ் உயிர்களுக்கு ஏன் ஆபத்து? 'எண்ணெயைத் தொட்டுத் தண்ணியைத் தொட்ட மாதிரி இருக்கான்! ஒண்ணும் சுகமில்லை...' என்று உள்ளன் போடும் ஈடுபாடோடும் பழகாதவர்களைப் பற்றிச் சொல்வதுண்டு அல்லவா? எண்ணெயின் இந்த ஒட்டாத, தண்ணீருடன் கலக்காத தன்மையினால்தான் வினையே வருகிறது.

தண்ணீரின் மேல் மிதக்கும் எண்ணெய் ஒரு திரை போல் அதனை மூடிக் கொள்வதால் கடலுக்குள் (பிராண வாயு) ஆக்ஸிஜனை நம்பிக் கடல் படுகையில் வாழும் தாவர, மிருக இனங்கள் மடிந்து போகின்றன. ஆக்ஸிஜன் இல்லாமல் பெருகக்கூடிய anaerobic உயிரினங்கள் பெருகுகின்றன. (உதாரணமாக — (methane bacteria) இவற்றால் சல்ஃபர், ஹைட்ரஜன் சல்ஃபைடாக மாற்றப்படுகிறது. துர்நாற்றம் வீசுகிறது.

மனிதனின் அஜாக்கிரதையால் ஆழ்கடலே பாதிக்கப்பட்டு, இயற்கைச் சமநிலைக்கு உதவும் நுண்ணிய உயிரினங்கள் அழிந்து விடும் பேராபத்து நம்மை எப்போதும் அச்சுறுத்திக் கொண்டே இருக்கிறது என்பதற்கு மற்றும் ஓர் உதாரணம் தான் இச் சம்பவம்.

தகவல்கள் உதவி:

பேராசிரியர் சி. ஏ. சாஸ்திரி.

தொகுப்பு: எஸ். ஆர்.

இன்று மன்னர்கள்!

—மெரீனா

தியாகராய நகர் கோபதி நாராயண சுவாமி சாலையில், ஜீவா(னந்தம்) பூங்காவுக்கும் பனகல் பூங்காவுக்கும் இடையில், பெண்கள் ஹாஸ்டலுக்கு எதிர்ப்புறமுள்ள நடைபாதையில் வளர்ந்து கொண்டிருக்கும் மரம் ஒன்று குடையாக விரிந்திருக்க, அதன் கீழ் இந் நாட்டு மன்னர் ஒருவர் அமர்ந்திருக்கிறார்! அவ்வப்போது கால்களை நீட்டிப் படுத்துக் கொண்டும் இருப்பார். சில சமயம் கண்கள் இறந்திருக்கும்; சில சமயம் அவை மூடியிருக்கும்.

இந் நாட்டு மன்னர்களில் ஒருவராயிருந்தும், ஓட்டு இல்லாத மன்னர் அவர். நாட்டு நடப்புக்களில் அவருக்கு அக்கறையில்லை. அவருக்குப் பஞ்சாயத்து ராஜ் வந்தாலும் ஒன்றுதான், வராவிட்டாலும் ஒன்றுதான். எந்தக் கட்சி, யாருடன் கூட்டு சேரப் போகிறது, அவர்கள் சீட்டுகளை எப்படிப் பிரித்துக் கொள்ளப் போகிறார்கள் என்ற கவலையே அவருக்குக் கிடையாது. இந்திய அமைதிப்படை ஸ்ரீலங்காவில் தொடர்ந்து இருக்க வேண்டுமா அல்லது ஜூலை 29—ல் இந்திய மண்ணுக்குத் திரும்பி விட வேண்டுமா என்பது பற்றி அவருக்கு எவ்விதக் கருத்தும் இல்லை. அவர் பத்திரிகைகளைப் படிப்பதில்லை. அரசியல் பேசுவதில்லை. சொல்லப் போனால், யாருடனும் அநாவசியமாகப் பேசுவதில்லை. ஆனால் தமக்குத் தாமே பேசிக் கொள்வார்.

மரக் கிளையில் இரண்டு அழுக்கு மூட்டைகளும், இரண்டு சைக்கிள் டயர்களும் தொங்கிக் கொண்டிருக்கும். (இதற்கு முன்பு அம் மரத்தடியில் சைக்கிள் ஷாப் நடத்தியவருக்குச் சொந்தமோ?) மரத்தினடியில் இரண்டு மூன்று மூட்டைகள். அதில் ஒன்று அவரது தலையணை!

நாலடிக்கு நாலடி விஸ்தீரணமுள்ள ராஜ்யத்தின் ஏக சக்ராதிபதி அவர். எதைப் பற்றியும், யாரைப் பற்றியும் லட்சியமில்லாத பார்வை. ஈரமோ, எண்ணெயோ படாத தலைமுடி. கழுவப்படாத முகத்தில், மழிக்கப்படாத தாடி மீசை. மிலிட்டரி பச்சையில், பட்டன் போடப்படாத சட்டை. மிலிட்டரி பேண்ட். காலில் கறுப்பு ஷூ. அவர் அதைக் கழற்றி யாரும் பார்த்ததில்லை. அசப்பில் ரஜினீஷ் சாயல். தலைப்பாகை கட்டினால், அயதுல்லா கோமேனி தான்!

யாரிடமும் எதுவும் கேட்க மாட்டார். ஒரு விதிவிலக்கு உண்டு. தாகமாக இருந்தால், பையிலிருக்கும் வெண் சங்கை கைகளில் ஏந்திக் கொண்டு, பக்கத்தில் இருக்கும் கரும்புச் சாறு வியாபாரியிடம் போய் நிற்பார். (அவர் தம்ளரோ, குவளையோ உபயோகிப்பதில்லை) இரண்டு மூன்று மடக்கு குடித்து விட்டு வந்து விடுவார். பச்சைத் தண்ணீர் கொடுத்தாலும் அவருக்குச் சம்மதமே. டீயை விரும்பிக் குடிக்கிறார் — சிகரெட்டைக் கூட.

பேச்சுக் கொடுத்தால் சில பேரிடம் பேசுகிறார்; சில பேரிடம் மட்டுமே தின்பண்டமோ, பணமோ பெற்றுக் கொள்கிறார். வந்தவரைப் பிடிக்கவில்லை என்றால், விரட்டி விடுகிறார்.

நான் பேச்சுக் கொடுத்துப் பார்த்தேன். பேசினார். ஆனால் ஒன்றும் புரியவில்லை. இங்கிலீஷ்தான். 'பெட்ரோலியம்' பற்றி, சூரிய மண்டலம் பற்றி, மேற்கு ஜெர்மனி பற்றி, ஈரான் பற்றி, ஐஸ்ஹவுஸ் போலீஸ் ஸ்டேஷன் பற்றி, நந்தனம் போஸ்டாபீஸ் பற்றி.... மவுண்ட்ரோடு பெட்ரோல் பங்க் பற்றி... ஒருநாள் வாழைப் பழம் கொடுத்தேன். பெற்றுக் கொண்டார். ஒருநாள், ஐம்பது பைசா கொடுத்தேன் — சோதிக்கத்

* வேங்கட மன்னர்





* கோபதி மன்னர்

தான் — வாங்கிப் பக்கத்தில் வைத்துக் கொண்டார்.

இரண்டாவது மன்னர், வேங்கட நாராயணா சாலையில், நடேச முதலியார் பார்க் அருகில், கண்ணதாசன் சாலைத் திருப்பத்தில், நடைபாதை ஓரமாக இருக்கும் மின் பெட்டியில் சாய்ந்தபடி ராஜ்யபாரம் நடத்திக் கொண்டிருக்கிறார்!

கோபதி நாராயணசாமி மன்னரை விட வயதில் சிறியவர். சீரடி சாயிபாபாவைப் போல் தலையில் துணியைக் கட்டிக் கொள்வார். மழித்த முகம். கையில் ஒரு தடி. இவருக்கும் இரண்டு மூன்று அழுக்கு மூட்டைகள்தான் சொத்து.

இவர் யாருடனும் பேச மாட்டார். தமக்குத் தாமும் பேசிக் கொள்ள மாட்டார். முதல் மன்னர், சாலையில் போக்குவரத்தைப் பார்த்தபடி அமர்ந்திருப்பார். இவரோ, எதிர்ப்புறமுள்ள காம்பவுண்டு சுவரைப் பார்த்தபடி அமர்ந்திருப்பார். ஆனால், இருவருக்கும் ஓர் ஒற்றுமை. இவரும் எப்போதும் காலில் ஷூ அணிந்திருப்பார்.

'கோபதி' மன்னர், மத்தியான வேளையில் 'நகர சோதனை'க்குச் சென்று விட்டு, மாலையில் அரண்மனைக்குத் திரும்பி விடுவார். நிச்சயமாக இரவு மரத்தடி உறக்கம் தான்.

'வேங்கட' மன்னரோ, சூரியன் மறைந்தால், அரண்மனையை விட்டுப் புறப்பட்டு விடுவார். மறுநாட் காலை ஆறு மணிக்கெல்லாம் தொழிற் சாலை சங்கொலியைக் கேட்டு பறந்து வரும் பாட்டாளியைப் போல், அவசர அவசரமாக வந்து, மின் பெட்டியின் அருகில் மூட்டைகளை இறக்கி வைப்பார். கைகளில் இரண்டு குச்சிகளை எடுத்து, நாலடி தொலைவிலுள்ள மின் விளக்குக் கம்பத்தைத் தட்டியபடி எதையோ முணுமுணுத்து விட்டு, சிம்மாசனத்தில் வந்து படுத்து விடுவார்! பல மணி நேரம் கண்களை மூடிய சமாதியோக நிலைதான்!

ஒருநாள், இவருக்குப் பேச்சு வருமா, என்ன மொழி பேசுகிறார் என்று அறியும் ஆர்வத்தில்,'நீங்கயாரு,எங்கேருந்துவரீங்க?' என்றேன். கண்களைத் திறந்து பார்த்தார். 'உன் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போயேண்டா'. அவர் பேசவில்லை, கண்கள் பேசின.

எனக்குப் புத்தி வரவில்லை. இன்னொரு நாள் அவர் பற்றற்றவரா என்று சோதிக்க நினைத்து, 'ஐம்பது காசு நாணயத்தை எடுத்து நீட்டினேன். கோபம்' கலந்த அலட்சியப் பார்வையுடன், கையசைத்து என்னை விரட்டிக் கேவலப்படுத்தி விட்டார். எனக்குப் புத்தி வந்தது!

'எந்த நடைபாதையில் எந்த யோகி இருப்பாரோ?' என்று சமாதானமாகி, சொல்லிக் கொண்டு நடந்தாலும் வீடு திரும்பும் போது என் உள்ளத்தில் பொறாமை உணர்வு எட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததை மறுக்க முடியாது!


குஜராத் மாநிலத்தில் 1984இல் முதல் பதிப்பு வெளியானது முதல், பன்னிரண்டு லட்சம் பிரதிகள் விற்றுள்ளது ஒரு புத்தகம். மர்ம நாவலோ இலக்கிய நூலோ அல்ல — 'வைபவ லக்ஷ்மி' என்ற 48 பக்கங்கள் கொண்ட குஜராத்தி நூல். நான்கு வண்ணப்படங்களுடன் லக்ஷ்மி பூஜை செயவதற்கான சடங்குகளும் வழிமுறைகளும் இதில் உள்ளன. அந்தச் சடங்குகளைச் செய்ததால் பலரது வாழ்வில் நிகழ்ந்த 'அற்புதங்கள்' விவரிக்கப்பட்டுள்ளன. தங்கள் வாழ்விலும் செல்வம் கொழிக்கும் என்று நம்பி குஜராத் மக்கள் இந்நூலை வாங்கி வெள்ளிக் கிழமை தோறும் படிக்கிறார்கள்.

இதே புத்தகம் 'மராட்டி' மொழியிலும் வெளியாயிற்று. முதல் பதிப்பான நாலாயிரம் பிரதிகள் கூட இன்னும் விற்றபாடில்லை!

நன்றி: சண்டே.



மாம்பழ ஸீஸன்



நான்கு பேர் அமரக் கூடிய அளவு சின்னதாய் ஓர் அறை! ஒரு டெலிஃபோன்! ஒரு மேஜை — நாற்காலி. ஆளை அசத்து கின்ற பேச்சுத் திறன். — இவற்றை முக்கிய மூலதனமாக வைத்துக் கொண்டு வெள்ளை உடை கசங்காது மாதம் ரூபாய் பத்தாயிரம் வரையிலும் கூடச் சம்பாதிக்கிறார்கள் — பொள்ளாச்சி பழக் கமிஷன் மண்டிக் காரர்கள். வாரச் சந்தைக்கு எதிரில் வரிசை யாய்க் கமிஷன் மண்டிக் கடைகள். கம்பம், தேனி, பெரியகுளம், கோவை மற்றும் பிற ஊர்களிலிருந்து விவசாயிகளே நேரடியாக மேற்படி கமிஷன் மண்டிகளுடன் தொடர்பு கொண்டு, மார்க்கெட் நிலவரங்களை அறிந்து கொண்டு, அதன்படி பழங்களை அறுவடை செய்து அனுப்புகிறார்கள். லாரி யில் வந்து இறங்கும் பழங்களை அப்படியே வேறு லாரியில் ஏற்றி, தேவையான இடங் களுக்கு (கர்நாடகம், கேரளா இப்படி... ரொக்கி உள்ள இடங்களுக்கு) அனுப்பி விடுவதுதான் கமிஷன் மண்டியின் வேலை! விவசாயிகளை அந்த இடத்திலேயே பணம் பட்டுவாடா செய்து வெட்டிவிடுகிறார்கள். விவசாயிகளுக்கு இது ஒரு வகையில் நன்மை தான்.

சீசன் காலங்களில் ஒரு நாளைக்கு நூறு லாரி மாம்பழங்கள் வரை பொள்ளாச்சிக்கு வந்து வெளி ஊர்களுக்குப் போகின்றன. தற்போது சீசன் முடிகின்ற தறுவாயில் ஒரு நாளைக்குச் சுமார் ஆறு, ஏழு லாரி பழங்கள் வந்து வெளியே செல்கின்றன. பொள்ளாச்சி நகராட்சியின் கஜானாவை நிரப்புவதில் இந்தக் கமிஷன் மண்டிகளுக்கு முக்கியப் பங்கு உண்டு!

— பாரதிபாலன்

வண்ணப்படம்: ஸ்ரீஹரி.

''சுயமாகத் தொழில் செய்வது எப்படின்னு புத்தகம் எழுதியதற்காகவா உன்னைக் கைது செய்து உள்ளே தள்ளிவிட்டாங்க? அதுலே என்ன தப்பிருக்கு?''

''கள்ள நோட்டு அடிப்பது எப்படின்னு ஒரு அத்தியாயம் எழுதியிருந்தேன்!''

— குமார்



''வெளிநாடு போனாலும் நான் என் தனித்தன்மையைஎப்பொழுதும்இழக்க விரும்பறதில்லே...''




''ஆரம்பத்திலேயே உன் மனைவியோடு மோதல் ஏற்படாம சமாளிச்சியா, எப்படி?''

''தேனிலவுக்கு அவ பெங்களூர் போகணும்னா; நான் ஊட்டி போகணும்னு சொன்னேன். அப்புறமா தகராறுக்கு இடமில்லாம தனித்தனியா போயிட்டு வந்துட்டோம்!

— குமார்





''பிக்பாக்கெட் அடிக்கிறவங்கள்லாம் டைரியிலே எழுதிக்கறாங்க... நம்ம ஸ்டேட்டஸுக்குக் கம்ப்யூட்டர்லே பதிய வாணாம்...?''




ஆம்ஸ்டர்டாமில் உள்ள போலீஸ் துறை சந்தேகத்திற்குரிய குற்றவாளிகளின் புகைப்படங்கள் மற்றும் கை ரேகைகளைத்தான் இதுவரை பாதுகாத்து வந்தது. இனி, குற்றவாளிகளிடம் ஒரு துணியைக் கொடுத்து, அதனை ஐந்து நிமிடம் முகரச் சொல்லி, வாங்கிக் கொள்ளப் போகிறார்கள். அந்தத் துணியில் உள்ள ரசாயனக் கலவை காரணமாக வாசனையைத் துணி மூன்று வருடங்களுக்கு அப்படியே வைத்திருக்கும். இதன் உதவியுடன் போலீஸ் நாய்கள் மோப்பம் பிடித்து மறுமுறை குற்றம் புரிகிறவர்களை எளிதில் கண்டுபிடித்து விடும்!

— லக்ஷ்மி சிவகுமார்.



''நம்மை எல்லோரும் ''அபூர்வ தம்பதி''ன்னு சொல்றாங்களே, உனக்குப் பெருமையாயில்லை!''



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி.

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542 – இல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க, உணவு வகையினை அநுசரித்து சுமார், முறையே ரூ. 250/- அல்லது 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2500/- அல்லது 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்பவேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D – 76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் – 612 001.

****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு****





பாலகுமாரன்

எழுதும்

இரண்டாவது சூரியன்


உணர்ச்சிமயமான தொடர்கதை...

முழு நீள நாடகம்

நாற்காலி

கதை: கி.ராஜநாராயணன்

நாடக ஆக்கம்: கோமல் சுவாமிநாதன்



கபிலர் விழாவிலும் 'கடி' உண்டு!

தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூரில், இயங்கி வரும் 'பண்பாட்டுக் கழகம்' அண்மையில் 'கபிலர் விழா' நடத்தியது. அந்த இலக்கிய விழா சொற்பொழிவுகளில் ரசித்தவற்றுள் சில:



மேடைப் பேச்சில் அனுபவமில்லாதவர், வியர்க்க விறுவிறுக்க:

"உங்கள் அனைவரையும் வரவேர்க்கிறேன்!"



மன்னன்: புலவரே! உம் பாடலை மெச்சினோம். இந்தாருங்கள், பரிசாக ஒரு குதிரை.

(மறுநாள் குதிரை இறந்துவிட, மன்னரிடம் போனார் புலவர்): "மன்னா! நேற்று பரிசாகப் பெற்றேன். இன்று பரி சாகப் பெற்றேன்."



டாக்டர், தம் நண்பருக்குப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியைச் சுற்றிக் காட்டிக்கொண்டே வரும்போது...

நண்பர்: இவர் ஏன் ரோஸி ரோஸி என்று ஓலமிடுகிறார்?

டாக்டர்: இவர் ரோஸியைக் காதலித்து ஏமாந்து போனவர்.

(அடுத்த அறையில்)

நண்பர்: இவரும் ஏன் ரோஸி என்று ஓலமிடுகிறார்?

டாக்டர்: இவர் ரோஸியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டவர்!



(ஏசுநாதர் பேசிய கூட்டத்தில்):

ஏழை: ஐயா! என்னிடம் இந்த இரண்டு நாணயங்கள் தவிர, தானம் செய்ய வேறு எதுவுமில்லை.

பணக்காரர்கள் இருவர்: "ச்! அல்பம்! இரண்டே இரண்டு நாணயம் தர்மம் செய்கிறானே, இந்தப் பரதேசி! நாம் நூறு நாணயம் தர்மம் செய்திருக்கிறோம்!"

ஏசுநாதர் (இதைக் கவனித்து விட்டு): "பணக்காரர்களே! நீங்கள் போட்ட நூறு நாணயம் உங்கள் பெரும் சொத்தில் மிக மிகச் சிறு பகுதி. ஆனால் இந்த ஏழையின் மொத்தச் சொத்தே அந்த இரண்டு நாணயங்கள்தான். உங்களை விடத் தயாளன் அவன்தான்!"



மனைவி: "வீட்டில் அரிசியில்லை; பருப்பு இல்லை; மிளகாய் இல்லை; உப்பு இல்லை..."

கணவன்: "சீச்சீ! என்ன எப்போது பார்த்தாலும் இல்லை பாட்டுத்தானா? இருக்கிறது என்கிற வார்த்தையே உன் வாயில் வராதா?

(மறுநாள்)

மனைவி: "இதோ பாருங்க! அரிசிப் பானை காலியாய் இருக்கிறது; பருப்புப் பானை காலியாய் இருக்கிறது; புளிப் பானை காலியாய் இருக்கிறது, உப்புப் பானை காலி...."



(கறுத்த நிறமுடைய புலவர் மன்னரைப் பாடப் போன போது):

மன்னர்: "புலவரே! நீர் அண்டங் காக்கை."

புலவர்: "மன்னரே! நான் இல்லை, நீர்தான் உண்மையில் அண்டங் காக்கை. நீர்தானே அண்டமாகிய இந்த உலகைக் காப்பவர்!"

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி.

தலைவர் அய்யாவு!

தேசிய கட்சியின் மாநிலத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காகத் தலைநகரிலிருந்து கண்காணிப்பாளராக அனுப்பப்பட்டிருந்த பக்கோரா பகதூர் மிக நொந்து போய்த் திரும்பியிருந்தார். நெற்றி, தாடை, கைகால், இடுப்பு எல்லாம் பிளாஸ்திரியும்பேண்டேஜுமாக இருந்தவரைப் பார்த்து அதிர்ந்தார் தேசியத் தலைவர்.

"என்ன, வர்ற வழியிலே வழக்கம் போல ஆகிற ரயில் விபத்துலமாட்டிக்கிட்டீங்களா?"

"இல்லை! இந்தத் தடவை அதிசயமா ரயில் விபத்து இல்லாம கொண்டு வந்து சேர்த்துடுச்சு. போன இடத்திலேதான் அடிச்சு நொறுக்கிட்டானுங்க. என் உடம்பிலே எண்ணிப் பாருங்க. இருநூறு அடி இருக்கும்."

"அது என்ன இருநூறு அடி கணக்கு?"

"நம்ம கட்சி உறுப்பினர்கள் அங்கே இருநூறு பேரு இருக்காங்க...! ஒவ்வொருத்தரையா தங்களோட அபிப்பிராயங்களைச் சொல்லச் சொன்னேன். சொல்



விக்கிட்டே வந்தவங்க, திடீர்னு ஒருத்தரை ஒருத்தர் அடிச்சிக்கிட்டாங்க. அந்த ஊர் சட்டசபையிலே அடிச்சிக்கிற மாதிரி மைக், பேப்பர் வெயிட், செருப்பு, நாற்காலி எல்லாம் பறந்து, கண்ணாடி உடைஞ்சு, வேஷ்டி கிழிஞ்சு நாஸ்தி பண்ணிட்டாங்க. அப்புறம் என்ன நினைச்சாங்களோ எல்லாரும் க்யூவிலே வந்து ஆளாளுக்கு என்னை ஓர் அடி அடிச்சிட்டுப் போனாங்க!''

''கேவலம் இருநூறு பேர் இருந்துக்கிட்டா இந்த அட்டகாசம் பண்றாங்க?''

''இருநூறு பேர்தான். ஆனால் முந்நூறு கோஷ்டி இருக்கே?''

''முந்நூறு கோஷ்டியா?''

''ஆளாளுக்குத் தனித்தனியா ஒரு கோஷ்டி. அப்புறம் அவங்களுக்குள்ளேயே ரெண்டு பேர் கோஷ்டி மூன்று பேர் கோஷ்டி இப்படி டபிள் கேம், ட்ரிபிள் கேம்னு சில பேர் பத்து கேம்கூட ஆடறாஙுங்க.... எல்லாமே ஒரு கட்டத்திலே ஏதாவது பதவியிலே இருந்திருக்காங்க. இப்ப தலைவர் பதவிக்கு ஆசைப்படறாங்க. இருநூறு பேரையும் நீங்க தலைவராக்கினாத் தான் அவங்க எல்லாரையும் திருப்திப் படுத்த முடியும்!''

''இந்தச் சண்டையை இப்படியே விட்டோம்னா மாதிலம் மாதிலமா பரவி சென்டருக்கும் வந்துடும். இதைத் தடுக்கணும்; அதே சமயம் அடிச்சிக்கிறவனுக்கும் பாடம் கற்பிக்கணும். ஒரு திட்டம் வைச்சிருக்கேன். மாநில உறுப்பினர் லிஸ்டை எடுத்து அடிமட்டத் தொண்டன் யாருன்னு பாருங்க.''

பக்கோரா பகதூர் லிஸ்ட் எடுத்து இருநூறாவது பேரைப் படித்தார். ''போஸ்டர் அய்யாவு!''

''யார் அது?''

''போஸ்டர் ஒட்டற பஞ்சாயத்து ராஜா அதாவது சாமானிய பிரஜைன்னு சொல்ல வர்றேன்.''

''இவன் எப்படிக் கட்சிக்குள்ளே வந்தான்?''

''இவன் போஸ்டர் ஒட்டினதுக்கும் கொடி கட்டினதுக்கும் தர வேண்டிய பணத்தைப் பொருளாளர் அமுக்கிட்டாரு. பணத்துக்குப் பதிலா உறுப்பினர் அட்டையைக் கொடுத்துட்டுச் சரியாப் போயிடுச்சின்னுட்டாரு!''

''இனிமேல் இவன்தான் நம்ம கட்சியோட மாநிலத் தலைவன்!''

அதிர்ந்தார் பக்கோரா பகதூர். ''அடிச்சிக்கிறவங்களுக்கு இது சரியான அடியாத்தான் இருக்கும். ஆனா இதனாலேயே அங்கே நம்ம கட்சி செத்துட்டா?''

''இப்ப மட்டும் என்ன உயிரோடவா இருக்கு? இப்படி ஏதாவது தடாலடி பண்ணாலாவது உயிர் வருதான்னு பார்க்கலாம்... நாளைக்கே அந்த அய்யாவுவை ஃப்ளைட்லே வரவழைச்சு ஆர்டரைக் கொடுத்தனுப்புங்க'' என்று உத்தரவிட்டார் தலைவர்.

அ. வின்சென்ட்



தலைநகரிலிருந்து வரும் ஃப்ளைட்டுக்காகக் காத்திருந்த சின்ன கூட்டம் பெரிய பந்தா பண்ணிக் கொண்டிருந்தது. கட்சி உறுப்பினர்களுக்கு, ஒரு போஸ்டர் ஒட்டற பய தலைவனா வந்துட்டானே என்ற வருத்தமிருந்தாலும், தங்களுக்கு வேண்டாதவன் தலைவனாக வரவில்லை என்ற சின்னத்தனமான மகிழ்ச்சியில் ஆளுக்கொரு மாலையோடும் கைத்தறித் துண்டோடும் நின்றிருந்தார்கள். அய்யாவுவுடன் போஸ்டர் ஒட்டும் சக தொழிலாளிகள் சிலரும் ஒரேயொரு மாலையுடன் காத்திருந்தார்கள்.

புது மோஸ்தர் போஸ்டரைப் போல் புது தோரணையில் கதர் வேஷ்டி, சட்டை, துண்டு தரித்து லவுஞ்சுக்குள் அய்யாவு வந்தபோது கூட்டம் முஷ்டி உயர்த்தி கோஷ முழக்கமிட்டது. "தலைவர் அய்யாவு... வாழ்க!" அய்யாவு, கைத்தறித் துண்டுகளை வாங்கி, தேசிய தலைவர் பாணியில் போஸ்டர் தொழிலாளிகள் பக்கம் வீசினான்.

அய்யாவு லவுஞ்சிலிருந்து வெளியே காத்திருந்த கட்சியின் காருக்கு நடப்பதற்குள் எல்லா உறுப்பினர்களும் அவன் காதில் தனித்தனியாகக் கிசுகிசுத்தது ஒரே விஷயம்தான். "இந்தப் பயலுங்க பத்தியெல்லாம் உங்ககிட்டே தனியா சொல்லணும் தலைவரே. நாளைக்குக் காலையிலே உங்களை வந்து பார்க்கிறேன்," அய்யாவு உஷாரானான். 'ஆரம்பிச்சுட்டானுங்க. ஒவ்வொருத்தனும் இருநூறு கதை சொல்வான். தாங்காது...' கூட்டத்தைப் பார்த்துச் சொன்னான். "இன்னும் ஒரு மணி நேரத்திலே எல்லாரும் கட்சி ஆபீசுக்கு வந்திடுங்க. கட்சிப் பொதுக்குழுக் கூட்டத்தை நான் பெருக்கியிருக்கேன்... ச்சீ... கூட்டியிருக்கேன்..."

"தலைவரே, இப்பவே மணி ராத்திரி பதினொண்ணு ஆயிடுச்சு. இனிமே போய்..."

"ராத்திரியிலே வேலை பார்த்தா அந்த வேகமே தனிதான். ஒரு டீ சாப்பிட்டுட்டு பீடி அடிச்சிட்டு வந்துடுங்க, தூக்கம் வராது!" என்று காரில் ஏறினான் அய்யாவு.

கோஷங்கள், பட்டாசு வெடிகளோடு கட்சி அலுவலகத்துக்குள் நுழைந்தான் அய்யாவு. நடுநாயகமாக உட்கார்ந்து கொண்டு ஆரம்பித்தான்.

"எல்லாருக்கும் டீயும் பீடியும் ஏற்பாடு பண்ணியிருக்கேன். இந்தச் சிக்கன நடவடிக்கை மூலமாக மிச்சமாகிற காசை என் சின்ன வீடு செட்டப் நிதிக்கு ஒதுக்கியிருக்கேன்!"

"தலைவரே?"

"பேச்சுலே ஸ்டார்டிங் டிரபிள்... கட்சித் தலைவருக்கு ஒரு சின்ன வீடு கட்ட ஒதுக்கியிருக்கேன்... என்னோட, முதல் பணி, உடனே நம்ம கட்சிக்குக் குறைஞ்சது இன்னொரு நூறு பேரையாவது உறுப்பினர் ஆக்கணும்."

"ரெண்டு பேர் வர்றானா பாருங்க. காசு கொடுக்கிறேன் உறுப்பினர் ஆவுங்கய்யான்னு கூடக் கூப்பிட்டுட்டேன். ஒருத்தன் வரணுமே!" அய்யாவுவுக்கு முன் தலைவர் பதவியிலிருந்தவர் சொன்னார்.

"போஸ்டர் ஒட்டுவோர் சங்கத்துலே நூறு பேர் உறுப்பினரா இருக்காங்க. அந்தச் சங்கத்தை நம்ம கட்சியோட இணைச்சிடலாம்."

"இன்னும் நூறு பேருக்கு எங்கே போறது?"

"சினிமாவிலே ஒரு சீன் ரெண்டு சீனுன்னு தலையைக் காட்டினவங்க, குரூப் டான்ஸ்லே ஆடினவங்க இவங்களையெல்லாம் சேர்க்கணும்."

"நம்ம கட்சி தேசியக் கட்சி. தலைநகருக்குத் தெரிஞ்சா ரொம்பக் கோபப்படுவாங்க தலைவரே."

"இந்த ஐடியாவைக் கொடுத்ததே அவுங்கதான்யா!"

அடுத்த நாளே கமலா பாட்டியிலிருந்து பேபி மோகினி வரை நூறு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள். ஒரு குரங்கும் ஒரு பாம்பும் நாங்களும் வரட்டுமா என்று கேட்டன. 'தேர்தல் சமயத்துலே கூப்பிட்டுக்கறேன்' என்று சொல்லி வைத்தான் அய்யாவு.

"எக்ஸ்டிரா நடிகரெல்லாம் சேர்த்தாச்சு. தங்களின் அடுத்த பணி என்ன தலைவரே?"

"போஸ்டர் அடிக்கணும்."

''தேர்தல்கூட எதுவுமில்லையே தலைவரே. இப்ப எதுக்கு போஸ்டர்?''

''புதுசா நான் தலைவராயிருக்கேன் இல்லே, என்னை வாழ்த்த மாட்டீங்களா...? போஸ்டர்லே அச்சடிக்க வேண்டிய விஷயத்தைச் சொல்றேன் கேட்டுக்குங்க. 'இருளில் மூழ்கியிருக்கும் நம் மாநிலத்தை வெயிலில் தூக்கிப் போட எங்கள் கட்சியின் தலைமையேற்றுள்ள மாண்புமிகு அய்யாவு அவர்களுக்கு என் வாழ்த்துக்கள். இப்படிக்கு நடிகர் ராதாகாந்த், கட்சி உறுப்பினர்!' 'ரணகளமாக மாறிப் போன சட்டசபையைப் பினாயில் ஊற்றிக் கழுவித் தூய்மைப்படுத்திட எங்கள் கட்சியின் தலைமையேற்றுள்ள மாண்புமிகு அய்யாவு அவர்களுக்கு என் பாராட்டுக்கள். இப்படிக்கு நடிகை இளையராணி, கட்சி உறுப்பினர்!' இப்படியே நம்ம கட்சியிலே இருக்கிற எல்லா நடிகர் நடிகைகளோட பேர்லேயும் போஸ்டர் அடிச்சுடுங்க. என் பேர் சின்னதா இருந்தாப் போதும். ஆனா நடிகர் பேரு கொட்டை எழுத்திலே இருக்கணும். அதேபோல என் போட்டோ பாஸ்போர்ட் சைஸ் போதும். ஆனா நடிகர் போட்டோ நாலடிக்கு நாலடி, கலர்லே தூள் கிளப்பிடணும்.''

போர்க்காலத் துரிதத்தில் போஸ்டர்கள் அச்சடிக்கப்பட்டு மாநிலம் முழுவதற்கும் அனுப்பப்பட்டன. போஸ்டர் ஒட்டுவதற்காக மாவட்ட வாரியாகச் செயற்குழு உறுப்பினர்கள் அனுப்பப்பட்டனர். தலைநகரில் அய்யாவுவின் தலைமையில் போஸ்டர் ஒட்டும் வைபவம் இரவில் தொடங்கியது. அய்யாவு வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு, துண்டைத் தலைப்பாகையாய்க் கட்டிக் கொண்டு, டீ அடித்துவிட்டு, பீடி பற்ற வைத்துக் கொண்டு, கூழ் பக்கெட்டைத் தூக்கிக் கொண்டு காரில் ஏறினான். 'எவ்வளவு பந்தாவா இருந்தோம். போஸ்டர் ஒட்ட வைச்சுட்டானே?' என்று மற்ற பழைய உறுப்பினர்கள் பொருமினார்கள்.

அடுத்தநாள் காலை பொதுமக்கள் எல்லோரும் இந்தப் போஸ்டர்களை 'ஆ' வென்று வாயைப் பிளந்து கொண்டு பார்த்து ரசித்தார்கள். கும்பல் கும்பலாகக் கூடி நின்று, 'அட இந்தக் கட்சி இன்னும் உயிரோட இருக்கா?' என்று ஆரம்பித்து, 'இந்தக் கட்சி இப்ப நல்லா தெம்பாயிடுச்சு போல இருக்கு' என்று பரபரப்பாகப் பேசினார்கள். கட்சியின் புகழும் அய்யாவுவின் பெயரும் திடீரென்று உயரே எம்பிற்று.

தேசத் தலைநகர் அய்யாவுவை வரவழைத்துப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டது.


''இந்தப் புகழ் மங்கறதுக்குள்ளே மாந்தோப்புத் தொகுதிக்கு இடைத் தேர்தல் வைச்சிடலாமா அய்யாவு?''

''ஒரு ஆறு மாசம் டைம் கொடுங்க. நான் தயாராயிடறேன்'' என்று ஊர் திரும்பிய அய்யாவு மளமளவென்று காரியத்தில் இறங்கினான்.


இளமையாகவும் வடிவாகவும் களையாகவும் நிறமாகவும் இருந்த கட்சி உறுப்பினர் நடிகை பவழமல்லியை மாந்தோப்புத் தொகுதியில் நிறுத்துவது என்று தீர்மானித்தான் அய்யாவு. பவழமல்லி நடித்த இரண்டு மூன்று படங்கள் டி. வி. யில் ஞாயிறு சினிமா, பகல் சினிமா, பின்னிரவு சினிமா, ஒளியும் ஒலியும், திரைமலர், திரை கண்ட பவளம் ஆகியவற்றில் ஒளிபரப்பப்பட்டுப் பவழமல்லியின் முகம் 'ஃப்ரீஸ்' செய்யப்பட்டுச் சில வினாடிகள் காட்டப்பட்டது.

இப்படியாக டி. வி.க்கு 'பவழமல்லி டி. வி.' என்ற செல்லப் பெயர் வந்தடைய, பவழமல்லி மிகப் பிரபலமடைந்தாள்.

ஒரு குளிர்நாளில் அதிகாலையில் உறுப்பினர்கள் கையில் தார் பக்கெட்டும் பிரஷ்ஷும் கொடுத்து மாந்தோப்புத் தொகுதி முழுக்கத் தெருத் தெருவாக வரிசையாக நிற்க வைத்தான் அய்யாவு. வானொலியில் காலை செய்தியில் மாந்தோப்புத் தொகுதியின் இடைத் தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட, உறுப்பினர்கள் மளமளவென்று எல்லாச் சுவர்களிலும் 'ரிசர்வ்ட்' என்று கட்சிப் பெயரை எழுதி அனைத்தையும் ஆக்கிரமித்தார்கள். ஓர் இன்ச் கூடக் கிடைக்காமல் போன எதிர்க்கட்சிகள் 'இது அநியாயம். இது ஜனநாயகத்திற்குப் புறம்பானது' என்று அலறினார்கள். 'ஆமாம்யா,







"எங்க கிராமத்துலே ஆஸ்பத்திரி திறந்து நாலு வருஷமாச்சு; இன்னும் ஒரு நோயாளி கூட வந்ததில்லை!"

"ஆரோக்கியமான கிராமம் போல் இருக்கு!"

"நாசமாப் போச்சு. டாக்டரை அப்பாயிண்ட் பண்ணலே!"

இது ஜனநாயகத்துக்குப் புறம்பானதுதான். இப்ப அதுக்கு என்னாங்கிறே நீ?' என்று அறிக்கை விட்டான் அய்யாவு.

வீடு வீடாக வோட்டுச் சேகரிக்க வந்த பவழமல்லி ஆண்களைத் தனியாக நிறுத்தி அவர்கள் முன் ஒரு டான்ஸ் ஆடினாள். பெண்களைத் தனியாக நிறுத்திப் பக்திரசமாக ஒரு பாட்டுப் பாடினாள். தெருத் தெருவாக மேடைகள் போடப்பட்டன. ஆனால் பொதுக் கூட்டங்கள் கிடையாது. டுயட், பரதம், காபரே, பக்திப் பாட்டு, சென்டிமெண்ட் காட்சிகள், கற்பழிப்பு, சண்டை என்று சகல மசாலாவும் கலந்து நாடகங்கள் நடத்தப்பட்டன.

தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைவரையும் டெபாசிட் இழக்கச் செய்து வெற்றிவாகை சூடினாள் பவழமல்லி.

தேசத் தலைநகர் அய்யாவுவை அழைத்து வெற்றி மாலை அணிவித்தது.

"எப்படியாவது எங்க மாநில அரசைக் கவுத்துடணுங்க."

"ஆட்சி செய்யற கட்சிதான் அறுதிப் பெரும்பான்மையோட இருக்கே? என்ன காரணத்தைக் காட்டிக் கவுக்கறது?"

"காரணத்தை நான் காட்டறேன். நீங்க கவுக்கத் தயாரா இருங்க" என்று கிளம்பினான் அய்யாவு.

சட்டசபை கூடியது. வழக்கம்போல் தினசரி நடவடிக்கைகள் தொடங்கும்முன் சபாநாயகர் நாலடியார் படித்தார்.

பவழமல்லி எழுந்தாள். "சபாநாயகர் நாலடியார் படிப்பது போல், நானும் ஒரு சின்ன டான்ஸ் ஆட அனுமதிக்கப்பட வேண்டும்!"

"ஆமாம், அனுமதிக்கப்பட வேண்டும்" என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பவழமல்லிக்கு வக்காலத்து வாங்கினார்கள்.

"நாலடியார் மனசைத் தெளிவுபடுத்தி நாணயமாகச் செயலாற்றிட உதவும்" என்றார் சபாநாயகர்.

"இதை ஆட்சேபிக்கிறோம். அப்படியென்றால் எங்கள் மனம் தெளிவாகவும் நாணயமாகவும் இல்லை என்கிறீர்களா?" என்றனர் எதிர்க்கட்சியினர்.

"என் நடனம் எல்லோர் மனங்களையும் குளிர்வித்துக் குதூகலமாகப் பணிபுரிந்திட உதவும்" என்றாள் பவழமல்லி.

"நடனமெல்லாம் அனுமதிக்க முடியாது" என்றார் சபாநாயகர்.

ஆளுங்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் இதுகுறித்துத் தீவிரமாக விவாதித்தனர். விவாதம் வழக்கம் போல் கைகலப்பில் முடிந்தது. மைக், நாற்காலி, நாலடியார், அவைக் குறிப்புக்கள் எல்லாம் தூள்.

பவழமல்லியின் நடனத்தைத் தினமும் பார்க்க விருப்பப்பட்ட ஏழு ஆளும் கட்சி உறுப்பினர்கள், அன்று மாலை பத்திரிகைகளில் ஓர் அறிக்கை விட்டார்கள். 'பவழமல்லியின் நியாயமான கோரிக்கையை நிராகரித்ததோடல்லாமல், அராஜகத்திலும் ஈடுபட்டதால் ஆளும் கட்சியைக் கண்டித்து அவர்களுக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொள்கிறோம்.'

அடுத்த நாள் காலை சட்டசபையைக் கலைத்தது தேசத் தலைநகர். 'ஏழு உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்குத் தங்கள் ஆதரவை விலக்கிக் கொண்டார்கள். மேலும் எழுபது உறுப்பினர்கள் தங்கள் ஆதரவை விலக்கிக் கொள்ளவிருந்தபோது பணத்தால் அவர்கள் வாய்கள் அடைக்கப்பட்டுள்ளன. இந்நிலை குதிரை பேரம் நடக்க வழி வகுத்துள்ளது. இதனால் ஆளுங்கட்சிக்குப் பெரும்பான்மை ஆதரவு இல்லை என்று தெளிவாகத் தெரிகிறபடியால் சட்டசபை கலைக்கப்பட்டது!' என்று அறிக்கை விடப்பட்டது.

புதிதாகப் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. கட்சியின் பொதுக் குழுவைக் கூட்டினான் அய்யாவு.

எந்தக் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொள்ளலாம் என்ற விவாதத்தில், முந்தாநாள் பத்தாக உடைந்த கட்சியின் நான்காவது பிரிவோடு கூட்டணியமைக்க வேண்டும் என்று சிலரும், ஆறாவது பிரிவோடு கூட்டணியமைக்க வேண்டும் என்று சிலரும், நேற்று ஆறாக உடைந்த இன்னொரு தேசியக் கட்சியின் மூன்றாவது பிரிவைச் சிலரும், ஐந்தாவது பிரிவைச் சிலரும் ஆதரித்து அபிப்பிராய பேதப்பட்டார்கள்.

இருநூறு சொச்ச இடங்களுக்கு நானூறு உறுப்பினர்களும் தாங்களே வேட்பாளர்களாக நிறுத்தப்பட வேண்டும் என்று ஆனாளுக்குக் கத்தினார்கள்.

பொதுக்குழுக் கூட்டம் போர்க்களம் ஆனது. அடிதடியில் இறங்கியது. கட்சி நானூறாக உடைந்து போனது. நானூறு அடி வாங்கினான் அய்யாவு.

'இந்தக் கட்சிக்கு என்னமோ சாபம் இருக்கு. இது எந்த ஜென்மத்துலேயும் உருப்படாது' என்று தலைநகருக்குக் கடிதம் எழுதி, தன் பதவியை ராஜினாமா செய்தான் அய்யாவு!

பொன்னியின் செல்வன்



அத்தியாயம் 14

வானதியின் சபதம்

திடும் பிரவேசமாக உள்ளே புகுந்த ஆழ்வார்க்கடியானைப் பார்த்துக் குந்தவை "திருமலை! நீ எப்படி இங்கே வந்து முளைத்தாய்? எதற்காக வந்தாய்?" என்று கேட்டாள்.

"அம்மணி! எல்லாம் இந்த ஜோசியருடைய மோசடி வார்த்தையினால்தான்! இன்று காலையில் இவரிடம் 'நான் போகும் காரியம் வெற்றிகரமாக முடியுமா?' என்று கேட்டேன். 'முடியும்' என்று சொன்னார். ஆனால் இந்த இடத்தை விட்டுச் சிறிது தூரம் போகக் கூட முடியவில்லை. காரியம் வெற்றி பெறுவது எப்படி? ஆகையினால்தான் சற்று முன் பழுவேட்டரையர் கூறியதை நான் ஆமோதித்தேன். இவருடைய ஜோதிட சாஸ்திரம் ஏமாற்றமா அல்லது இவர்தான் வேண்டுமென்று ஏமாற்றினாரா என்று கேட்டுத் தெரிந்து கொண்டு போக வந்தேன். பழுவேட்டரையரின் குரலை இங்கே கேட்டதும் இவர் பேரிலே எனக்குச் சந்தேகம் ஊர்ஜிதப்பட்டது. ஆனால் தங்களை இங்கு நான் எதிர் பார்க்கவேயில்லை" என்றான்.

"என்னை நீ எதிர்பார்த்திருக்க முடியாதுதான். நீ எதற்காக வந்தாய்? என்ன காரியம் வெற்றி அடையுமா என்று ஜோதிடரைக் கேட்டாய்? இரகசியம் ஒன்றுமில்லையே?" என்றாள் இளவரசி.

"தங்களுக்குத் தெரிய முடியாத இரகசியம் என்ன இருக்க முடியும்? சக்கரவர்த்தியின் கட்டளைப்படி நேற்றிரவே முதன் மந்திரி என்னை நாகைப்பட்டினத்துக்குப் போகும்படி ஏவினார். இளவரசரைக் கையோடு அழைத்து வருவதற்காகத்தான். வழியில் செம்பியன்மா தேவியைப் பார்த்து அவரிடமும் ஓர் ஓலையைக் கொடுத்துப் போகும்படி ஏவினார்.... தாங்கள் எப்போது தஞ்சையிலிருந்து கிளம்பினீர்கள், தேவி!"

"பொழுது விடிந்து சிறிது நேரத்துக்குப் பிறகு கிளம்பினோம். இதை ஏன் கேட்கிறாய், திருமலை?"

"கொடும்பாளூர்ப் படைகள் தஞ்சைக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டு விட்டனவா என்று தெரிந்து கொள்வதற்காகக் கேட்டேன்....."

"என்ன? என்ன?"

"ஆம், தேவி! தங்களுக்குத் தெரியாதா, என்ன? நேற்றிரவு சக்கரவர்த்தியைப் பார்த்துவிட்டு முதன் மந்திரி அவருடைய மாளிகைக்குத் திரும்பி வந்த போது இரண்டு

அமரர் கல்கி

செய்திகள் காத்திருந்தன. ஒன்றுதான் நாகைப்பட்டினத்திலிருந்து இளவரசர் புறப்பட்டு வருகிறார், பெரும் ஜனக் கூட்டம் புடைசூழ வந்து கொண்டிருக்கிறார் என்பது.....

''அதை நானும் இன்று காலை அறிந்தேன். என் தம்பியை இங்கேயே தடுத்து நிறுத்திக் கொள்வதற்காகவே புறப்பட்டு வந்தேன். இன்னொரு செய்தி என்றாயே, அது என்ன?''

ஆழ்வார்க்கடியான் வானதியைச் சுட்டிக் காட்டி ''அம்மா! இந்தக் கொடும்பாளூர் இளவரசியை எதற்காக அழைத்து வந்தீர்கள்?'' என்று கேட்டான்.

''அவள் எப்போதும் வருவது போல் இப்போதும் வந்தாள்; அழைத்து வந்தேன். எதற்காகக் கேட்டாய்?''

''இரண்டாவது செய்தியை இந்த இளவரசி இருக்கும்போது சொல்லத் தயக்கமாயிருக்கிறது.''

''சொல், திருமலை! இவள் எனக்கு எவ்வளவு அந்தரங்கமானவள் என்பது உனக்குத் தெரியாதா? எனக்குத் தெரியக் கூடியது எதுவும் இவளுக்கும் தெரியலாம்.....''

''ஆனாலும் இந்த இளவரசிக்குச் சம்பந்தப்பட்ட காரியம் அது. தென் திசைச் சேனாதிபதி பூதி விக்கிரம கேசரி ஒரு மாபெரும் சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு தஞ்சைக் கோட்டையை நெருங்கி வந்து கொண்டிருக்கிறார் என்று நேற்றிரவு முதன் மந்திரிக்குச் செய்தி வந்தது. சேநாதிபதியிடமிருந்து ஓர் ஓலையும் முதன் மந்திரிக்கு வந்தது. சக்கரவர்த்தியைத் தஞ்சைக் கோட்டையிலும் சின்ன இளவரசரை ஏதோ ஓர் இரகசிய இடத்திலும் பழுவேட்டரையர்கள் சிறைப்படுத்தி வைத்திருப்பதாக அதில் குற்றம் சாட்டியிருந்தது. பழுவேட்டரையர்கள் தனாதிகாரி பொறுப்பையும் தஞ்சைக் காவல் பொறுப்பையும் உடனே விட்டு நீங்க வேண்டும் என்றும், இளவரசரைக் கொண்டு வந்து ஒப்புவிக்க வேண்டும் என்றும் எழுதியிருந்தது. இல்லாவிட்டால் இன்று மாலைக்குள் தஞ்சைக் கோட்டையைச் சுற்றி முற்றுகை ஆரம்பமாகிவிடும் என்று எழுதியிருந்தது. அம்மணி! தஞ்சைக்குத் தெற்குத் திசையிலும் மேற்குத் திசையிலும் ஏற்கெனவே கொடும்பாளூர்ப் படைகள் நெருங்கி வந்து விட்டனவே? தங்களுக்குத் தெரியாதா?''

''தெரியாது. முதன் மந்திரி இதைப் பற்றி ஒரு வார்த்தையும் என்னிடம் சொல்லவில்லையே?''

''சொல்லியிருந்தால் நீங்கள் ஒருவேளை தஞ்சைக் கோட்டையை விட்டுப் புறப்பட்டிருக்க மாட்டீர்கள். முக்கியமாக, கொடும்பாளூர் இளவரசியை உடனே வெளியேற்றி விட முதன் மந்திரி விரும்பியிருக்கலாம்....''

''அது ஏன்? இவள் அங்கு இருந்தால் என்ன நேர்ந்து விடும்?''

''இந்த இளவரசியைச் சின்னப் பழுவேட்டரையர் ஒருவேளை சிறைப்படுத்தினாலும் படுத்தி விடுவார்.....''

''அவ்வளவு துணிச்சல் அவருக்கு வந்து விடுமா? மெய்யாகவே இதை நீ சொல்கிறாயா?''

''ஆம், தேவி! மேலும் தென்திசைச் சேநாதிபதி சொல்லி அனுப்பிய செய்தியைக் கேட்டால் தாங்களே அறிந்து கொள்வீர்கள்....''

''என்ன? மேலும் என்ன?''

''இளவரசர் அருள்மொழி வர்மருக்கும் கொடும்பாளூர் இளவரசி வானதி தேவிக்கும் உடனே திருமணம் நடத்தியாக வேண்டும். ஆதித்த கரிகாலர் தமக்கு இராஜ்யம் வேண்டாம் என்று சொல்வதால் அருள்மொழிச் சோழரையே அடுத்த பட்டத்துக்கு உரியவராக யுவராஜ பட்டாபிஷேகம் செய்ய வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார். இதற்கெல்லாம் சம்மதிக்காவிட்டால் தஞ்சைக் கோட்டையை மூன்றே நாளைக்குள் தரைமட்டமாக்கி விடுவேன் என்று சொல்லி அனுப்பியிருக்கிறார். சோழ நாட்டு மக்கள் தம்மை ஆதரிப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்....''

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வானதி, ''அக்கா! என் பெரியப்பாவுக்குத் திடீரென்று பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன?'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

''ஏன், வானதி, அப்படிச் சொல்கிறாய்? வெகு காலமாகப் பலர் மனத்தில் இருந்த விஷயத்தையே உன் பெரியப்பா இப்போது பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். பழுவேட்டரையர்கள் 'மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட வேண்டும்' என்று முயற்சி தொடங்கியிருப்பதினால் கொடும்பாளூர் மன்னரும் திருக்கோவலூர் மலையமானும் இவ்விதம் வெளிப்படையாகச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.....''

''ஆம், தாயே! திருக்கோவலூர் மலையமான்கூட இதற்குள் ஒரு பெரிய சைன்யத்துடன் கடம்பூர் கோட்டைக்குச் சமீபம் வந்திருப்பார். என்னிடம் அவர் பேசியதிலிருந்தே அவ்வாறுதான் ஊகித்தேன். முதன் மந்திரிக்கும் தகவல் கிடைத்திருக்கிறது....''

''ஆனால் இப்போது நான் அறிந்திருக்கும் செய்திகள் அவர்கள் இருவருக்கும் தெரியாது. அவர்கள் இரண்டு பேருடனும் நான் பேசி உள் நாட்டுச் சண்டை நேராமல் தடுத்தாக வேண்டும். எப்படிச் செய்யப் போகிறேனோ, தெரியவில்லை....''

''தாயே! நிலைமை இப்பொழுது மிகவும்

முற்றிப்போய் விட்டது. இனிமேல் ஒரு பெரிய பாரத யுத்தம் நடந்தே தீரும் போலிருக்கிறது......''

''இதைப் பாரத யுத்தம் என்று கூறியது ரொம்ப சரி, திருமலை! இப்போது யுத்தம் மூண்டால் அது ஒரு சகோதரச் சண்டையாகத்தான் இருக்கும். உற்றார் உறவினருக்குள்ளே நிகழும் சர்வ நாச யுத்தமாக இருக்கும். வானதி! இதைக் கேள்! என் பாட்டனாரின் தகப்பனார் புகழ் பெற்ற பராந்தக சக்கரவர்த்தி, பழுவேட்டரையர் குலத்தில் பெண் கொண்டார். அவருடைய மகள், — என் சிறிய பாட்டி, — கொடும்பாளூரின் அரசரை மணந்து கொண்டார். என் பாட்டனார் அரிஞ்சயர் கொடும்பாளூர்ப் பெண்ணை மணந்து கொண்டார். என் தந்தையோ திருக்கோவலூர் மலையமான் மகளை மணந்திருக்கிறார். இப்படி இந்த மூன்று குலமன்னர்களும் எங்கள் குலத்துடன் நெருங்கிய உறவு பூண்டவர்கள். ஒன்றுக்குள் ஒன்றாகக் கலந்து போனவர்கள். ஆயினும் அவர்கள் இப்போது கச்சை கட்டிக் கொண்டு சண்டைக்கு ஆயத்தமாகி வருகிறார்கள்! இந்த விதியை என்னவென்று சொல்கிறது? — இவர்களுடைய சண்டையினால் சோழ ராச்சியமே அழிந்து விடும் போலிருக்கிறது....''

''அக்கா! எனக்கு அதைப் பற்றியெல்லாம் கவலை இல்லை. எப்படியாவது சண்டை போட்டுக் கொண்டு சாகட்டும். ஆனால் இதில் என் பெயரை என் பெரிய தகப்பனார் எதற்காக இழுக்க வேண்டும்? உடனே திரும்பிப் போய் என் பெரியப் பாவைப் பார்த்துச் சண்டை பிடிக்க வேண்டும் என்று தோன்றுகிறது.....''

''அதனால் என்ன பயன், கண்ணே! நீ சொல்வதை உன் பெரிய தகப்பனார் கேட்க மாட்டார். நீயும் நானும் சேர்ந்து மன்றாடினாலும் பயன்படாது. சிறு வயதுப் பெண்களாகிய நாம் சொல்வதை உன் பெரியப் பாவைப் போன்ற கிழவர்கள் கேட்க மாட்டார்கள். என் தம்பி அருள்மொழி வர்மன் மூலமாகத் தான் இந்தச் சண்டை நேராமல் தடுக்க முடியும். திருமலை! நீ போனவன் ஏன் திரும்பி வந்தாய்? அருள்மொழி இப்போது எங்கே இருக்கிறானாம்?''

''திருவாரூரிலிருந்து நேற்றிரவே புறப்பட எண்ணியதாகக் கேள்வி. ஆனால் வழியெல்லாம் ஒரே வெள்ளக் காடாக இருப்பதால் வர முடிய வில்லையாம். நானும் பழையாறைக்கு அப்பால் போகப் பார்த்து முடியாமல் திரும்பி வந்தேன். குடமுருட்டி உடைப்பெடுத்து ஒரே சமுத்திரமாகச் செய்திருக்கிறது....''

''எப்படியும் வெள்ளம் வடியும். அதற்குப் பிறகு அருள்மொழி இந்த வழியாக வந்து தானே ஆகவேண்டும்? அதுவரை காத்திருக்க வேண்டியதுதான். அதற்குள் தஞ்சையில் ஏதேனும் விபரீதம் நேர்ந்து



விடப் போகிறதே என்று கவலையாயிருக்கிறது. திருமலை! நீ உடனே தஞ்சாவூர் திரும்பிப் போய்க் கொடும்பாளூர் மன்னரைக் கண்டு நான் சொல்லும் செய்தியைச் சொல்ல முடியுமா? அருள்மொழி வரும் வரையில் தஞ்சைக் கோட்டையை முற்றுகையிட வேண்டாம் என்று தெரிவிப்பாயா?''

''அக்கா! நானும் இவருடன் தஞ்சைக்குப் போகட்டுமா?''

''நீ இந்த மனிதருடன் போய் என்ன செய்வாய், என் கண்ணே!''

''போய் என் பெரிய தகப்பனாருடன் சண்டை பிடிப்பேன்.....''

''என்னவென்று சண்டை பிடிப்பாய்? உன் பேச்சை அவர் கேட்டுச் சண்டையை நிறுத்தி விடுவாரா?''

''சண்டையை நிறுத்தினால் நிறுத்தட்டும்; நிறுத்தா விட்டால் எப்படியாவது நாசமாகப் போகட்டும். என் பெயரை இதில் இழுக்க வேண்டாம் என்று வற்புறுத்துவேன்.''

''உன் பெயரை இழுக்கிறார்களா? அது எதற்காக?''

''சற்று முன் இந்த வீர வைஷ்ணவர் சொன்னதை நீங்கள் கேட்க வில்லையா, அக்கா?'' என்று வானதி கூறி வெட்கத்தினால் தலை குனிந்தாள்.

''உன்னைப் பற்றி யார் என்ன சொன்னார்கள்? திருமலை! நீ இந்தப் பெண்ணைப் பற்றி என்ன சொன்னாய்?''

''இவரைப் பொன்னியின் செல்வருக்கு மணம் செய்விக்க வேண்டும் என்று சேநாதிபதி வற்புறுத்துவதைப் பற்றிச் சொன்னேன் அல்லவா? அதைக்குறிப்பிடுகிறார்போலிருக்கிறது!''

''வானதி! அதில் என்ன உனக்கு ஆட்சேபம்? பொன்னியின் செல்வனை மணந்து கொள்வதற்கு உனக்குப் பிரியம் இல்லையா?''

''பிரியம் இருக்கிறதோ, இல்லையோ, அதைப் பற்றி இப்போது என்ன பேச்சு? கலியாணத்தையும் பட்டங் கட்டுவதையும் என் பெரிய தந்தை சேர்த்துப் பிரஸ்தாபிப்பதைத் தான், நான் ஆட்சேபிக்கிறேன். என்னைச் சோழ சிம்மாசனத்தில் ஏற்றுவிப்பதற்காகவே என் பெரிய தந்தை இந்தச் சண்டையை ஆரம்பிக்கிறார் என்றல்லவா ஏற்படுகிறது?....''

இச்சமயத்தில் ஒரு பெண்ணின் குரல், ''கொடும்பாளூர் இளவரசிக்குச் சிம்மாசனம் ஏறுவது என்றாலே ரொம்ப வெறுப்புப் போலிருக்கிறது!'' என்று கூறியதைக் கேட்டு எல்லாரும் அக்குரல் வந்த இடத்தைப் பார்த்தார்கள். அங்கே ஓடக்காரப் பெண் பூங்குழலி நின்று கொண்டிருந்தாள்.

குந்தவை அவளை வியப்புடன் பார்த்து, "பெண்ணே! நீ எப்படி இங்கே வந்தாய்? இன்று காலை உன்னையும் ஊமை ராணியையும் காணாமல் நாங்கள் தேடி அலைந்தோமே? உன் அத்தை எங்கே?" என்று கேட்டாள்.

"தேவி! மன்னிக்க வேண்டும்! என் அத்தை என்னைப் பலவந்தமாகப் பழுவூர் அரண்மனையின் சுரங்க வழியாகப் பிடித்து இழுத்துக் கொண்டுவந்து கோட்டைக்கு வெளியே அனுப்பி விட்டாள். நான் தஞ்சை அரண்மனையில் ஒருநாள் இருப்பது கூட என் அத்தைக்குப் பிடிக்க வில்லை! எனக்கும் அரண்மனை வாழ்வு பிடிக்க வில்லை தான்! கொடும்பாளூர் இளவரசிக்குச் சிம்மாசனமே வெறுத்துப் போயிருக்கும் போது, என்னைப் போன்றவர்களுக்கு அரண்மனையில் வசிக்க எப்படிப் பிடிக்கும்?" என்றாள் பூங்குழலி.

"பெண்ணே! எதையோ கேட்டால், எதையோ சொல்லுகிறாயே? உன் சித்தம் சரியான நிலையில் இல்லை போலிருக்கிறதே?" என்றாள் குந்தவை.

"அக்கா! அவள் சித்தம் சரியாகத் தான் இருக்கிறது. என்னைக் கேவலப்படுத்துவதற்காக வேண்டுமென்று இப்படிப் பேசுகிறாள். நான் சோழ நாட்டின் சிம்மாதனம் ஏறி மகாராணி ஆக வேண்டும் என்ற ஆசை கொண்டிருக்கிறேனாம்! அதற்காகத்தான் தங்கள் தம்பியை — பொன்னியின் செல்வரை — மணக்க விரும்புகிறேனாம்! இவளுடைய மனசு எனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது!" என்றாள் வானதி.

"பாம்பின் கால் பாம்பு அறியும் என்ற பழமொழி பொய்யாகப் போகுமா?" என்றாள் பூங்குழலி.

"பெண்களே! நிறுத்துங்கள்! எந்தச் சமயத்தில் என்ன பேசுவது என்றே உங்களுக்குத் தெரியவில்லை. பூங்குழலி! உன் அத்தை இப்போது எங்கே இருக்கிறாள்?" என்று குந்தவை கேட்டாள்.

"பழுவூர் மாளிகையைச் சேர்ந்த பொக்கிஷ நிலவறையில் இருக்கிறாள்...."

"எதற்காக?"

"அங்கே யாரோ ஒரு கொலைகாரன் கையில் வேலுடன் ஒளிந்து கொண்டிருக்கிறான். ஆகா! அவனை நாங்கள் இருவரும் இன்று அதிகாலையில் படுத்தி வைத்த பாட்டை நினைத்தால்! எங்கள் இருவரையும் இரண்டு பெண் பேய்கள் என்று நினைத்துக் கொண்டு அவன் மிரண்டு போய் அங்குமிங்கும் ஓடியதை எண்ணினால்....!" என்று கூறிவிட்டுப் பூங்குழலி கலகலவென்று சிரித்தாள்.



இந்தப் பெண்ணுக்குச் சித்தப் பிரமைதான் என்று குந்தவை மனத்தில் எண்ணிக்கொண்டு, "அப்புறம் சொல்! அவன் யார்? எதற்காக அங்கே ஒளிந்திருக்கிறான்? உங்களுக்கு எப்படி அது தெரிந்தது?" என்று கேட்டாள்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. தேவி! என் அத்தைக்கு வாய் பேச முடியாவிட்டாலும் காது கேளாவிட்டாலும், நமக்கெல்லாம் தெரியாத விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் அதிசயமான சக்தி உண்டு. அரண்மனையில் உள்ள யாரோ ஒருவரைக் கொல்லுவதற்காக அவன் அங்கே காத்திருக்கிறான் என்று எப்படியோ அறிந்து கொண்டாள். தேவி! பத்துத் தலை இராவணேசுவரனுடைய கைகளை உடைப்பதற்கு என் அத்தை பிரயத்தனப் பட்டாளே? அது எதற்கு என்று தெரியுமா?"

"தெரியாது; உனக்குத் தெரிந்தால் உடனே சொல்லு!"

"என் அத்தை இராவணன் கரங்களைத் தகர்க்க முயன்றதைப் பார்த்த போது நீங்கள் எல்லாரும் அவளைப் பிச்சி — பைத்தியக்காரி என்று நினைத்தீர்கள். ஆனால் என் அத்தை பிச்சி அல்ல. அந்த இராவணன் கைகளுக்கு மத்தியிலேதான் பழுவேட்டரையரின் நிலவறைப் பொக்கிஷத்துக்குப் போகும் சுரங்கப் பாதை இருக்கிறது...."

"ஆகா! அப்படியா?" என்று குந்தவை அதிசயித்தாள்.

"ஊமைத்து ஊமை ராணி சக்கரவர்த்தியின் அரண்மனைக்கு எப்படி வந்தாள் என்பதும் இப்போது தெரிகிறது!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"இத்தனை நாளும் அரண்மனையிலிருந்த நமக்கு அப்படி ஒரு சுரங்க வழி இருப்பது தெரியாமற் போயிற்றே? இருக்கட்டும்; நீ ஏன் உடனே அரண்மனைக்கு வந்து எங்களிடம் இதையெல்லாம் சொல்லவில்லை? உன் அத்தையைத் தனியாக விட்டுவிட்டு ஏன் வந்து விட்டாய்?" என்றாள் இளைய பிராட்டி.

"அத்தையின் பிடிவாதந்தான் காரணம். அங்கே ஒளிந்திருப்பவனைத் தான் பார்த்துக் கொள்வதாகச் சொல்லி என்னை வெளியே அனுப்பி விட்டாள்!"

"ஏன்? ஏன்? அதைவிட முக்கியமான காரியம் எதற்காகவாவது உன்னை அனுப்பினாளா?"

"ஆம், அம்மணி!"

"அது என்ன, பெண்ணே!"

"பொன்னியின் செல்வருக்கும் ஏதோ ஆபத்து வரப்போகிறது என்று என்னுடைய அத்தை தன் அதிசய சக்தியினால் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அவர் இருக்குமிடத்துக்குப் போகும்படி என்னை அனுப்பினாள்!"



"ஆகா! பொன்னியின் செல்வன் இருக்குமிடத்தைத் தேடித்தான் நீ போய்க் கொண்டிருந்தாயா? அப்படியானால் ஏன் நின்றுவிட்டாய்?"

"இல்லை, தேவி! உண்மையைச் சொல்லிவிடுகிறேன். அரண்மனைக் காரியங்களில் இனிமேல் தலையிடுவதில்லையென்று தீர்மானித்து விட்டேன். கோடிக் கரைக்குப் போய்க் கொண்டிருந்தேன். வழியில் இந்த வீர வைஷ்ணவன் என்னைச் சந்தித்து இங்கே அழைத்துக் கொண்டு வந்தான்!.... நீங்கள் இருப்பது தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டேன்!"

"பெண்ணே! அரண்மனை உனக்கு ஏன் அவ்வளவு வெறுத்துப் போய் விட்டது? எங்களை ஏன் பிடிக்காமல் போய் விட்டது? உன்னை யார் என்ன செய்து விட்டார்கள்?" என்று இளைய பிராட்டி குந்தவை கேட்டாள்.

"என்னை யாரும் எதுவும் செய்து விடவில்லை. யார் பேரிலும் எனக்குக் குறையும் இல்லை. சில பேருக்குச் சிம்மாதனம் பிடிக்

காமலிருப்பது போல் எனக்கும் அரண்மனை வாழ்வு பிடிக்கவில்லை! அவ்வளவுதான்!'' என்று பூங்குழலி கூறிவிட்டு, வானதியைக் கடைக் கண்ணால் பார்த்து நகைத்தாள்.

அதைக் கவனித்த வானதி ஆவேசம் வந்தவள் போல் ஓர் அடி முன்னால் வந்து கூறினாள்: — ''அக்கா! இவள் மறுபடியும் என்னைத்தான் ஏசிக் காட்டுகிறாள். நான் சொல்கிறேன், கேளுங்கள். தங்கள் திருப் பாதங்களின் ஆணையாகச் சொல்கிறேன். ஆகாசவாணி பூமாதேவி சாட்சியாகச் சபதம் செய்கிறேன். பொன்னியின் செல்வர் இந்தக் கண்டத்திலும் தப்பிப் பிழைத்தாரானால், அவர் மனமுவந்து என்னைக் கரம் பிடித்து மணந்து கொண்டாரானால், அத்தகைய பெரும் பேறு எனக்குக் கிடைத்தானால், தஞ்சை அரண்மனைச் சிம்மாதனத்தில் நான் ஒரு நாளும் உட்காரவே மாட்டேன். இது சத்தியம்! சத்தியம்! சத்தியம்!''

அத்தியாயம் 15

கூரை மிதந்தது!

இச் சந்தர்ப்பத்தில் கொடும்பாளூர் இளவரசி இம்மாதிரி ஒரு சபதத்தைச் செய்வாள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அதைக் கேட்டு அனைவரும் திகைத்துப் போனார்கள்.

இளைய பிராட்டி கோபமும் பரிதாபமும் கலந்து பொங்கிய குரலில், ''பெண்ணே! இது என்ன சபதம்? எதற்காகச் செய்தாய்? இப்படியும் ஒரு மூடத்தனம் உண்டா? ஏதோ வெறி பிடித்தவள் போல அல்லவா பிதற்றி விட்டாய்?'' என்றாள்.

''இல்லை, அக்கா! இல்லை! எனக்கு வெறி இல்லை. என் அறிவு தெளிவாயிருக்கிறது. பல நாளாக யோசித்து என் மனத்திற்குள் முடிவு செய்து வைத்திருந்ததையே இப்போது பலர் அறியக் கூறினேன்'' என்றாள் வானதி.

அதற்குக் குந்தவை மறுமொழி சொல்வதற்குள் பூங்குழலியின் சிரிப்பு அவள் கவனத்தைக் கவர்ந்தது. அந்தப் பெண்ணுக்கு உண்மையிலேயே இப்போது வெறி பிடித்து விட்டது போலத் தோன்றியது. முதலில் கலகல வென்று சிரித்தாள். பிறகு, முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். பின்னர் திடீரென்று அழுகையை நிறுத்தி விட்டு மெல்லிய குரலில்,

''அலைகடலும் ஓய்ந்திருக்க
அகக்கடல்தான் பொங்குவதேன்?''

என்று பாடத் தொடங்கினாள்.

குந்தவை ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, ''இந்த இரண்டு பெண்களும் சேர்ந்து என் மனத்தையும் குழப்பிப் பைத்தியமாக்கி விடுவார்கள் போலிருக்கிறது. திருமலை! இளவரசரைப் பார்க்கப் புறப்பட்டவன் இவளை எதற்காக இங்கு அழைத்துக் கொண்டு திரும்பி வந்தாய்?'' என்று கேட்டாள்.

''தேவி! பொன்னியின் செல்வரைச் சந்திப்பதற்குத்தான் புறப்பட்டுச் சென்றேன். வழியெல்லாம் ஒரே வெள்ளமாயிருந்தபடியால் போக முடியவில்லை. என்னைப் போலவே இவளும் தடைப்பட்டு நின்றதைப் பார்த்தேன். படகு சம்பாதித்துக் கொடுத்தால் தள்ளிக் கொண்டு போய்த் திருவாரூர் சேர்ப்பதாகச் சொன்னாள். அதற்காக ஜோதிடரிடம் திரும்பி வந்தேன். கோவிலுக்குப் பக்கத்தில் தங்கள் ரதப் படகைப் பார்த்ததும் சந்தோஷமாயிற்று. தங்களிடம் கேட்டுப் படகு வாங்கிச் செல்லலாம் என்று நினைத்தேன். ஆனால் பழுவேட்டரையர் ரதத்தோடு படகையும் கொண்டு போய் விட்டார்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''இப்போது என்ன யோசனை செய்கிறாய்? பழுவேட்டரையர் கூறியதையெல்லாம் நீயும் கேட்டுக் கொண்டிருந்தாய் அல்லவா?'' என்றாள் குந்தவை.

''ஆம், தாயே! அதைக் கேட்ட பிறகு இங்கே வீண் போகும் ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாகத் தோன்றுகிறது. இந்தப் பெண் சொல்வதிலிருந்தும் சக்கரவர்த்தியை உண்மையிலேயே பயங்கரமான அபாயம் நெருங்கியிருப்பதாகத் தெரிகிறது. அது முதன் மந்திரிக்குக்கூடத் தெரியாது. ஆகையால் தாங்கள் கொடும்பாளூர் இளவரசியை அழைத்துக் கொண்டு உடனே தஞ்சாவூருக்குச் செல்லுங்கள். கொடும்பாளூர் படைகள் ஒருவேளை கோட்டையை முற்றுகையிட்டிருந்தால் தங்களைத் தவிர யாராலும் அப்படைகளைத் தாண்டிக்கொண்டு போக முடியாது. வானதி தேவியும் தங்களுடன் வந்தால் அதிக வசதியாகப் போய்விடும். நான் இந்த ஓடக்காரப் பெண்ணைச் சமாதானப் படுத்தி அழைத்துக் கொண்டு, ஒரு படகு சம்பாதித்துக் கொண்டு பொன்னியின் செல்வரிடம் போகிறேன். ஜோதிடரின் சீடனைப் படகு கொண்டு வருவதற்காக ஏற்கெனவே அனுப்பி விட்டேன்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

வானதி திடுக்கிட்டு எழுந்தவள் அவனை வெறிக்கப் பார்த்து, ''முடியாது! முடியாது! பொன்னியின் செல்வரிடம்தான் போவேன்! செத்தாலும் அவர் காலடியிலேதான் சாவேன்!'' என்றாள்.

அதைக் கேட்ட பூங்குழலி 'கிறீச்' என்ற குரலில் "வைஷ்ணவரே! நான் உம்முடன் வர முடியாது! கோடிக் கரையில் என் காதலர்கள் என்னை அழைக்கிறார்கள்! நள்ளிரவில் நெருப்பைக் கக்கும் என் காதலர்கள் என்னை அழைக்கிறார்கள்! இளவரசி ஓலை கொடுத்து அனுப்பினாரே, அந்த வாணர்குல வீரருக்குக்கூட என் காதலர்களை நான் காட்டினேன். அவர்களிடம் நான் போக வேண்டும்!" என்று கூறினாள்.

இதுவரையில் இவர்களுடைய சம்பாஷணையில் கலந்து கொள்ளாமல் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு திகைத்து நின்ற ஜோதிடர் இப்போது குறுக்கிட்டார். "அம்மா! அம்மா! எல்லாரும் சற்றுச் சும்மா இருங்கள்!" என்று இரைந்து கத்தினார்.

ஒரு நிமிடம் அங்கே பேச்சின் ஒலி நின்றிருந்தது. அப்போது வேறோர் ஒலி, — ரோமாஞ்சனத்தை உண்டாக்கும் படியான பேரொலி, — புயல் அடிக்கும் போது அலை கடலில் உண்டாகும் இரைச்சலையொத்த பேரோசை, — கேட்டது.

"தாய்மார்களே! இந்தச் சந்தர்ப்பம் பார்த்து நீங்கள் இந்தப் பாவியின் குடிசைக்கு வந்தீர்களே! நான் நாட்டுக்கெல்லாம் ஜோதிடம் சொல்லி வந்தவன். உங்களுக்கு எச்சரிக்கை செய்து அனுப்பாமல் இருந்து விட்டேனே?" என்று ஜோதிடர் புலம்பினார்.

"ஐயா! இது என்ன? புதிய அபாயம் எங்களுக்கு என்ன வருகிறது?" என்று குந்தவை கேட்டாள்.

"தாயே! அரசலாற்றில் வெள்ளம் பெருகி வடகரையை உடைத்துக் கொள்ளும் போலிருக்கிறது என்று காலையிலேயே என் சீடன் சொன்னான். அரசலாறு உடைத்துக்கொண்டால் அந்த ஜலமெல்லாம் காவேரியில் வந்து விழும். காவேரி கரை புரண்டால் இந்த ஏழையின் வீடு அடியோடு முழுகிப் போய்விடும். காவேரிக்கு வெகு சமீபத்தில் இந்த வீடு இருக்கிறது. வாருங்கள்! வாருங்கள்! வெளியே வாருங்கள்!" என்று ஜோதிடர் கதறிக் கொண்டு வீட்டை விட்டு வெளியே ஓடினார்.

எல்லாரும் அவரைத் தொடர்ந்து வெளியேறினார்கள். பீதி கொண்ட முகத்தோற்றத்துடன் ஜோதிடர் "அதோ!" என்று சுட்டிக் காட்டினார். அவர் சுட்டிக் காட்டிய தென் மேற்குத் திசையில் ஓர் அபூர்வமான காட்சி தென்பட்டது. அரைத் தென்னைமரம் உயரமுடைய ஒரு பசுமையான சுவர், — நீண்டு படர்ந்து ஓரளவு வளைந்திருந்த விசாலமான சுவர், — அந்த வீட்டை நோக்கி இரைச்சலிட்டுக் கொண்டு வந்ததைக் கண்டார்கள். காவேரியின் கரைஉடைந்து நீர் வெள்ளம் அப்படிச் சுவரைப் போல் நகர்ந்து வருகிறது என்பதை அங்கிருந்த அனைவரும் ஒரு நொடியில் அறிந்து கொண்டார்கள்.

"அம்மா! வாருங்கள்! எல்லாரும் ஓடி வாருங்கள்! அம்மன் கோவில் மண்டபத்தின் மீது ஏறி நிற்கலாம்! தப்ப வேறு மார்க்கம் இல்லை! திருமலை என் சீடனைப் படகு கொண்டுவர அனுப்பியதே நல்லதாய்ப் போயிற்று! ஓடி வாருங்கள்!" என்று சொல்லிக் கொண்டே ஜோதிடர் வழி காட்டினார்.

மற்றவர்களும் அவரைப் பின்பற்றினார்கள். பூங்குழலியின் வெறியெல்லாம் இப்போது போய் விட்டது. "தேவி! தாங்கள் சிறிதும் அஞ்ச வேண்டாம். இதைக் காட்டிலும் எத்தனையோ பெரிய வெள்ளங்களை நான் சமாளித்திருக்கிறேன்!" என்று கூறிக் கொண்டே அவள் ஓடினாள். எல்லாருக்கும் முன்னதாகக் கோவில் மண்டபத்தை அடைந்து அதில் தாவி ஏறினாள்.

இதற்குள் வெள்ளம் கோவில் அருகிலும் வந்து சூழ்ந்து கொண்டு விட்டது. கீழே நின்றவர்களின் முழுங்கால் வரை ஏறி விட்டது. ஜோதிடரும் ஆழ்வார்க்கடியானும் தத்தித் தடுமாறி மண்டபத்தின் மீது ஏறினார்கள்.

குந்தவையும் வானதியும் மட்டும் இன்னும் கீழே நின்றார்கள்.

இருவரும் ஏற முயன்றார்கள். மேலேயிருந்த பூங்குழலி இளைய பிராட்டியின் கைகளைப் பிடித்துத் தூக்கி விட்டாள்.

வானதி மட்டும் கீழே நின்றாள். அவள் இரண்டு தடவை ஏற முயன்று இரண்டு தடவையும் கைதவறி விட்டு விட்டாள்.

மேலே இருந்த இரு பெண்மணிகளும் அவளைப் பிடித்து மண்டபத்தில் தூக்கிவிட முயன்றார்கள்.

பூங்குழலி ஒரு கரத்தையும் இளைய பிராட்டி குந்தவை ஒரு கரத்தையும் பிடித்துத் தூக்கினார்கள்.

வானதி சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். அவளுடைய ஒரு கரத்தைப் பூங்குழலி பிடித்துக் கொண்டிருந்தது தெரிந்தது. உடனே அந்தக் கையை உதறினாள்: அவள்

"சம்பளத்தை உயர்த்திக் கேட்டதுக்கு உங்க முதலாளி என்ன சொன்னார்?"

"அவர் அமைச்சிருக்கிற சம்பளக் கமிஷன் இன்னும் அறிக்கையைத் தரலைன்னு சொன்னார்!"

— கமுதி எஸ். சேதுராமன்.





அருள்வாக்கு

பகவானுக்கே ஓர் ஆசை, தான் படைத்த குழந்தைகளோடு கலந்து பழகி வாழ வேண்டுமென்று! அவன்தானே ஸர்வ பூதங்களுக்கும் மாதாபிதாக்கள்? குழந்தைகள் எப்படியிருந்தாலும் அவற்றோடு சேர்ந்து இருக்கணுமென்று மாதா பிதாக்களுக்கு இல்லாமல் போகுமா? அப்படித்தான் அவனுக்கும் ஆசை! அவன் ஆசைப்பட்டாலும் அவன் அரூபமான பரமாத்மாவாக இருந்தால் நாம் அவனைக் கிரஹிக்க முடியுமா? கிரஹிக்க முடியாதவனோடு எப்படி உறவு கொண்டாட? அல்லது திவ்ய ரூபம் எடுத்துக் கொண்டு சதுர்புஜனாக வந்தாலும் நாம் அவனிடம் போய்க் கலந்து பழகுவோமா? கன்னத்தில் போட்டுக் கொண்டு வரம் கேட்போம். இன்னும் கொஞ்சம் ஜாஸ்தியாகப் போனால், தர்சன மாத்திரத்திலேயே மூர்ச்சை போட்டுவிழுந்து விடுவோம். அதற்காகத்தான் நம் போன்ற மனுஷ்யனாகவே அவதாரங்களில் வந்து நம்மை இழைந்து பழக வைக்கிறது. எல்லோரும் ஸஹஜமாக ஒட்டிப் பழக வேண்டுமானால் அவர்கள் மாதிரியே ஆடினால் தான் முடியும் என்றுதான் பரமாத்மா அவதாரங்களில் ஆசாபாசம், கோபம், அழுகை எல்லாம் காட்டுவது. ஆனால் மொத்தத்தில் கணக்குப் பார்த்தால் இதற்கெல்லாம் மிகவும் அதிகமாக உத்தமமான ப்ரேமை, ஞானம், சீலம், ஸத்யம் எல்லாவற்றையும் அவதார புருஷன் நடத்திக் காட்டி தர்ம ஸம்ஸ்தாபனம் பண்ணியிருப்பான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

(கல்கியில் இடம் பெறும் அருள்வாக்கு பகுதிகள் 'தெய்வத்தின் குரல்' நூல்களிலிருந்து எடுத்தளிக்கப்படுகின்றன. இவ்வார அருள்வாக்கு, சமீபத்திய பிரசுரமான 'தெய்வத்தின் குரல்' ஐந்தாம் பாகத்தில் இடம் பெற்றுள்ளது. வெளியீடு: வானதி பதிப்பகம், சென்னை — 17; விலை ரூ. 70/—.)

பிடியிலிருந்து கையை விடுவித்துக் கொண்டாள்.

அந்த வேகத்தில் குந்தவை பிடித்திருந்த கரமும் நழுவி விட்டது.

வானதி தொப்பென்று விழுந்தாள்; தண்ணீரிலேதான் விழுந்தாள். அதற்குள் தண்ணீர் அவளுடைய கழுத்து வரையில் ஏறி விட்டது. கால் நிலை கொள்ளவில்லை. வானதி தண்ணீரில் மிதந்தாள். வெள்ளம் அவளை அடித்துக் கொண்டு போயிற்று.

இவ்வளவும் ஒரு கணத்தில் நடந்து விட்டது. மண்டபத்தின் மேலேயிருந்தவர்கள் "ஆகா!" என்று பரிதாபமாகக் கதறினார்கள்.

சில கண நேரத்துக்குள் வெள்ளம் வானதியைச் சோதிடர் வீட்டுக் கூரை மேல் கொண்டு போய்ச் சேர்த்தது. அந்தக் கூரை மேல் அவள் ஏறிக் கொண்டாள். "நல்ல வேளை! அபாயம் ஒன்றுமில்லை!" என்று எண்ணினாள்.

மண்டபத்தின் மேலிருந்தவர்களும் அவளைப் பார்த்தார்கள். வீட்டுக் கூரை மீது தொத்திக் கொண்டதைப் பார்த்தார்கள். அவர்களும் "நல்ல வேளை! அபாயம் ஒன்றுமில்லை. படகு வந்ததும் அவளை எப்படியும் தப்புவிக்கலாம்!" என்று கருதினார்கள்.

"கூரையை விட்டு விடாதே! கெட்டியாகப் பிடித்துக்கொள்!" என்று பலமாகக் கத்தினார்கள்.

வானதி சோதிடர் வீட்டுக் கூரையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

சிறிது நேரத்துக் கெல்லாம் அந்தக் கூரையே அசைவது போலத் தோன்றியது. அடடா? வீடு இடிந்து விழுகிறதா, என்ன?

ஆம்; சோதிடர் வீட்டுச் சுவர்கள் இடிந்து விழுந்து விட்டன. ஆனால் கூரை மட்டும் விழவில்லை!

கூரை வெள்ளத்தில் மிதக்கத் தொடங்கி விட்டது.

வானதி அந்தக் கூரையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மிதந்தாள்.

கோவில் மண்டபத்தை நோக்கித் திரும்பிப் பார்த்தாள்.

"அக்கா! நான் அவரைப் பார்க்கப் போகிறேன். பொன்னியின் செல்வரைப் பார்க்கப் போகிறேன். காவேரித் தாய் என்னை அவரிடம் கொண்டு போகிறாள்!" என்று கூவினாள்.


அவள் கூறியது அவர்கள் காதில் விழுந்திருக்கும். முக்கியமாகப் பூங்குழலியின் காதில் விழுந்திருக்கும், என்று மனப்பூர்வமாக நம்பினாள்.

ஜோதிடர் வீட்டுக் கூரை வெள்ளத்தில், மிதந்து சென்று கொண்டிருந்தது.

வானதியும் போய்க்கொண்டிருந்தாள்.

(தொடரும்)

"ஆடியில் ஏன் கல்யாணம் பண்ணக்கூடாது?"



மஞ்சக்குடி ராஜகோபால சாஸ்திரிகள்.

மஞ்சக்குடி ராஜகோபால சாஸ்திரிகள் அவர்களைச் சந்தித்துக் கேட்டோம்:

"பொதுவாக ஆடி மாதம் என்பது விரதங்களைக் கடைப்பிடிக்கும் மாதம். அதனால் ஆசாரமான விஷயங்களில் சற்றுக் கூடுதலாகவே எச்சரிக்கையுடன் இருப்பார்கள். கல்யாணம் பண்ணுவதில்லை. ஆனால் —

"தெய்வீக காரியங்கள் எல்லாமே செய்யலாம். பித்ரு காரியங்கள் எதுவும் செய்யலாம். சீமந்தம் போன்ற காரியங்கள் நடத்தலாம். (அது கர்ப்பத்தின் குறிப்பிட்ட மாதத்தில் நடத்த வேண்டும் என்பதால்) நாக பஞ்சமி, கருட பஞ்சமி, சொர்ண கௌரி விரதம், சக்தி விரதம், வரலட்சுமி விரதம் இவை எல்லாம் செய்யலாம். சந்நியாசிகள் சாதுர் மாஸ்ய விரதம் என்கிற வியாச பூஜையைச் செய்வார்கள்.

"உபகர்மா எனப்படும் வேதத்தைப் பயில ஆரம்பிப்பது இந்த ஆடி மாதத்தில் தான். தை மாதம் பௌர்ணமி வரை படிப்பது மிக நல்ல காரியம்.

"ஆடி வெள்ளி, ஆடிச் செவ்வாய் தவிர, சில விசேஷ விரதங்களுக்கும் புராணங்களில் ஒரு விதியாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

"ஆடிக் கிருத்திகையும், ஆடி அமாவாசையும் விசேஷமானவை. ஆடி அமாவாசையன்று சமுத்திர ஸ்நானம் செய்வது உத்தமமானது. இதற்கு ஈடான நாள் வேறொன்று கிடையாது. பதினெட்டாம் பெருக்கு அன்று தான் கடகத்தில் சூரியன் பதினெட்டாவது டிகிரிக்கு வருகிறான். அப்போது நதி பூஜை எல்லாம் செய்வார்கள்.

"பண்டைய தமிழ் இலக்கியங்களில் ஆடிச் செவ்வாய் அன்று பிள்ளையார் வழிபாடு செய்வது விசேஷமானது என்று சொல்லியிருக்கிறது. நம் தமிழர்கள் இந்த வழிபாடு செய்ததுண்டு என்று அறிகிறோம்.

○ சரி, என்னென்ன செய்யலாகாது?

"இந்த மாதத்தில் விவாகம் பண்ணக் கூடாது. உபநயனம் செய்யக் கூடாது. ருது சாந்தி செய்யக் கூடாது. சோம யாகம் போன்ற விசேஷ யாகங்கள் எதுவும் செய்யக் கூடாது. வீடு கட்டக் கூடாது. கிருகப் பிரவேசம் செய்யக் கூடாது. படுக்கை அறையைப் புதிதாக மாற்றக் கூடாது. புது வேஷ்டி, புதுப் புடவை உட்படப் புதியதாக எதுவும் வாங்காமல் இருப்பது நல்லது. கல்யாண நிச்சயம் கூடப் பண்ணக் கூடாது.

○ இவ்வளவு விசேஷமான மாதத்தில் ஏன் சுபகாரியங்கள் செய்யக் கூடாது?

"ஆடி மாதம் தொடங்கி, மாளயபட்சம் வரை, ஐந்து பட்சங்களுக்குச் (அதாவது ஐந்து அமாவாசை பௌர்ணமிகளுக்கு) சுப காரியங்கள் எதுவும் செய்யக் கூடாது என்று சொல்லப்பட்டு வருகிறது. காரணம் இந்த மாதத்தில்தான் யமலோகத்தில் இருக்கின்ற பித்ருக்கள் எல்லாரும் அட்டை, அரணை, ஈ, கொசு, எறும்பு, ஈசல் என்று அற்ப ஆயுள் உள்ள ஜந்துக்களாகப் பிறப்பார்கள். இதில், அரைகுறைப் புண்ணியம் செய்தவர்கள், புண்ணியாத்மாக்கள் எல்லோருமே அடங்குவர். ஒருவன் எவ்வளவு புண்ணியம் செய்திருக்கிறானோ அவ்வளவுக்குத்தான் யாரும் அங்கே இருக்க முடியும். நம் முன்னோர்கள் வேதனையை அனுபவிக்கும் காலத்தில் நாம் கோலாகலமாக வாழாமல் சற்று அடங்கித் தெய்வ சிந்தனையுடன் வாழ வேண்டும் என்ற கருத்துடனேதான் இந்த வழக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

○ ஆவணி, புரட்டாசியில் கூட கல்யாணங்கள் பண்ணக் கூடாது என்று இருந்த வழக்கம் இப்போது மாறி விட்டதே... அதைப் போல் ஆடியிலும்...?

○ நடைமுறை சௌகரியங்களுக்காகச் சில மாற்றங்கள் வந்துள்ளன. அவற்றை நாம் தடை செய்ய முடியாது. ராகுகாலத்தில், சில நல்ல காரியங்கள் செய்ய வேண்டாம் என்கிறார்கள். மீறிச் செய்தால் என்ன பண்ண முடியும்! அப்படித்தான் இதுவும்.

— யெஸ்வி



நிழல்

"உங்களுக்கு என்ன வேணும்?'' என்று மிடுக்காய் இந்தியில் கேட்டதற்கு உடனடியாகப் பதில் சொல்ல வராமல் ஒரு கணம் திணறினார் தீனதயாளன்.

''சுரேந்திரனைப் பாக்கணும். நான் அவனோட...'' என்று தமிழில் தொடங்கி, கேட்டவர் புரியாமல் பார்க்கிறதைப் பார்த்ததும் நிலைமையை உணர்ந்து, ''நான் சுரேந்திரனோட அப்பா... இங்கே மூன்றாம் வருஷம் எலக்ட்ரானிக்ஸ் படிக்கிறானே, அவன்...'' எனறு ஆங்கிலத்தில் சொன்னதும் கேட்டவர் முகத்தில் பளீரென்று மரியாதை எழுந்ததைக் கவனித்தார்.

''சுரேந்தரின் அப்பாவா..? வாருங்கள்'' என்று மீண்டும் இந்தியில் அன்பும் மரியாதையும் தொனிக்க இருக்கையை விட்டு எழுந்து வரவேற்றார். அருகிலிருந்தவர்களிடமும் 'சுரேந்திரனின் அப்பாவாம்' என்று அறிமுகப்படுத்தி, அவர்கள் முகத்திலும் ஒரு மதிப்பை எழுப்பினார்.

அந்தக் கல்லூரி அலுவலகத்துக்கு ஏதோ வேலையாய் வந்திருந்த ஒருசில மாணவர்கள், 'சுரேந்திரனின் அப்பாவாம்' என்று இந்தியில் தமக்குள் பேசிக் கொண்டதையும் கவனித்தார் தீனதயாளன்.

ப்ளஸ் டூவில் நிறைய மதிப்பெண்கள் எடுத்திருந்தபோதிலும் தமிழ் நாட்டில் எந்த என்ஜினியரிங் கல்லூரியிலும் இடம் கிடைக்காததாலும், 'யார் சிபாரிசையும் தேடக் கூடாது' என்று சுரேந்திரன் திட்டவட்டமாய்க் கூறி விட்டதாலும், ஜெய்ப்பூர் அருகே ராஜபுதனத்தில் உள்ள தனியார் என்ஜினியரிங் கல்லூரியில் — தகுதியின் அடிப்படையில் — இடம் கிடைத்ததும், அங்கே சேர்ந்தான் சுரேந்திரன்.

அப்போது அங்கே போனதுதான் அவர். அட்மிஷன் கூட்டத்தில் ஒரு சில மணி நேரம் இருந்து விட்டு அவசரமாகப் 'பாட்னா' சென்றார். அங்கே, ஓர் இலக்கியக் கூட்டம். 'தமிழிலக்கியத்தில் சமுதாயப் பார்வை' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்குக்குத் தலைமை தாங்க வேண்டியிருந்தது.

தமிழகத்தின் முன்னணி எழுத்தாளர் என்பது மட்டுமல்லாமல் பெரும் சிந்தனாவாதியென்றும், புதிய பாணிகள் பலவற்றைத் தமிழிலக்கியத்துக்கு உருவாக்கிக் கொடுத்தவரென்றும் பல இலக்கியப் பரிசுகளைப் பெற்று அவற்றுக்கு ஓர் அந்தஸ்தை வாங்கிக் கொடுத்தவரென்றும் அவருக்குத் தமிழகம் முழுவதும், ஏன் அகில இந்திய அளவில் — சொல்லப் போனால் தமிழ் மக்கள் வாழும் உலக நாடுகளெங்கும் — மரியாதையும் மதிப்பும் மிகவும் உண்டு.

'நாவுக்கரசன்' என்றால் தமிழ் நாட்டில் அறியாதவர்கள், தமிழறியாதவர்களாகத்தான் இருக்க வேண்டும். தீனதயாளனின் புனை பெயர் அது.

டில்லியில் 'அகில இந்திய எழுத்தாளர்கள் மன்றத்தில்' 'தமிழ் நாவல் இலக்கியம்' பற்றிய கருத்தரங்கிற்குத் தலைமையேற்க வந்தவர், சுரேந்திரனைப் பார்த்து விட்டு வரலாமென்று இங்கே வந்தார். சுரேந்திரனைப் பார்த்து விட்டுத்தான் வர வேண்டும் என்பது மனைவியின் கட்டளையும் கூட. மகன் கல்லூரிக்கு அவர் வருவது அது இரண்டாம் முறை.

"அப்பா.... வாங்கப்பா... ஏது லெட்டர் கூடப் போடாமெ...? சொல்லியிருந்தீங்கன்னா, ஸ்டேஷனுக்கே வந்திருப்பேனே...'' என்று சொல்லிக் கொண்டே வந்த சுரேந்திரனைப் பார்த்தார்.

கம்பீரமான பார்வையும் திடமான உடலமைப்பும், உயர அகலங்களில் கவர்ச்சிகரமான விகிதாச்சாரம் மிளிர நின்ற மகனைப் பார்த்ததும், நெஞ்சில் சன்னமான சுரப்பிகள் சுரந்தன. அடிவயிற்றின் மென் சதைகள் இனிய அதிர்வுகளை எழுப்பின.

''...ராஜ்சிங்... அப்பாவை ரூமுக்குக் கூட்டிட்டுப் போ. நான் லாப்லே பாதி வச்சிட்டு வந்திருக்கற எக்ஸ்பெரிமெண்டை முடிச்சிட்டு வர்றேன்... அப்பாக்குக் காப்பி வாங்கிக் குடுத்துடு ராஜ்...'' என்று இந்தியில் மடமடவென்று சொல்லி விட்டு, ''அப்பா... நான் அரை மணிலே வந்துர்றேன்'' என்று தமிழில் பேசிக் கொண்டே போன மகனைக் கண் இமைக்காது பார்த்தார் தீனதயாளன்.

தலைவனின் கட்டளையை ஏற்று நடத்தும் தொண்டன் போல அவரை மரியாதையுடன் ஹாஸ்டலுக்கு அழைத்துப் போனான் ராஜ்சிங் என்னும் பஞ்சாபி இளைஞன்.

''நீங்க என்ன படிக்கிறீங்க?'' என்று தமிழில் தொடங்கி, தவறுணர்ந்து, ஆங்கிலத்தில் திருத்திக் கொண்டார்.

''...நான் சிவில், நான்காம் வருஷம்..''

ஆங்கிலம் இந்தி த்வனியில் பணிவாய்ப் பதில் சொல்லிற்று.

நான்காம் ஆண்டு படிக்கிற சீனியர், மூன்றாம் ஆண்டு படிக்கும் ஜூனியரிடம் இவ்வளவு மரியாதை காட்டுவதென்றால்... அவரும் கல்லூரியில் இண்டர் படித்தவர் தான். சீனியர் என்ற தகுதியைத் தவிர, வேறு தகுதிகளே இல்லாதவர்களும் அத்தகுதிக்கான முழுச் சலுகைகளையும் வற்புறுத்தி அனுபவிப்பார்கள். அதில் ஜூனி

ஜெயரதன்

தேர்ம்மரங்கள்

யர்களை அலட்சியமாய் நடத்துவது முக்கிய சலுகை அது கல்லூரி மாணவ மனப்பான்மை. அதற்கு இவன் எப்படி விதி விலக்கு?

எதிரில் வந்த ஓரிரு மாணவர்களிடம் அவரைச் 'சுரேந்தரின் அப்பா' என்று அறிமுகப்படுத்தியதும், நட்புணர்வும் மரியாதையலைகளும் ஒரு சேர எழுந்ததைக் காண முடிந்தது.

எதிரே வந்த இன்னொருவர் ஆசிரியர் போலும்.

இவரது தோற்றத்தைப் பார்த்து ஒரு கணம் உன்னிப்பாய்ப் பார்த்தார். வெள்ளை நிறக் கதர் ஜிப்பாவும், கதர் வேட்டியுமாய், அரசியல்வாதி மாதிரி...

'சுரேந்திரனின் அப்பா' என்று அறிமுகப்படுத்தப்பட்டதும், அவர் இவரது கையைப் பிடித்துக் கொண்டார்.

"...ரியலி யூ ஆர் எ லக்கி பேரண்ட்... சுரேந்திரன் ஒரு வொண்டர்ஃபுல் ஸ்டுடண்ட். மெச்சூர்ட் பெர்சன்.. இந்த வயசுக்கு அவன் நிதானமும் பொறுப்புணர்ச்சியும் ரொம்ப ரிமார்க்கபிள்.. அவன் ஸ்டுடண்ட்ஸ் யூனியன் தலைவனா வந்தப்பறம்தான், இந்தக் காலேஜோட மதிப்பு அதிகமாச்சு... வாங்களேன் என் ரூமுக்குப் போகலாம்.. நான் மாத்ஸ் ப்ரொபஸர், டாக்டர் மகாபத்ரா..."

ராஜ்சிங் தயங்கினான்.

"சுரேந்தர் என்னை ரூமுக்குக் கூட்டிட்



அன்பார்ந்த கல்கி வாசகர்களுக்கு

பத்திரிகைகளுக்கு அத்தியாவசியமான மூலப் பொருள் நியூஸ் பிரிண்ட். அதற்கு அடுத்தபடியாக அட்டைப் படம் அச்சிட மாப்லித்தோ பேப்பர். இறக்குமதி செய்யப்படும் நியூஸ் பிரிண்ட் விலை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை உயர்ந்து கொண்டே வருகிறது. இந்தியாவில் தயாரிக்கப்படும் நியூஸ் பிரிண்டின் விலையும் சமீபத்தில் 40 சதவிகிதம் வரை உயர்ந்து விட்டது. இதே போல் மாப்லித்தோ காகிதத்தின் விலையும் கடந்த ஆறு மாதங்களுக்குள் 50 சதவிகிதம் வரை உயர்ந்து விட்டது. இவை மட்டுமல்ல. பத்திரிகை அச்சடிக்கத் தேவையான இதர மூலப் பொருட்களின் விலையும் உயர்ந்து கொண்டே வருகிறது.

இந்த விலை உயர்வுகளைத் தாங்கிக் கொள்ள நமது பொருளாதார நிலை இடங்கொடுக்கவில்லை. எனவே உங்கள் எல்லோருடைய பேராதரவையும் பூரணமாக நம்பி ஆகஸ்ட் மாதம் முதல் கல்கியின் விலையை ரூ. 2.50 ஆக உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். இந்த விலை உயர்வைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து கல்கிக்குத் தங்கள் ஆதரவை அளித்து வர வேண்டுகிறோம். மேலும் மேலும் சுவையுடனும் பொலிவுடனும் கல்கியைத் தொடர்ந்து வெளியிட இந்த நேரத்தில் மீண்டும் உறுதி பூணுகிறோம்.

நிர்வாகி,

கல்கி, கிண்டி, சென்னை.

டுப் போகச் சொல்லி...''

''டோன்ட் வொர்ரி... ஐ வில் டெல் ஹிம்...''

பேராசிரியரின் அறைக்குள் நுழைந்தார்கள்.

தன்னைப் பற்றி ஒன்றும் விவரமாய்ச் சொல்லிக் கொள்ளாமல் அவர் சொல்வதையே உன்னிப்பாய்க் கேட்கலானார் தீனதயாளன்.

சுரேந்திரனைப் பற்றி அவர் உயர்வாய்ச் சொல்லச் சொல்ல, அதைக் கேட்கக் கேட்க, மனம் நர்த்தனமாடிற்று. நெஞ்சு நட்டுவாங்கம் சொல்லிற்று.

இவன் யூனியன் தலைவனானதும், மாணவர்களிடம் பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்தினானாம். கல்லூரியின் மதிப்பைக் குலைப்பது தற்கொலைக்குச் சமமென்று மாணவர்களிடம் வலியுறுத்திச் சீரான வழிக்குக் கொண்டு வந்தானாம். கல்லூரியில் ஒழுக்கமும், கட்டுப்பாடும் ஆசிரியர்களும், அதிகாரிகளும் கவனிப்பதால்தான் இருக்கின்றன என்ற நிலையினை மாற்றி, மாணவர்கள் தாமாகவே அவற்றைப் பேணுவார்கள் என்ற கருத்தினை உருவாக்கப் பெரும் பாடுபட்டு, பெரும் வெற்றி கண்டிருக்கிறானாம். கல்லூரியின் சுற்றுச் சூழல் நன்றாக இருந்தால்தான் நம்மால் நன்கு கல்வி கற்க இயலும் என்று வலியுறுத்தி, ஓய்வு நாட்களில் மாணவர்களைத் திரட்டிக் கல்லூரி வளாகத்தினைச் செம்மைப்படுத்தினானாம். சாந்திநிகேதன் மாதிரி திறந்த வெளிக் கல்விக் கூடங்களை நிறுவ ஏற்பாடு செய்ய, முதல்வருடன் பெரிதும் ஒத்துழைத்தானாம். ஹாஸ்டல் மெஸ்ஸில் உணவு வழங்குதல், தயாரித்தல் ஆகியவற்றில் மாணவர்களை ஈடுபடுத்தி, அடிக்கடி வந்த தகராறுகளைத் தவிர்த்தானாம். மாணவ — ஆசிரியர்களிடையே மிக நல்லுறவும் மரியாதையும் நிலவ மாணவர்களை வழிநடத்தினானாம். என்றுமே படிப்பில் அவன்தான் முதலாம். பேராசிரியர் அடுக்கிக் கொண்டே போனார்.

பேராசிரியர் சொல்லச் சொல்ல, தீனதயாளனின் முதுகில் இரண்டு அழகிய சிறகுகள் முளைத்தன. அவை அவரை விண்ணில் மிதக்கச் செய்தன. விண்ணிலிருந்து யார் யாரோ அவர் மீது மலர்களை வர்ஷித்தார்கள். சந்தோஷம், சங்கீதம் இசைத்தது. சங்கீதம் நர்த்தனமாடிற்று.

என் சுரேந்திரன் இப்படி வளர்ந்திருக்கிறானா? சிறு வயது முதலே தான் ஊட்டி வளர்த்த கம்பீரங்களும், தெளிவுகளும் அவனுள் புகுந்து விசுவரூபம் எடுத்திருக்கின்றனவா? தான் நாவல்களில் சிருஷ்டித்த நாயகர்களை, நிஜமாகவே நடைமுறைக்குக் கொண்டு வந்து விட்டானா?

நெஞ்சுக் குழியில் உணர்ச்சி பொங்கிற்று.

மேனி மெலிதாய் விதிர்த்தது.

அவரிடம் நன்றி சொல்லி விட்டுச் சுரேந்திரனின் அறைக்கு, ஒரு ப்யூன் துணையுடன் புறப்பட்டுச் சென்றார் தீனதயாளன்.

''...சுரேந்திரன் ஜி... நல்லாப் பேசுவாருங்க... காலேஜ் பேச்சுப் போட்டிலே

அவருக்குத்தான் முதல் பரிசு. இங்கிலீஷிலே பேசினார்னா இன்னைக்குப் பூரா கேட்டுக்கிட்டு இருக்கலாமுங்க.. ஆல் இண்டியா ஸ்டூடண்ட்ஸ் மீட்டிங்கெல்லாம் நடத்தினாருங்க... அவராலே காலேஜுக்கு நல்ல பேருங்க...

— அந்தப் பியூன் இந்தியில் சொன்னவற்றிலிருந்து தமது அரைகுறை இந்தி ஞானத்தினுதவியால் அவர் புரிந்து கொண்டவை அவை.

ஹாஸ்டல் அறையில் அவர் வருகைக்காகச் சில மாணவர்கள் காத்திருந்தார்கள். அவரது தேவைகளைக் குறிப்பறிந்து நிறைவேற்றினார்கள். மெஸ்ஸில் சாப்பிடப் போகும் போதும் "சுரேந்தர்ஜிகா பாபுஜி" என்று மரியாதை அலையலையாய்ப் பரவிற்று. சிறப்பு விருந்தினராய் அவரை உபசரித்தார்கள்.

நெகிழ்ந்து போனார் தீனதயாளன்.

யாரும் அவர் என்ன செய்கிறார் என்பது பற்றியெல்லாம் கவலைப்பட்டதாகவோ, தெரிந்து கொள்ள முயன்றதாகவோ தெரியவில்லை.

'சுரேந்தரனின் அப்பா' என்ற உறவுதான் அவரைக் கவசமாய்க் காத்தது. சிவப்புக் கம்பள விரிப்புடன் உபசரித்தது.

உண்ட களைப்புத் தீர, மெலிதாய் உறங்கினார்.

"**சா**ப்பிட்டீங்களாப்பா...?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த மகனைப் பார்க்கப் பெருமிதமாயிருந்தது. சட்டென்று சுரேந்திரன் விசுவரூபம் எடுத்து வளர்ந்து விட்டது மாதிரியிருந்தது.

"...அப்பா, எங்க பிரின்ஸிபால்கிட்டச் சொன்னேன், நீங்க பெரிய ரைட்டர், திங்கர்னு. அவர் ரொம்ப சந்தோஷப்பட்டார்ப்பா... இன்னிக்குச் சாயங்காலம் எங்க யூனியன் சார்பிலே உங்களுக்கொரு வரவேற்புக் கொடுக்கலாம்னு பிரின்ஸிபாலே சொன்னார். நீங்க கொறைஞ்சது ஒரு மணி நேரமாவது பேசணும்ப்பா... உங்க பேச்சை, இங்கிலீஷ்ல மொழிபெயர்க்க ஒருத்தரை ஏற்பாடு பண்ணியிருக்கேன். அதனால்தான் வர கொஞ்சம் லேட்டு... உங்க பேச்சை இவங்கள்ளாம் கேட்டா அசந்து போயிடுவாங்க... தமிழ் தெரியாததுனாலே, உங்க புஸ்தகங்களை இவங்க படிச்சதில்லே... உங்க ரைட்டிங்கைப் படிச்சா பிரமிச்சுப் போயிடுவாங்க..."

உற்சாகமாய்ச் சுரேந்திரன் சொன்னான்.

பதில் பேசாமல், மௌனமாய் அமர்ந்திருந்தார் தீனதயாளன்.

தான் பேசி, தன் சிறப்புக்களை அறிந்து, நாவுக்கரசன் புகழ் பரவி, சுரேந்திரன் 'நாவுக்கரசன் மகன்' என்று அழைக்கப்பட வேண்டுமா? "சுரேந்தர் அப்பா, பெரிய ரைட்டர்... பெரிய திங்க்கர்.. நெறைய அவார்ட் வாங்கினவராம்..." 'எப்படிப் பேசறார் பாத்தியா?' 'சில்வர் டங்க்ட் மேன்..' 'அப்பாவைக் கொண்டிருக்கான் சுரேந்திரன்' 'ஜெனடிக் குவாலிடி வீண் போகுமா?' 'நாவுக்கரசன் பிள்ளைன்னா சும்மாதானா?' 'நாவுக்கரசன் பெர்ஸனாலிடி அப்படியே இருக்கு'

பலவித விமரிசனங்கள் மனத்தினுள் சுழன்றன.

அவன் சுயமாய்ச் சம்பாதித்த பெருமைகளையெல்லாம் 'என் பிள்ளை, அதனால் தான்' என்று எனக்கல்லவா தந்து விடுவார்கள்?

'நாவுக்கரசனின் பிள்ளை' என்று அவனை அழைப்பதை விட, 'சுரேந்திரனின் அப்பா' என்று தன்னை அழைப்பது கேட்க எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது...?

"...எனக்கு ஒடம்பு கொஞ்சம் முடியல்லே.. உடனேயே டில்லி போகணும். நாளைக்குக் காலம்பற எஜுகேஷன் டிபார்ட்மெண்ட் செக்ரட்டரியைப் பாக்கணும். மீட்டிங்கெல்லாம் வேண்டாம்.. நான் உடனேயே கௌம்பறேன். நீ வரணும்னு தான் காத்திட்டிருந்தேன்... உன்னைப் பாக்கணும் போல இருந்துது. பாத்தாச்சு. நான் புறப்படறேன்..

அவன் முகத்தைப் பார்க்காமல் திரும்பச் செல்லும் பயணத்திற்கு ஆயத்தம் செய்ய முனைந்தார் தீனதயாளன்.

அவன் முகத்தில் ஏமாற்றம் தெரிகிறதை அவரால் யூகிக்க முடிந்தது.

...இந்த ஏமாற்றம் கொட்டும் மழைக்கு ஒரு காகிதக் குடை மாதிரி... சீக்கிரம் போய் விடும். 'சுரேந்திரனின் அப்பா' எனகிற பெயர், கொளுத்தும் வெயிலுக்கு ஒரு குளிர் நிழல். அதில் இளைப்பாறுதல் பேரின்பம்..."

மனம் சந்தோஷத்தில் மிதக்க, அங்கிருந்து புறப்படத் தயாரானார், நாவுக்கரசன்.

டைப்ரைட்டரில் இந்திராகாந்தி!

பம்பாயைச் சேர்ந்த மனோஜ் மஜும்தார் டைப்ரைட்டரில் பிரபலஸ்தர்களின் படங்களை 'டைப் அடித்துத்' தள்ளுவதில் வல்லவர். சமீபத்தில் இவர் டைப் செய்த இந்திரா காந்தி படத்தின் அளவு 12 அடி × 9 அடி! இதனைப் பாராட்டி, தமது கையெழுத்திட்ட புகைப்படத்தை மஜும்தாருக்கு அனுப்பியுள்ளார் பிரதமர் ராஜீவ்.



– சண்டே.

‘‘ஹேய்...! பரத் பையா...! எங்கே பார்க்கிறே? மூக்கைத் திருகணும்! அலைவியே...!’’

— கவிதா அவன் பின்னுச்சி மயிரைத் தன் நீள விரல்களால் இழுத்தாள். அவள் கண்களில் பொய்யான கோபமும், ஆர்வமும் கைகோத்திருந்தன.

பரத் திரும்பினான். கொஞ்சமாய்ப் பயந்து, பின் சிரித்தான்.

‘‘வா, என் குரங்குக் குட்டியே...!’’

‘‘என்ன சொன்னீங்க...!’’


இடுப்பில் கையூன்றி முறைத்தாள்.

‘‘கவி... இன்னிக்கி என்ன ப்ரோக்ராம். சினிமாவுக்குப் போவோமா...?’’

‘‘வேணாம். அனேகமா எல்லாத் தியேட்டர்களிலேயும் பெத்தவங்களைக் கொன்னவங்களைப் பழிவாங்க, பிள்ளைங்க ஜிகினா டிரஸ்ஸோட தயாராகக் காத்திட்டிருக்காங்க. விடுங்க... பரத்... நேத்து என்ன ஆச்சு தெரியுமா...?’’

‘‘இல்லையே... நேத்துதானா ‘இருபத்தி எட்டாம் தேதி’? சேச்சே...’’

‘‘ம்... உங்க மண்டை! எங் கண்ணன் திகர்னு விசாரணைக் கமிஷன் அறிக்கை மாதிரி ஒரு



குண்டைத் தூக்கிப் போட்டுட்டாரு. இன்னிக்குச் சாயந்திரம்...''

''மைகாட், சாயங்காலம்...?''

''என்னைப் பெண் பார்க்க வர்றாங்களாம்...''

''ஹப்பா! நான் தப்பிச்சேன். எந்தப் புண்ணியவானோ பாவம்! சரி, உன் கல்யாணத்துக்கு என்ன பரிசு தரட்டும் நான்?''

''ப்ச்... விளையாடாதீங்க பரத். நான் சீரியஸாப் பேசிக்கிட்டிருக்கேன்.''

''ஓகே டிக்ஸோர்டு! என்ன ஆச்சு அப்புறம்? நம்ம விஷயத்தை உங்கண்ணன் கிட்டே சொன்னியா கவிதா?''

''இ... இல்லே பரத். எங்கண்ணனுக்கு முணுக்குன்னா மூக்குக்கு மேலே கோபம் வரும். பிடிவாதம் அதிகம். எப்படிச் சொல்றதுன்னு புரியலை. என்னைச் சின்ன வயசிலேர்ந்து பாசமா வளர்த்தவரு. அவரு ஏதாவது சொல்லிட்டாருன்னா என்னால் தட்ட முடியாது பரத்...''

''அப்ப நான் வேணும்னா வந்து உங்கண்ணன்கிட்டே பேசிப் பார்க்கவா?''

''வே... வேணாம் பரத். இப்ப வேணாம். நான் மெதுவா விஷயத்தைச் சொல்லிட்டு அப்புறமா ஒரு நாள் உங்களை அழைச்சுக்கிட்டுப் போறேன்...''

''சரி, வா ரொம்ப சூடாயிட்டே. ஐஸ் கிரீம் பார்லருக்குப் போவோம்...''

''கொஞ்சங் கூட சீரியஸ்னெஸ்லே கிடையாது பரத், உங்களுக்கு!''

''யார் சொன்னா? இதோ பாரு ஐஸ் கிரீம் பார்லர்ல சிவப்பு சூரிதார்ல கச்சிதமா ஒரு ஃபிகரு! என்ன சீரியஸா நான் கவனிச்சுக்கிட்டிருக்கேன்!''

''உதை படுவீங்க!''

விலாப்புறம் நகம் பதித்தாள். சிரிப்புடன் துள்ளினான்.

ஐஸ்க்ரீம் பார்லரில், கண்ணாடிக் கோப்பையில் கொண்டு வந்து வைக்கப்பட்ட வெனிலாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பரத் கேட்டான்.

''என்ன அப்படிப் பார்க்கிறே கவிதா?''

''எங்கண்ணனைக் கூட ஒரு விதத்தில் சரிக்கட்டலாம். ஆனால் எங்க அண்ணிக்கு நம்ம விஷயம் தெரிஞ்சா நாம குளோஸ். அவங்களுக்கு இந்தச் சமாசாரமெல்லாம் கட்டோடு பிடிக்காது.''

''நீ அனாவசியமா பயப்படறே கவிதா. நாம் இந்த ஐஸ்க்ரீம் பார்லர்ல பேசிக்கிட்டிருக்கிறது, வீட்டிலே கறிகாய் நறுக்கிக்கிட்டிருக்கிற உங்க அண்ணிக்கு எப்படித் தெரியும்?''

சிரிக்க முயன்றான்.

''சரி விடு. ப்ரூக் ஷீல்டு நடிச்ச படம் ஒண்ணு போட்டிருக்கான் சிப்பியில் — போவோமா?''

''அலைவீங்களே. அதெல்லாம் ஒண்ணும் கிடையாது. நான் இன்னிக்கு டான்ஸ் கிளாஸ் போறேன்னு பொய் சொல்லிவிட்டு வந்திருக்கேன். கிளம்பணும். ஊருக்குப் போயிருக்கிற அண்ணன் மத்தியானம் வந்துடுவார். சாயந்திரம் வேறே...''

''பயம் காட்டறியா...? அந்த மாப்பிள்ளையை வேணும்னா கட்டிக்கோயேன். என்ன? என்னை விட உயரமா, கார்த்திக் மாதிரி அழகா இருப்பானா? பாங்க் உத்தியோகமா...? வசதியான குடும்பமா?''

''யப்பா! மூக்குக்கு மேல் வர்ற கோபத்தைப் பாரு! உடனே பொரிஞ்சி தள்ளிடுவீங்களே... உங்கிட்டே எனக்குப் பிடிச்சதே இந்தப் படபடன்னு பொரியற பேச்சுத்தான்!''

''ஐ ஸீ! உன்கிட்ட எனக்குப் பிடிச்சதே...''

''அசிங்கமா ஏதாவது சொல்லித் தொலைக்காதீங்க. யாராவது பார்த்துடப் போறாங்க.''

என்ற கவிதா பக்கவாட்டில் திரும்பியதும் அங்கே வலப்புறம் நாலாவது மேஜையில் இரண்டு பெண்களுடன் கூல்ட்ரிங்க் உறிஞ்சிக் கொண்டிருந்த பெண்ணைப் பார்த்து அதிர்ந்தாள்.

'அ... அண்ணி! எ... எப்படி இங்கே!'

''என்ன கவி... ஏன் திடீர்னு மெட்ராஸ் தூர்தர்ஷன் மாதிரி ஆயிருச்சு உன் முகம்?''

''பரத்... வ... வந்து... அங்கே பாருங்களேன். வந்து... எங்க அண்ணி... யாரோ அவங்க லேடீஸ் கிளப் மெம்பர்களோட...''

வார்த்தைகளுக்குக் குளிர் ஜுரம் கண்டு கொள்ளப் படபடப்பாய்ப் பேசினாள்.

அண்ணிக்குத் தெரிந்தால்...

''அவங்ககிட்டே நான் போய்ப் பேசவா கவி?''

''வே... வேணாம் பரத்... ஏதாவது ரசாபாசமா ஆனாலும் ஆயிடும். அவங்க ஒரு மாதிரி... வாங்க போயிடுவோம்...''

''சரி.''

பில்லுக்குப் பணம் வைத்துவிட்டு, அவசரமாய் வெளியேறி, அவனிடம் விடைபெற்றுக் கொண்டு, தன் தோழி உமாவின் வீட்டுக்கு ஒப்புக்குப் போய்ப் பேசி விட்டு, அங்குதான் சென்றிருப்பதாய்ப் பேர் பண்ணிக் கொண்டு அப்புறம் கவிதா வீடு போய்ச் சேர்ந்தாள்.

பக்கத்து வீட்டு ரேடியோ பழைய பாடல் பாடியது. வாசல்புறத்து வேப்ப மரத்தில் காகங்கள் 'மைக் டெஸ்டிங்' பண்ணின. நாலைந்து அணில் குஞ்சுகள் ஜூட் சொல்லி விளையாடின.

ஸ்வர்ணா கிரைண்டரில் மாவைப் போட்டுவிட்டு ஸோபாவில் அமர்ந்து புத்தகத்தில் ஆழ்ந்திருந்தாள்.

''வா கவிதா... இப்பத்தான் டான்ஸ் கிளாஸ் முடிஞ்சதா...?''

சுருக்கென்றது அவளுக்கு நம்மைப் பார்த்திருப்பாளோ?

''ஆ... ஆமாம்... என்ன கேட்டீங்க...? இன்னிக்கி டான்ஸ் கிளாஸ் போகலை நான். உமா வரச் சொல்லியிருந்தா... அதான் போய்ப் பார்த்துட்டு வரலாம்னு போயிருந்தேன்...''

''ஓ...''

இதுதான் அண்ணியின் ஸ்பெஷாலிட்டி. இந்த ஒற்றை வார்த்தையில் ஆமோதிக்கிறாளா, இல்லை எதிர்க்கிறாளா எனப் புரிந்து கொள்ள முடியாது. எமகாதகி! பார்த்திருந்தாலும் பார்த்திருப்பாள். அண்ணன் வந்ததும் என்ன சொல்லப் போகிறாரோ தெரியவில்லை. தாம் தூமென்று குதிக்கிற ரகம் அண்ணன். பைசா பெறாத விஷயத்திற்கெல்லாம் நாலு வீடு கேட்கிற மாதிரி இரைந்து கத்துவார். காலங்கார்த்தால பேப்பரில் வான்டட் பார்க்க வருகிற எதிர்வீட்டுப் பையனைக் கூட, வீட்டில் வயதுப் பெண் இருக்கிறாள் என்பதால் கத்தரித்து, பேப்பர் இல்லை என்று சொல்லுவார்.

அந்த அண்ணனிடம் ஊசி ஏற்றுகிற மாதிரி ஒரே ஒரு வார்த்தை சொல்லி விட்டால் போதும். குபுக்கென்று எல்லாம் பற்றிக் கொண்டு விடும். மார் தெரிகிற மாதிரி அட்டைப்படம் போட்டிருந்த மாத நாவலைக் கூட இரவல் என்றும் பாராமல், நாலாய்க் கிழித்து எறிந்து விட்டு என்னமாய் எகிறினார்!

போச்சு... இன்றைக்கு ரகளை இருக்கிறது. அதிலும் இந்தக் கூத்தில் பெண் பார்க்க வேறு வருகிறார்கள்.

'கடவுளே!' மனசு இறைஞ்சியது.

''கவிதா சாப்பிட்டியா, மத்தியானம்?''

''ம்...''

பொய்தான். இல்லையென்றால் அரை மனத்தோடு சாப்பாட்டுத் தட்டில் கைகள் அளைவதை வைத்து மனத்தைப் படித்து விடுவாள் — அண்ணி.

ஸ்வர்ணா மறுபடியும் கேட்டாள்;

''உன்கிட்டே ஒரு விஷயம் கேட்கணும் கவிதா...''

திடுக்கென்றது மனத்தில்.

''எ... என்னண்ணி...?''

''உன் ஃப்ரெண்ட். உமா வீட்டிலே என்ன கிரைண்டர் வைச்சிருக்காங்க. நம்முடையது மட்டும் அடிக்கடி மோட்டார் காயில் போயிடறது...''

''வ... வந்து இதே கம்பெனிதான்... ஆனா அங்கு வோல்டேஜ் ப்ராப்ளம் இல்லை...''

வாசலில் ஆட்டோ சப்தம் கேட்டது. அண்ணன்தான். போச்சு... என்ன ரகளையாகப் போகிறதோ, தெரியலையே...? அண்ணியின் முறைப்பைப் பார்த்தால் இன்று வீடு தான் பறக்கப் போவது நிச்சயம்.

சிவராமன் உள்ளே வந்தான். பெட்டி படுக்கைகளை வைத்துவிட்டுப் புன்னகையுடன் கவிதாவைப் பார்த்தான்.

''குளிச்சு டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வாங்க... உங்ககிட்டே கொஞ்சம் முக்கியமாப் பேசணும்...''

அவளைப் பேச விடாமல் கத்தரித்துக் கொண்டாள் ஸ்வர்ணா. இரண்டொரு வார்த்தைகள் மெதுவாய்ப் பேசி விட்டுப் போனான்.

அறைக்குள் சென்று கதவை ஒருக்களித்துச் சாத்திக் கொண்டு... உள்ளே பேச்சுக் குரல் சரிவரக் கேட்கவில்லை.

போச்சு! வத்தி வைக்கிறாள்... இராதகி... அண்ணனும் அவள் பேச்சுக்குத் தலையாட்டுவாரே! 'பரத் இப்ப நான் என்ன செய்ய?' தவிப்பாய்க் கைகளைப் பிசைந்தாள்.

அப்புறம்...

வெளியே வந்த ஸ்வர்ணா கவிதாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு தனியே அழைத்துப் போய் — ''யாரந்தப் பையன்?'' என்று கேட்டாள்.

''அ... அண்ணி... வ... வந்து... அது... வந்து...''

''பயப்படாதே, சொல்லு! உங்கண்ணன் கிட்டே பேசியாச்சு. அந்தப் பையன் நல்ல பையனா இருந்தால் அவனுக்கே உன்னைத் தர்றதா போராடிச் சம்மதம் வாங்கியிருக்கேன்.''


அ... தி... ர்... ந்தாள்...

''தாங்க்ஸ்... ரொம்ப தாங்க்ஸ்... அண்ணி... என்ன அப்படிப் பார்க்கிறீங்க?''

''ம்... எனக்கு ஓர் அண்ணி இல்லாம போயிருச்சேன்னுதான்!''

''புரியலைண்ணி.''

''புரிய வேண்டாம் உனக்கு!'' என்றாள் கொஞ்சம் சிரிப்பாய்க் கொஞ்சம் வேதனையாய்.



சகலகலா சம்பந்தி

விதவைத் திருமணம் என்ற அரதப் பழசான சமுதாயப் பிரச்னையை எடுத்துக் கொண்டாலும், 'விதவைத் திருமணச் சீர்திருத்தம்' என்று வெளியார் குரல் கொடுத்துப் பிரயோஜனமில்லை; அந்த உணர்வு வீட்டுக்குள்ளே பெற்றவர்களுக்கும் கூடப் பிறந்தவர்களுக்கும் ஏற்பட வேண்டும் ஓய்,' என்று ஒரு புதுக்கோணம் காட்டியிருக்கிறாரே விசு — புதுசுதான் என்று தலை தாழ்த்தி ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்?

இந்தப் பெருங்கூட்டத்தில் பாழ் நெற்றியும் வெள்ளைப் புடைவையுமாகச் சதா சோகமுகம் காட்டி நிற்கும் சரண்யா மட்டும் தனி நபர். அனாதைக் குழந்தை வீட்டுக்கு வந்து சேர, அவர் முகத்தில் வழியும் மென்மையான மலர்ச்சியைக் காணும் போது அப்பாடா என்று இருக்கிறது. இவரை விட்டால் வீட்டுக்குள் அத்தனையும் ஜோடிகள் தான். மொத்தம் நாலு ஜோடி.

மனோரமா — டில்லி கணேஷ் முதல் கிழ ஜோடி. விசுவின் சம்பந்திமார். அந்தக் கும்பகோணம் வெற்றிலை மகத்துவத்தை டில்லியார் வயணமாய் எடுத்துச் சொல்லும் அற்புதமாகட்டும்; காய்கறிக் கூடை (குட்டி) பத்மினியிடம் ஜொள்ளு வழியப் பேசிமுழுக்கும் சபலமாகட்டும்; கடைசியில் விசுவிடம் செமையடி வாங்கும்போது திகைத்துத் தலை குனியும் அந்தப் பரிதவிப்பாகட்டும் உத்தமமான குணச்சித்திரம்.

மனோரமா படு குடும்பப் பாங்கு. பாழாய்ப் போய்விட்ட மகளிடம் உள்ளார்ந்த பாசத்தை அவர் கதவோரம் நின்று வெளிப்படுத்தும் பாவத்தில் பிழிய வைத்து விடுகிறாரே! ஆனால் என்னதான் அப்பாவியென்றாலும் — புருஷனைக் கவரும்படி டிரெஸ் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று சம்பந்தி சொன்ன யோசனையை ஏற்று, கல்யாணக் கூரைப் புடைவையும் பின்னலுமாய்க் கோணங்கித்தனம் பண்ணும்போது... விசு சார், காரெக்டர் கோட்டை விட்டாச்சே!

வீட்டுக்கு மூத்த பிள்ளை சந்திரசேகருக்கு அருணா ஜோடி. குழந்தைக்காக ஏங்கும் சந்திரசேகரும் தம் தங்கைகளைக் கரையேற்றும்வரை பிறந்த வீட்டுக்குச் சம்பளமும் கணவருக்குப் பட்டினிப் படுக்கையும் தான் தரமுடியும் என்று மூக்கு விடைக்க முறைப்புக் காட்டும் அருணாவும் மனசைக் குத்திக் கொண்டு நிற்பவர்கள்.

விசு தம் ஒரே மகள் மாதுரியைக் கொடுத்து இரண்டாவது ஜோடியை உருவாக்குகிறார். மருமகன் திலீப். இதுக்குக் கொஞ்சம் இடம் அதிகம். மாதுரி தன் கடல் போன்ற கண்களில் கணவனைச் சுருட்டிக் கொள்ளும் நாணத்திலும் தன் மேல் அபாண்டப் பழி வந்து சேரும் போது திகைத்து மருளும் ஐயோ பாவத்திலும் முத்திரை பதித்திருக்கிறார். அட, தேவலையே திலீப்! தன் மனைவி தனக்குத் துரோகம் செய்துவிட்டாள் என்று நம்பி, வீட்டையே புரட்டிப் போட்டு ஆத்திரத்தை வெளிப்படுத்தும் இடம் தூள்!

முருகேஷ் நடத்தும் லோகல் ஜிம்மிலே உடம்பைத் தேற்றிக் கொள்ளத் தெரியாத்தனமாய்ப் பாண்டியன் வந்து சேர, சைக்கிள் செயின் முருகேஷின் செல்லக் கொடுக்கு ரௌடி ரஞ்சனி கண்ணடித்து, முத்த முத்திரை காட்டிப் பாண்டியனைப் பயங்காட்டி, ஓடஓட விரட்டி, மேல்விழுந்து பிடுங்கி எடுப்பதில் கிளுகிளுப்பான வேடிக்கை பீறிடுகிறது.

அத்தனை பேர் நடிப்பையும் தன் குறுகுறு பார்வையிலும் மழலைச் சிரிப்பிலும் வாரிச் சுருட்டியெறிந்து விடுகிறது அந்தத் தவழும் குழந்தை. திருஷ்டி சுற்றிப் போடுங்கள்!

ஒவ்வொரு திருப்பத்திலும் விசுவின் சாமர்த்தியம் தெரிகிறது.

இருந்தாலும் — ஏறக்குறைய ஒரே மாதிரியான சாயப்பூச்சில் இன்னும் எத்தனை காலம் தள்ளப் போகிறீர்கள்? உங்கள் தஞ்சைச் சாமர்த்தியம் வேறு திசையிலும் மாறலாமே!

திரையில் தோன்றும் அத்தனை பேரின் பேச்சிலும் வீச்சிலும் விசுவின் வியாபகம் மொறு மொறுவெனத் தெரியாமல் இல்லை. குரங்கை நினைக்காமல் மருந்தைக் குடி என்றால் எப்படி முடியும்? கோபித்துக் கொள்ளாதீர்கள். அவரே தன்னை அப்படித்தானே சொல்லிக் கொண்டிருக்கிறார்? சம் — மந்தியாம்! மந்தி என்றால் குரங்கிலேயும் பெண் குரங்கு சார்! விசுவிடம் எப்போதுமே நமக்கு ஒரு விசுவாசம் உண்டு. அதனால் இவர் சகலகலா **சம்பந்தி** என்று ஒப்புக் கொள்கிறோம்.

— பி. எஸ். எஸ்.

வெளிச்சத்தை நோக்

நண்பகல் வெயில். வானம் நீலக் கண்ணாடியாய் உலகைப் பார்த்துக் கொண்டிருந்தது. வேகமெடுத்து ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸில், சுஜா ஜன்னலோரம் அமர்ந்திருந்தாள். காற்று கூடவே ஓடி ஓடி வந்து விஷமம் பண்ணியது.

''அக்கா, திருச்செந்தூர் எப்ப வரும்?'' ஆர்வத்துடன் முரளி கேட்டான். அவனுடைய சந்தோஷம் சுஜாவை நெகிழ வைத்தது. அவன் கையை அபிமானத்துடன் பற்றியபடி சொன்னாள்.



''இன்னும் ஆறு கிலோமீட்டர்தான் இருக்கு.''

''அப்படியா...! நேரா கடல்கிட்டே போயிடலாமா...?''

சுஜா சிரித்தாள். ''கோயில்கிட்டே நிப்பாட்டிடுவான், கோயில் பிராகாரம் சுற்றி வரும்போது கடலைப் பார்க்கலாம்...''

''அக்கா, கடல் எப்படி இருக்கும்?''

— சுஜாவுக்கு மனம் வலித்தது.

''இதுதான் முதல் தடவை உனக்கு... இல்லையா முரளி...?'' — முரளி மௌனமாய் இருந்தான்.

''கடல் அழகான நீலமாய் இருக்கும். சூரியக் கதிர்கள் பட்டு ஜொலிக்கும். கடலோரம் வெள்ளைச் சரிகையாய் அலைகள் ஓடி ஓடி வரும். பெரிசாய்ச் சீறி வரும். அப்புறம் குழந்தையாய்த் தரையில் பரந்து பின்வாங்கும். தண்ணியிலே கால் வைச்சா நல்லாயிருக்கும் முரளி....''

முரளி, கடலின் அழகை மானசிகமாய் ரசித்தான் — ''அக்கா, நீ சொல்றதைப் பார்த்தால் ஆசையாயிருக்கு. பார்க்கணும் போல இருக்கு...''

சுஜா அனுதாபத்துடன் அவனைப் பார்த்தாள். பத்து வயதில் அவனுக்குத்தான் எத்தனை வேதனை! அவன் கவனத்தைத் திருப்ப முயன்றாள்.

''பிஸ்கட் வேணுமா...? ஏதாவது சாப்பிடறியா முரளி?''

''வேணாங்கா... கடல் சப்தம் கேட்குமில்லே!''

''ஓ... பெரிசா கேட்கும், கவலைப் படாதே. நாம குளிக்கலாம்.''

''ஹைய்யா...! அக்கா! என்னைக் கெட்டியா பிடிச்சுக்குவீங்க இல்லே...?''

''இல்லே... விட்டுடுவேன்...''

— சுஜா கிண்டலடித்தாள். முரளி அண்ணாந்து பார்த்துச் சிரித்தான். பஸ் திருச்செந்தூரை அடைந்தது. எல்லோரும் இறங்கினார்கள். எவர்சில்வர் தூக்கும், கூஜாவுமாய் சுஜா இறங்கினாள். முரளி பஸ்ஸிலிருந்து குதித்து இறங்கினான். உற்சாகமாக இருந்தான்.

''முரளி, இப்படிக் குதிக்காதே...'' என்று சுஜா அதட்டினாள். ''அக்கா, இங்கே இளநீர் இருக்கா? தாகமாயிருக்கு...

சுஜா இளநீர் வாங்கிக் கொடுத்தாள். நுங்கு வாங்கினாள். மாங்காய்க் கீற்று,

சங்கரி அப்பன்

ஒரு பயணம்

வேர்க்கடலை, அன்னாசிப் பத்தை... முரளி ரசனையுடன் சாப்பிட்டான்.

"அக்கா, ஜாலியாயிருக்கு...'' முரளி உவகையில் துள்ளினான். சிலுசிலுவென்று பிராகாரச் சுற்றுப்புறம் ரம்மியமாயிருந்தது. மனசின் கசடுகளை அகற்றியது. எங்கிருந்தோ நிம்மதி வந்து நெஞ்சில் சிம்மாசனமிட்டு அமர்ந்து கொண்டது. இருவரும் சின்னச் சின்னதாய் விஷயம் பேசினார்கள். அடிக்கடி சிரித்தார்கள். அன்போடு திட்டிக் கொண்டார்கள். ஹோவென்று இரைச்சலிட்ட கடலருகே வெகு நேரம் நின்றார்கள். ம்மா! கடல்தான் என்ன அழகு!

''அக்கா... இந்த அலைகளோட ஓசையா இப்படிக் கேக்குது! ப்பா! அழகான சங்கீதம் மாதிரி இருக்குக்கா...'' என்றான் முரளி. சுஜா புன்னகை செய்தாள். முரளிக்கு நல்ல ரசனைதான்.

''வா முரளி, முருகனைச் சேவிச்சிட்டு... அப்புறம் கடல்ல குளிக்கலாம்.''

சந்நிதிக்குச் சென்றார்கள். திருச்செந்தூர் முருகன்தான் என்ன அழகு! கற்பூரம் காட்டிவிட்டு, அர்ச்சகர் விபூதியும், குங்குமமும் ஏந்தி வந்தார். சுஜா, தீபத்தை ஒற்றி, முரளியின் கண்களில் வைத்துத் தானும் வைத்துக் கொண்டாள்.

கடலில் குளிக்கப் பயந்தான் முரளி.

''வா முரளி, கெட்டியாகப் பிடிச்சுக்கறேன்.''

''வேணாங்கா... பயமாயிருக்கு...''

''சரி...''

கடல் நீரைத் தலையில் தெளித்து விட்டாள். அலையருகே காலை வைத்துக் கொஞ்ச நேரம் மகிழ்ந்தார்கள். பின்வாங்குகிற அலை, வேகமாய்ச் சர்ரென்று காலடி மணலை அரித்துக் கொண்டு ஓடுவது முரளிக்கு ஏகப்பட்ட குதூகலத்தை உண்டு பண்ணியது. அப்புறம் கட்டி வந்த புளியோதரையை மண்டபத்தில் வைத்துச் சாப்பிட்டார்கள். அஸ்தமனம் நெருங்கி விட்டதால் குளிரத் தொடங்கியது. வானத்தில் ஆங்காங்கே பொன் ரேக்குகள் பாளம் பாளமாய் மின்னின. கடல், நகை போட்டுக் கொண்டது மாதிரி புதிய அழகுடன் ஜொலித்தது. பகலில் மல்லிகைச் சரமாய்த் தெரிந்த அலைகள், அந்தி ஒளியில் சாமந்தி நிறத்தில் தூக்கலான எழிலுடன் தரையில் மோதின.

''முரளி கிளம்பலாமா... இருட்டறதுக்குள்ளே ஊர் போய்ச் சேரணும்...''

''சரிக்கா...'' — அவன் குரலில் சுருதி இறங்கிற்று. இந்த சந்தோஷமான நாள் அதற்குள் முடிந்து விட்டதே என்ற வருத்தம் அதில் தொனித்தது.

பஸ்ஸில் பேச்சேயில்லாமல் அமர்ந்திருந்தார்கள். ஊர் வந்தது. சோர்வுடன் இறங்கினார்கள். பஸ் ஸ்டாண்டின் ஓரத்தில், வழக்கமாய் முரளி அமர்ந்து பிச்சையெடுக்கும் இடத்தில் அவனைக் கொண்டு வந்து விட்டாள் சுஜா. குருட்டுப் பிச்சைக்காரன் தான் முரளி! அங்கு பஸ் ஏற வரும் சுஜா,



தினமும் அவனுக்குக் காசு போடுவாள். அன்புடன் பேசுவாள். கவனக் குறைவால், சத்தான ஆகாரமில்லாததால் முரளி இரண்டு வருடங்கள் முந்திப் பார்வையை இழந்தான். அவனைப் பாரமாக நினைத்து விரட்டிய பெற்றோர்கள், பிறகு அவனைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவனுக்குப் புது ஆடை வாங்கித் தந்து, அவனுடைய ஆசையான 'திருச்செந்தூர் போவது' என்பதனை நிறைவேற்றி வைத்தாள் சுஜா. முரளி விம்மி விட்டான்.

''அக்கா... கண்ணில்லாத இந்தப் பிச்சைக்காரனுக்கு ஒரு நாளைக்கு வெளிச்சத்தைக் காண்பிச்சீங்க. என் வாழ்க்கை பூரா மறக்க மாட்டேன்.''

சுஜா சிரித்தாள். ''வரட்டா முரளி?''

''இருங்கக்கா...'' முரளி தன் அரை நிக்கரிலிருந்து ஒரு முழம் பூவை எடுத்துத் தந்தான்.

''மறந்திட்டேன் அக்கா... நீங்க பஞ்சாமிருதம் வாங்கப் போன போது அர்ச்சகர் கொடுத்தார். வச்சுக்குங்க சாமிப் பூ...''

''எனக்கு அந்த அதிர்ஷ்டம் போய் இரண்டு வருஷமாச்சு. முரளி. என் கணவரை ஒரு விபத்தில் பறி கொடுத்துட்டேன்.''

''அக்கா... பாவி நான்... தெரியாமல், கண் தெரியாமல்... மன்னிச்சுக்குங்க...'' தடுமாறி நெகிழ்ந்தான் முரளி. ''எனக்கு ஒரு நாளைக்கு வெளிச்சத்தைக் கொடுத்த நீங்க இருட்டிலேயா இருக்கீங்க...?'' என்று முடித்தான்.

''புருஷனோட வாழாத நாட்கள் இருட்டானதுன்னு, உன்னை மாதிரி நானும் இதுவரை நினைச்சிட்டிருந்தேன் முரளி. ஆனா... இன்னிக்கு நீதான் எனக்கு வெளிச்சத்தைக் காட்டினே...''

''என்ன சொல்றீங்க அக்கா...?''


''என் பார்வையின் மூலமா நீ கடலை ரசிச்சே. சாமியைக் கும்பிட்டே... உன் முகத்திலே அதனாலே எத்தனை மகிழ்ச்சி! அந்த மகிழ்ச்சியை என்னாலே கொடுக்க முடிகிறதுங்கறப்ப எனக்குள்ளே ஒரு கம்பீரம் வருது முரளி. உண்மையில் என் வாழ்க்கையை அர்த்தம் நிறைஞ்சதா ஆக்கிக்க நீதான் எனக்கு இன்னிக்கு வழிகாட்டியிருக்கே,'' என்றாள் சுஜா.



''உன் அப்பா, நம் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தவுடன் நீ குளத்திற்கு ஓடினாயாமே... தற்கொலை செய்து கொள்ளவா...?''

''இல்லை... நம் காதலுக்கு முழுக்குப் போட...!''

— புன்னகை மன்னன்.



''புதிதாக ஐந்து லட்சம் டெலிபோன் இணைப்புக்கள் வரப் போகுதாமே!... நல்ல முன்னேற்றம்தான்!''

''நீங்க வேற! 'ராங் நம்பர்' இன்னும் எவ்வளவு அதிகமாகப் போகுதோ...?''

— சீர்காழி ஸ்ரீராம்.

பாங்க் மானேஜர்: பையன் படிப்புக்காகக் கழுதை வாங்க லோன் வேணுமா...! புரியலையே, நீங்க கேட்பது...?''

இவர்: நர்சரி ஸ்கூலுக்குப் புத்தகங்களைச் சுமக்கத்தான்...!''


— சீர்காழி ஸ்ரீராம்.



நண்பர்: ஒவ்வொரு ஆபரேஷனையும் செய்து முடிச்சவுடன் என்ன செய்வீங்க...?

டாக்டர்: குறைந்தபட்சம் ஒரு வாரத்துக்குத் தலைமறைவாகிவிடுவேன்!

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.



மெக்கா யாத்திரை

சமீபத்தில் மெக்காவில் ஹஜ் யாத்திரை செய்து திரும்பிய கோவைக்காரர், ஹாஜி ஏ. கே. எம். அன்வர் பாஷா கூறியவை...

சந்திப்பு: **சிவதர்ஷிணி**



• கஃபா

●● மெக்கா நகரில் புனிதக் கோயில் அமைந்துள்ள இடத்தை கஃபா என்று அழைக்கிறார்கள். இந்த பழமையான கோயிலை கறுப்பு நிற உறையிட்டு மூடியிருக்கிறார்கள். அதன் மீது குரான் வாசகங்கள் தங்கத்தால் எழுதப்பட்டுள்ளன. பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள இத்தங்க எழுத்துகள் ஆண்டு தோறும் மாற்றப்படுகிறது!

●● ஜெட்டா சர்வதேச விமான நிலையத்தில் 'கஸ்டம்ஸ்' கெடுபிடி பயங்கரமாக இருக்கும். போதைப் பொருட்களை யாராவது கொண்டு வந்து விடுவார்களோ என்று துருவித் துருவி ஆராய்கிறார்கள். வெற்றிலை பாக்கு, பொடி, சிகரெட் எது தென்பட்டாலும் பயணிகளைப் பிடித்துக் கொள்வார்கள். எனவே இதுபோன்ற சங்கதிகளைக் கொண்டு போகாமல் இருப்பது உத்தமம்.

●● ஜெட்டாவிலிருந்து 47 மைல் தூரத்தில் மெக்கா உள்ளது. சாலையில் எங்கு பார்த்தாலும் கார்கள் மயம்! அனைத்தும் மெக்காவை நோக்கியே சென்றபடி இருக்கின்றன. 47 மைல் தூரத்தைக் காரில் கடக்க ஆறு மணி நேரம் பிடித்தது என்றால் கார்களின் நெரிசலை யூகித்துக் கொள்ளுங்கள்!

●● அரபு போலீஸார் அட்டகாசமானவர்கள். போக்குவரத்து விதிகளை மீறினால் கையில் உள்ள லத்தியால் கார் கண்ணாடிகளைத் தாக்கி உடைத்து மிரட்டுகிறார்கள்! மறு கையில் வயர்லெஸ் செட். தலைக்கு மேலே ஹெலிகாப்டர்கள் பறந்து போக்குவரத்தைக் கண்காணிக்கின்றன.

●● கோவிலுக்கு வெளியே பாலைவனத்து மணலில் ஒரு நீரூற்று உள்ளது. இதன் பெயர் ஜம் ஜம் குளம். பக்தர்கள் தாங்கள் அணிந்து வரும் 'இர்ஹாம்' என்ற புனித ஆடையை இதில் நனைத்து எடுத்துச் செல்கிறார்கள். இந்த ஆடைதான் அவர்கள் இறந்த பிறகு உடல் மீது போர்த்தி அடக்கம் செய்யப் பயன்படும்.

●● அரஃபாத் என்ற பாலைவனத்து சமவெளியில் அனைவரும் கூடாரம் அடித்துத் தங்குகிறார்கள். அங்கே ஒரு குன்று இருக்கிறது. முந்நூறு அடி உயரமுள்ள அதன் மேல் நின்று நபிகள் நாயகம் அருளுரை வழங்கினாராம். அங்கே இரவில் கடுமையான குளிர்.

●● மெக்காவிலிருந்து எட்டு மைல் தூரத்திலுள்ள மினா என்ற ஊரில் மொத்தம் நூறு வீடுகள் கூட இல்லை. ஆனால் ஹஜ் யாத்திரைக் காலத்தில் அங்கே இருபது லட்சம் யாத்ரீகர்கள் வந்து சேர்கிறார்கள். 'குர்பானி' என்ற தியாக பலி தருகிறார்கள். அதன் பிறகு தலைமுடியை மழித்துக் கொண்டு மீண்டும் மெக்கா சென்று வணங்கினால் ஹஜ் பயணம் பூர்த்தியடைகிறது. இன்ஷா அல்லாஹ்!



• அன்வர் பாஷா

"லாலிபாப் வாங்கித் தருவேன்!"

* எல்லோரும் விபத்துக்குள்ளான பல்லவன் டிரைவரைச் சரமாரியாகத் திட்டிக் கொண்டிருக்கும் வேளையில், அவரையும் பேட்டி கண்டு, அவரின் விளக்கங்களையும் பிரசுரித்தது கல்கியின் தனித் தன்மையை உணர்த்துவதாக அமைந்தது.

ஸ்ரீரங்கம், ஏ. எஸ். முரளி.

* இவ்வாரச் சிறுகதைகள் அற்புதம்! அற்புதம்!! கதாபாத்திரங்களுடனேயே ஒன்றிப் போகுமளவுக்கு, வெகு இயல்புடன் யதார்த்தச் சூழ்நிலைகளை வைத்துப் படைக்கப்பட்டிருப்பது ரியலி சூப்பர்!

மொரப்பூர், அ. நவ்சாத்.

* ஆர். சூடாமணியின் 'கடிவாரம்...' சிறுகதையைப் படித்து, பிரமித்துப் போனேன்! அச் சிறுகதையின் உள்ளர்த்தம் நெஞ்சில் உறைத்த போது, நெகிழ்ந்து போனேன்! முதியவர்களின் மனோநிலையினை, எவ்வளவு அருமையாய்ப் படித்து எழுதியுள்ளார்! பற்பல பாராட்டுக்கள்!

கொரட்டூர், கே. என். "ஸ்ரீ" மகுடப்பிரியன்.

* தான் பெற்ற செல்வங்களில் பெண்ணிற்கு முதலில் திருமணம் செய்து வைப்பதா? பையனுக்கு முதலில் கல்யாணம் செய்து வைப்பதா? என்று மனப் போராட்டத்தில் தவித்து, அதனால் தடுமாறுகிற சராசரி குடும்பத் தலைவனின் மனநிலையைத் துல்லியமாக எழுதிய மும்தாஜ்யாசினுக்குப் பாராட்டுக்கள்.

திருப்பரங்குன்றம், முத்தையா தம்பி.

* நீண்ட தூர, இரவு நேரப் பேருந்து பயணங்களில், நிலவொளியில் பளபளக்கும் கோபுர கலசங்களைக் கண்டதும் கை கூப்பி வணங்க, உள்ளத்தில் ஒரு பரவசம் படருமே, அது போன்ற ஒரு பரவசம், சகோதரி அனுராதா ரமணன் அவர்களின் 'விளக்கு' என்ற சிறுகதையைப் படித்ததும் என் உள்ளத்தில் படர்ந்தது!

சென்னை — 86, க. இராதா கண்ணன்.

* "பாலும் பாவையும்" உண்மைக் கதை உண்மையிலேயே நெஞ்சை நெகிழச் செய்தது. இதே போல வாரம் ஓர் உண்மைக் கதையைத் தந்தால் வாசகர்களாகிய நாங்கள் மறுப்பேதும் சொல்லப் போவதில்லை... ஆனால் உங்கள் வசதி எப்படி...? உங்கள் நெஞ்சம் நெகிழுமா..?!

மேல்பட்டி, எல். மாறன்.

* அடிக்கடி நிகழும் மந்திரி சபை மாற்றத்தினால் மத்திய அமைச்சர்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை என்பதைத் தலையங்கத்தின் மூலம் தெளிவாக உணர்த்தியுள்ளீர்கள்.

திருச்சி — 1, சுஜாதா சம்பத்.

* சாதனைகள் செய்வதற்கு வாய்ப்பும், வசதியும் ஏற்பட வேண்டும் அல்லது ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த வகையில் நமது பிரதமர் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு பல்வேறு மாற்றங்களைச் செய்து 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெறுகிறார் என்றால் சந்தோஷப்படுவதற்குப் பதிலாக சங்கடப்பட்டுத் தலையங்கம் எழுதியிருக்கிறீரே! உலகம் தெரியாத ஆளய்யா நீர்!

பெங்களூர், ப. மூர்த்தி.

* 'கும்பிட வேண்டிய சிலைகளைக் கொள்ளையடிக்கிறார்கள்...' கவர் ஸ்டோரியின் மூலம் சிலைகளைக் கொள்ளையடிப்பவர்களைப் பற்றியும், அவர்களை எப்படிப் பிடிக்கிறார்கள் என்பது பற்றியும் அறிந்து கொள்ள முடிந்தது. மேலும் 'இன்டர் போல்' என்ற அமைப்பு எப்படி செயல்படுகிறது என்பது பற்றி யாவரும் அறியும் வண்ணம் விளக்கியிருப்பது வெகு சிறப்பு.

மதுரை — 1, பிரபாகர் ப்ரியன்.

* 'மங்கையர்க்கரசியின் மரணம்' படித்தேன். பெண்ணின் பெருமை, பெண் சுதந்திரம் பற்றிப் பேச்சும் — பேப்பரிலும், டி.வி.யிலும்-பட்டிமன்றங்களும்தான் நடக்கின்றன. நிஜ வாழ்க்கையில் கசப்பான உண்மைகள்தான் உள்ளன.

மன்னார்குடி, கலோசனா பார்த்தசாரதி.

* பதினான்கு வருடமாய் ஊராட்சி எழுத்தராய், பதவி உயர்வே கிடைக்காமல், செக்கு மாடு மாதிரி உழைத்து நான்காவது, மற்றும் ஐந்தாவது ஊதியக் குழுவில் ஏதாவது கிடைக்காதா என எதிர்பார்த்து எதுவுமே கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட்டு, பொழுது போகக் கல்கியைப் புரட்டினால்—'கூடுதல் சம்பளத்தை என்ன செய்யப் போகிறீர்கள்' என நான்கு பேரிடம் பேட்டி கண்டுள்ளதைப் படித்தவுடன் வயிற்றெரிச்சல் அதிகமானதுதான் மிச்சம். (வயிற்றெரிச்சல் எனக்கு மட்டுமல்ல. தமிழகம் முழுவதும் பணியாற்றும் என் போன்ற நான்காயிரம் எழுத்தர்களுக்கும்)

செம்பனார் கோவில், ஆர். நாகராஜன்.

* கூடுதல் சம்பளத்தை என்ன செய்யப் போகிறீர்கள் என்று (4 பேரை மட்டும் தேடிப் பிடித்து) பேட்டி எடுத்திராக்கும்? 50 ரூபாய்க்கும் குறைவான ஊதிய உயர்வு பெறும் என் போன்ற 90% ஊழியர்களின் சார்பில், என்னிடமும் பேட்டி கண்டதாக நினைத்துக் கொள்கிறேன். இதோ என் பதில்: கூடுதலாகக் கிடைக்கவிருக்கும் சம்பளத்தில், என் இரண்டு குழந்தைகளும் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாகக் கேட்டு நச்சரித்துக் கொண்டிருக்கும் 'லாலி பாப்'பைக் கண்டிப்பாக வாங்கிக் கொடுத்து விடுவேன்!

சென்னை — 15, கு. கணேசன்.

* கல்கி 16.7.89 இதழில் "சொன்னது சொன்னபடி" என்ற பகுதியில், மினு மசானி கூறியதாக இடம் பெற்றுள்ள விஷயம் உண்மைக்குப் புறம்பானது. அத்வானி செய்தி ஒலிபரப்பு அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றை அரசுப் பிடியிலிருந்து மீட்டுச் சுதந்திரமாகச் செயல்பட முயற்சி எடுத்தார். பிரதமர் மொரார்ஜி முதல் நாளும், எதிர்க்கட்சித் தலைவர் ஒய்.பி. சவான் மறுநாளும் நாட்டு மக்களுக்கு வானொலியில் உரையாற்ற ஏற்பாடுகளைச் செய்தவர் அத்வானிதான். இருவருக்கும் நேரம் சமமாக அளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இப்போது நடப்பது போல் சவான் பேச்சு, அரசால் தணிக்கை செய்யப்படவில்லை. பாரதீய ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கையில் தொலைக்காட்சி, வானொலிக்குச் சுய அதிகாரம் வழங்குவது ஒரு முக்கிய அம்சமாகும். இதையெல்லாம் கருத்தில் கொள்ளாது மசானி பேசியிருப்பது வருந்தத்தக்கது.

சென்னை — 112, கே. சங்கர்,
மாநில பொருளாளர், பாரதீய ஜனதா கட்சி.

பிக்பாக்கெட்காரர்கள் ஊர்வலம்!



திண்டுக்கல்லில் பத்து பிக்பாக்கெட் காரர்களை, போலீஸ் இன்ஸ்பெக்டர் ஊர்வலமாக அழைத்துச் சென்றிருக்கிறார். 'நாங்கள் பிக்பாக்கெட்காரர்கள் — எங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்ற வாசகம் அடங்கிய போர்டு ஏந்தி இவர்கள் நடந்தார்கள். (தினமலர் 17.7.89)

போலீஸ் இப்படிச் செய்ய அதிகாரம் உண்டா? அல்லது இது அதிகார துஷ்பிரயோகமா? — என்று ஓய்வு பெற்ற போலீஸ் உயர் அதிகாரி ஒருவரைக் கேட்ட போது —

"இந்தச் செயல் சட்டத்துக்குப் புறம்பானது. இன்னும் தெளிவாகச் சொன்னால், இது தேவையற்றது.

"இந்த 'பிக்பாக்கெட் குற்றவாளிகள்' என்று சொல்லப்படுகிறவர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தால், போலீஸ் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது போய் விடும். அவர்கள் பிக்பாக்கெட்டுகள்தான் என்று நிருபணமாகும் வரை, அவர்கள் நிலை நிரபராதிகள் மாதிரிதான். அப்படி இருக்கிற பட்சத்தில், அவர்கள் போலீசார் மீது மான நஷ்ட வழக்குத் தொடரலாம். இதுவே விவரம் தெரிந்த ஒரு நபர் விஷயத்தில் நடந்திருக்குமானால் அவர் அப்படித்தான் செய்திருப்பார் என்று நம்பலாம். ஆமாம், அவர் மான நஷ்ட வழக்குப் போட்டு, போலீசாரைக் கோர்ட்டுக்கு இழுத்திருப்பார்.

"இதன் இன்னொரு பக்கத்தையும் பார்க்க வேண்டும். அங்கே சமூகச் சூழ்நிலை எப்படி இருந்தது? நிலைமை எப்படி இருந்தது? அந்த வட்டாரமே பிக்பாக்கெட்காரர்களின் பயமுறுத்தலாலும், அவர்களுடைய துன்புறுத்தலாலும் பாதிக்கப்பட்டிருக்கலாம். பொது மக்களின் சகிப்புத் தன்மை பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்குச் சோதிக்கப்பட்டிருக்கலாம். இந்த மாதிரியான சூழ்நிலையில், போலீசார் சட்ட திட்டங்களுக்கு மட்டுமே உட்பட்டுச் செயலாற்ற முடியாது அல்லவா? சில அசாதாரணமான பின்னணிகள் இருக்கும் போது, அதற்கேற்ற மாதிரி அசாதாரணமான எதிர் நடவடிக்கை எடுப்பது அவசியமாய் இருந்திருக்கலாம்.

"இப்படி போலீசார் செய்தது சரிதானா இல்லையா என்பதை, அந்தப் பகுதி மக்கள் மட்டுமே சரியாகச் சொல்ல முடியும். அவர்கள் ஆட்சேபிக்காத போது இந் நிகழ்ச்சியைப் பெரிதாக எடுத்துக் கொள்வானேன்?

— யெஸ்வி

- போலீஸ் செய்தது சரியா..?



அத்தியாயம் 15
விடியாத பொழுது

ரயில் வண்டி புறப்படத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தது. நீண்ட பிரயாணத்திற்கு முன் சற்றே இளைப்பாறு வதைப் போல் பெருமூச்சு ஒன்றை வெளி யேற்றியது.

வாரத்துக்கு இருமுறை அதுவும் நடு இரவைத் தாண்டி ஊரே தூங்கும் வேளை யில் வரும் ரயில் வண்டிக்காக வாரம் முழு வதும் விடிகாலை முதல் நடு இரவில் வரும் வண்டியின் கடைசிப் பெட்டி கண்களை விட்டு மறையும் வரை, கடமை உணர்வோடு பணியாற்றும் ஸ்டேஷன் மாஸ்டர், சிவப்புக் கொடியை அக்குளில் வைத்துக் கொண்டு பச்சைக் கொடியைக் காட்டத் தயாராகிக் கொண்டிருந்தார். ரயில் புறப் படலாம்என்பதற்கான அடையாளமாய் மும் முறை மணி அடிக்கப்படும் ஓசை சிட்டுவின் காதுகளில் துல்லியமாய் விழுந்தது. சிட்டு வின் இருதயத் துடிப்பு ஏகத்துக்கு அதிகரித் திருந்தது. அவள் மிகவும் அரண்டிருந்தாள். தென்னவனின் கைகளை இறுகப் பிடித்தி ருந்தாள்.

அவளது விழிகள் அங்குமிங்கும் சுழன்று கொண்டிருந்தன. தன்னை அடையாளம் தெரிந்தவர்கள் யாரேனும் அந்தப் பெட்டி யில் ஏறிவிடுவார்களோ என்ற பயம் அவள் முகத்தில் வியர்வையாய் அப்பியிருந்தது. வண்டி புறப்பட்டால் போதும் என்ற அவ சரத்தில் இருந்தாள்... தென்னவன் அளவுக் கதிகமாக அமைதியாயிருந்தான். எதைப் பற்றிய கவலையும் அவனுக்கிருப்பதற்கான அடையாளமே தெரியவில்லை. மிகவும் தெளிவாக இருந்தான்.

ஒரு வழியாகப் பச்சைநிற விளக்கு எரிய, ஒரு வழியாக ஸ்டேஷன் மாஸ்டர் கையிலி ருந்த பச்சைக் கொடியை ஆட்ட, வண்டி மெல்லப் புறப்பட்டுப் பின் வேகம் பிடிக்க ஆரம்பித்தது.


சிட்டுவுக்கு ஒரு வழியாக மூச் சு திரும்பி யது. அவள் முகத்தில் நிம்மதிக்கான அடை யாளம் தெரிந்தது.

தென்னவன் மெல்லச் சிட்டுவின் கைகளை ஆதரவாகப் பிடித்துக் கொண்டு பேசத் துவங்கினான்.

''சிட்டு என்னை மன்னிப்பியா?''

சிட்டு அதிர்ந்தாள். ''என்ன பேசு றீங்க?''

''அது இல்லை சிட்டு; உங்கப்பன் உன்னை ராணியாட்டம் வளர்த்தாரு. ஊரி



லேயே பெரிய மனுஷரோட பொண்ணுங்கற மரியாதை... இது அத்தனையையும் உன்கிட்டே இருந்து பிரிச்சு உன்னைக் கூட்டிக்கிட்டுப் போறோமே, இதையெல்லாத்தையும் என்னால் உனக்குத் திரும்பவும் சம்பாரிச்சுக் கொடுக்க முடியுமாங்கிறதை நெனச்சிப் பாக்கறப்ப மனசு கிடந்து அடிச்சுக்குது சிட்டு...''

சிட்டு அவனை இடைமறித்தாள். ''என்னய்யா நீ! இதெல்லாத்தைவிடவும் எனக்கு நீதான் பெரிசுங்கறதாலதானய்யா நான் உன் கூட வந்தேன். அது புரியாம நீ இப்படிப் பேசினேன்னா அப்புறம் நான் அழுதுடுவேன் ஆமா...''

சொல்லியவாறே சிட்டு கண் கலங்கி அழ, தென்னவன் அவளை மெல்லத் தேற்றினான்.

தென்னவன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருக்க அதைக் கவனித்த சிட்டு, அவனை உலுக்கி ''எந்தக் கோட்டையைப் புடிக்கய்யா அவ்வளவு பலமா யோசனை செய்துக்கிட்டு இருக்கே?'' என்றாள். — சிட்டுவின் கேள்வி தென்னவனைச் சுய நினைவுக்கு இழுத்து வந்தது.

''சிட்டு, அவசரப்பட்டுட்டோமோன்னு

என் உயிர்த் தோழன்

தோணுது. இன்னும் கொஞ்சம் பணங்காசு சேர்த்துக்கிட்டு அப்புறம் பட்டணத்துக்குப் போயிருக்கலாமோன்னு.... ஒரு யோசனை...''

''திடீருன்னு உனக்கு ஏன்யா இந்த மாதிரி ஒரு நெனைப்பு?''

''சிட்டு, பட்டணங்கிறது நீ இருந்த சந்தனத்தேவன்பட்டி மாதிரி பத்து மடங்கு பெரிய ஊரு. அங்கே வேலை வெட்டி எதுவுமில்லாம போய்க் குடியேறிப் பொழைப்பு நடத்துறதுங்கறது நீ நெனைக்கிற மாதிரி அவ்வளவு லேசான சமாசாரமில்லே. என் கையிலே இருக்கிற பணத்தை வெச்சுக் கணக்கு பண்ணிப் பார்த்தா, நாம ஒண்டறதுக்குப் பட்டணத்துலே ஒரு குடிசை கூடக் கிடைக்காது. மொதல் போடறதுக்கு ஏதுவா கையிலே கொஞ்சம் பணம் கிடைச்சாலும் போதும் — அதை வியாபாரத்திலே போட்டு அதிலே வர்ற லாபத்தை...''

— தென்னவன் பேசிக் கொண்டே போக, சிட்டுவின் கற்பனைச் சிறகு முளைத்து விண்ணைத் தொட்டிருந்தது. அவள் ஒரு முடிவுக்கு வந்திருந்தாள்.

''யோவ் உனக்குக் குடியிருக்க வீடு புடிக்கவும் வியாபாரத்துக்கு மொதலும்தானேய்யா வேணும்? அந்தக் கவலையை வுடு. அதை நான் தீர்த்து வைக்கிறேன். என்னடா இவ கிட்டே ஏது இவ்வளவு பணம்னு பார்க்குறியா? பணமா இல்லாட்டியும் கையிலேயும், கழுத்திலேயும், காதுலேயும் அத்தனையும் தங்கமாப் பூட்டியிருக்கேனே இதெல்லாம் யாருக்கய்யா? எல்லாம் உனக்குத்தான்! இந்தாய்யா இது எல்லாத்தையும் புடி...'' என்றவாறே அனைத்து நகைகளையும் கழற்றி ஒரு துணியில் மூட்டையாகக் கட்டி, தென்னவனின் கையில் திணிக்க...

''சிட்டு, என்ன காரியம் பண்ணறே? இதெல்லாத்தையும் திரும்பவும் பூட்டு சிட்டு... உன்னை இப்படி மூளியாப் பாக்கறதுக்கு என் கண் அவிஞ்சு போனாக் கூட நான் சந்தோஷப்படுவேன் சிட்டு!''

மேலே பேசப் போனவனை வாய் பொத்தித் தடுத்தாள் சிட்டு...

''யோவ், நீ பாட்டுக்கு இப்படியெல்லாம் பேசினே, நான் வண்டியிலே இருந்து குதிச்சு இப்பவே என் உசிரை மாய்ச்சுக்குவேன், ஆமா, சொல்லிட்டேன். மொதல்ல இதைப் புடியா...'' — அவன் கையில் அந்தப் பொட்டலத்தைத் திணித்தாள்.

''யோவ், எனக்கு உன் மேலே நம்பிக்கையிருக்கு. உன் பேச்சிலே நம்பிக்கையிருக்கு. நீ என்னிக்காவது பெரிய ஆளா வருவேய்யா... அப்ப செஞ்சுப் போட மாட்டியா? அதை நான் பூட்டிக்கிட்டு, நாம திரும்பவும் ஜோடியா எங்க ஊருக்குப் போயி, எங்க அப்பாரு முன்னால நிக்கணும்... அதைப் பார்த்து அவரு சந்தோஷப்படணும்... அதான்யா என் ஆசை...''

தென்னவன் மெல்ல அவளைப் பார்த்துச் சிரிக்க மட்டுமே செய்தான். பின் அவள் தந்த பொட்டலத்தைத் தன் பையில் பத்திரப்படுத்திக் கொண்டு... ''தூக்கம் வந்தா இப்படித் தலையைச் சாய்ச்சிக்க, சிட்டு'' என்று கூறி விட்டுத் தானும் தூங்குவதற்குத் தயாரானான்.

சாய்ந்த சற்று நேரத்துக்கெல்லாம் தூங்கிப் போன சிட்டு, ''காப்பி டீ சாயா'' என்ற குரலுக்கு விழித்துப் பார்க்க, அநேகமாய் வண்டியிலிருந்து அனைவருமே இறங்கியிருக்க, எஞ்சியிருந்தவர்களில் தென்னவன் இல்லை. முதலில் அவன் எங்காவது அருகில் சென்றிருப்பான் என்ற நம்பிக்கையில், அருகிலிருந்த ஒரு நபரிடம், ''இது எந்த ஊரு?'' என்று மெள்ள விசாரிக்க, அவர் அவளை ஏற இறங்கப் பார்த்து விட்டுப்பின், ''அங். இதுதான் மெட்ராசு'' என்றவாறே இறங்கிப்போனார்.

நேரம் யாருக்காகவும் காத்திருக்காமல் ஓடிக் கொண்டிருந்தது. சிட்டுவை இப்போது இலேசாகப் பயம் கவ்வியிருந்தது.

வண்டி முழுக்க அனைத்துப் பெட்டிகளிலும் தேடிப் பார்த்தாள். தென்னவன் இருப்பதற்கான அடையாளக் கூற்று அங்கு அறவே இல்லை. சிட்டு பயத்தில் வாய் பொத்திக் குலுங்கி அழ ஆரம்பித்தாள். பின் தன்னைக் கட்டுப்படுத்தியவாறே கையில் எஞ்சியிருந்த 'டிரங்கு'ப் பெட்டியோடு மெல்ல ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தாள்.

வெகு நேரமாகியும் ஒரு பெண் தனிமையில் நின்று தவிப்பதைப் பார்த்து, அவளைச் 'சவாரி' கேட்க எண்ணி மெல்ல நெருங்கினான் தருமன்.

மறுநாள் சவாரிக்குச் செல்லு முன்னே தருமன் பொன்னம்மாவின் சோற்றுக் கடைக்குச் சென்றான்.

''யக்கா ஆட்டாண்ட பொண்ணு மேட்டரு இன்னான்னு கேட்டதுக்கு இன்

சீனாவில் ஓடும் ரயில்களில் பாராட்டத்தக்க அம்சம் ஒன்று உண்டு. ஸ்டேஷன்களில் நிற்கும்போதும், நகர்ப்புறங்களைக் கடக்கும்போதும் ரயில்களின் கழிப்பறைக் கதவுகளைப் பூட்டி பிரயாணிகள் உபயோகப்படுத்தாதவாறு செய்கின்றனர். இதேபோல நதிகளைக் கடந்து செல்வதற்கு முன்பும் டாய்லெட் கதவுகளைப் பூட்டி விடுகின்றனர். ரயில் நிலையங்களும், ஊர்களும், நதியின் நீரும் அசுத்தப்படக் கூடாது என்பதற்காகத்தான். பாத்ரூம் கதவுகளைப் பூட்டி, திறந்து விடுவதற்காகவே பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

— எஸ். முகம்மது யூசுப்.



னாவோ, கடையாண்ட வா அப்படின்னியே இன்னா விசயம்...? ராவுலே வெசாரிச்சதுக்கு எதுனாச்சும் சொல்லுச்சா?'' என்றான்.

''அட, அத்த ஏன்டா கேக்கறே! வெடிய வெடிய வெசாரிச்சதுதான்டா மிச்சம்... அது பதிலே ஏதும் பேசலே போ... ராமுழுக்க அய்துகினே இருந்தது. அது மனசுலே ஏதோ பெரிய பாரங்கீதுன்னு மட்டும் நல்லாத் தெரியுது... அது இன்னான்னு மட்டும் சொல்ல மாட்டேங்குது. அம்மாந் தொலைவு வெசாரிச்சதுக்கப்புறம் அது பேரு சிட்டுன்னு சொல்லுச்சு. அப்பாலே அவங்க நைனா பேரைச் சொல்லுச்சுடா... ஆங்... 'தமில் மொறசாம்' ஊரு கூட இன்னாவோ மதுரை பக்கம் அம்... சந்தனத்தேவன்பட்டியாமே...'' பொன்னம்மாவிடம் பொறுமையாக அனைத்தையும் கேட்டுவிட்டு, தருமன் குப்பத்தை நோக்கிப் புறப்பட்டான்.

டில்லிபாபு... முன்னாளில் குயில் குப்பத்தின் முடிசூடா மன்னன்! குயில் குப்பம்... அப்போது ஓரிரு குடிசைகள் மட்டுமே இருந்த காலம்... கிராமத்தின் பல்வேறு திசைகளிலிருந்தும் வேலையில்லாதோர் அனைவரும் ஏதோ பட்டணத்தில் பசியைப் போக்க இலவச மருந்து அள்ளி வழங்குவதாக நினைத்து வந்து அடைந்து கொண்டிருந்த நேரம்.

நம்பி வந்தோரை டில்லி பாபு அவரவர் வசதிக்கேற்ப வகையாகக் கறந்து கொண்டு, தங்குவதற்குப் பொறம்போக்கு நிலத்தைப் பெரிய மனசு பண்ணி ஒதுக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் தகுதிக்கு டில்லி பாபு அப்போது வெறும் 'பொட்டலம்' (கஞ்சா) விற்றுக் கொண்டிருந்தவன்தான். பின் தொழில் 'பக்தியாலும்' முன்னேற வேண்டும் என்ற தனது விடாப்பிடியான மன உறுதியாலும் தனது வியாபாரத்தைக் கள்ளச் சாராயம் முதல் கற்பை விலை பேசுவது வரை விஸ்தாரமாக்கியிருந்ததோடு சென்னையிலேயே இவையனைத்திற்கும் பல கிளைகளையும் திறக்கும் அளவுக்கு வளர்ந்து விட்டிருந்தான். 'டில்லி பாபு'வாக இருந்தவன் இன்று சமூகத்தின் ''High Society''யினரிடையே D.B. என்று வழங்கப்படும் அளவுக்கு அபார வளர்ச்சி அடைந்திருந்தான்.

'டில்லி பாபு,' பொறம்போக்கு நிலத்தைத் தன் இஷ்டத்திற்குப் பணம் வசூலித்துப் 'பட்டா' வழங்கிக் கொண்டிருந்த நேரம் அது. எல்லோரையும் போல் ஒண்ட வந்த தருமனிடமும் அவனது அக்காவிடமும் தன் கைவரிசையைக் காட்ட நினைக்க, 'தருமன்' பேசிய ''லா பாயிண்டுகள்'' அவனுக்கு நிறையவே எரிச்சல் ஊட்டின. 'பணம் கொடுத்தால்தான் தங்க இடம்' என்று கறாராகப் பேசிய டில்லியிடம் தருமன் அதே வேகத்தில் பணம் கொடுக்காமல் குடியேறிக் காட்டுகிறேன் என்று விடுத்த சவாலை ஏற்று, 'டில்லி பாபு' அன்றிரவே தனது ஆட்களோடு வந்திறங்கி, தருமனை வம்புக்கிழுக்க, தருமன் வழங்கிய 'தர்ம அடி' தாளாது டில்லி பாபு தன் ஜாகையையே குயில் குப்பத்திலிருந்து 'கொய்யாத் தோப்பிற்கு' மாற்றிக் கொண்டான்.

தருமன், தனக்குப் பின்வந்தவர்களிடம் பணம் ஏதும் வசூலிக்காததோடு அவர்கள் தங்க ஏற்பாடுகளும் செய்து கொடுத்து அந்தக் குப்பத்தினரிடையே தனது செல்வாக்கைச் சிறிது சிறிதாக வளர்த்து இன்று குயில் குப்பத்தைப் பொறுத்தவரை தருமன்தான் எல்லாம் என்ற அளவுக்கு அவர்களது 'உயிர்த் தோழனாய்' ஆகிவிட்டிருந்தான்.

'டில்லி பாபு,' தனது ஜாகையை மாற்றிக் கொண்டிருந்தானே தவிர, தனது தொழில்களை இன்னும் 'பக்தி சிரத்தை'யோடு செய்து கொண்டுதானிருந்தான்.

கண்களில் பலவிதக் கனவுகளைச் சுமந்து கொண்டு யாருக்கும் தெரியாமல் ஊரை விட்டுச் சென்னைக்கு ஓடி வரும் பெண் குலத்தின் மெய்க்காவலன் நமது 'டில்லி பாபு'தான். இது இப்படியிருக்க, புதிதாக ஒரு பெண், அதுவும் அழகாக, துணையில்லாமல் சென்னைக்கு வந்திறங்கி, செல்ல இடம் தெரியாது விழித்துக் கொண்டிருக்கையில் அவளைத் தனது ஆட்கள் கொத்திக் கொண்டு வராமல் கோட்டை விட்டுவிட்டு வந்தது டில்லியை எரிச்சல் படுத்தினாலும் அப்பெண் தருமன் பாதுகாப்பில் விலாசம் தெரியும் இடத்தில்தான் இருக்கிறாள் என்ற விஷயம் அவனைச் சற்று சாந்தப்படுத்தியது. தனது சகாக்களுடன் குயில் குப்பத்தில் வந்திறங்கிய 'டில்லி பாபு' நேரே தருமன் குடிசைக்குச் சென்று கதவைத் தட்ட, சிட்டுவுக்குத் துணையாக இருந்த மல்லிகா கதவைத் திறந்தாள்.

(தொடரும்)

கலர் டி.வி. பரிசை மறந்து விடாதீர்கள்!

கல்கியில் வெளியாகும் டி.வி. — வீடியோ பக்கங்களுக்கு உங்கள் அனுபவங்களை எழுதுங்கள். டி.வி. — வீடியோ தொடர்பாக நீங்கள் எழுதுவது ரத்தினச் சுருக்கமாக இருக்க வேண்டும்; வாய்விட்டுச் சிரிக்க வைக்க வேண்டும். விமர்சனங்களும் எழுதலாம்.

ஒரேயொரு நிபந்தனை — நீங்கள் அனுப்பும் துணுக்கு அல்லது விமர்சனத்துக்கு மேல்புறம், மிக அண்மையில் வெளியான கல்கி இதழின் தலையங்கப் பக்கத்திலிருக்கும் தேதிப் பகுதி (மூன்று வரிகள்)யை மட்டும் கத்தரித்து ஒட்டியனுப்ப வேண்டும் என்பதுதான்.

பிரசுரமாகும் ஒவ்வொன்றுக்கும் ரூ. 25 பரிசு. பிரசுரமாகும் அனைத்துக்கும் வரிசை எண் தரப்பட்டு, இன்னும் ஒரு மாதம் சென்று குலுக்கல் முறையில் ஒருவருக்குக் கலர் டி.வி. பரிசு!–உடனே எழுதுங்கள்.

— ஆசிரியர்.



* ஏற்றுமதி வர்த்தகத்துக்கு உதவக் கப்பல் ரெடி.



எஸ்ஸாரின் வெற்றிக் கதை!



* ஸஷி ...




— ரவி — முதலெழுத்துக்களை இணைத்தால் எஸ்ஸார்.

ஜெர்மனியில் உள்ள ஓர் இரும்பு ஆலையை அப்படியே பார்ட், பார்ட்டாகக் கழற்றி, கப்பலில் ஏற்றி, இந்தியாவுக்குக் கொண்டு வந்து, இங்கே மீண்டும் முடுக்கி, தொழிலகத்தை இயங்கச் செய்வது என்றால்...

ஏதாவது நடக்கக்கூடிய காரியமாகச் சொல்லுங்க ஸார் என்றுதான் பதில் கிடைக்கும். ஆனால் இந்தியச் சகோதரர்கள் இருவர் இந்த நடக்க முடியாத காரியத்தை நடத்திக் காட்டியிருக்கிறார்கள்!

இரும்பு தயாரிப்பில் — குறிப்பாக ஸ்பாஞ்ச் அயர்ன் எனப்படும் வகையைத் தயாரிக்கத் தொழில் நுட்பங்களை அறிந்து வர இரு சகோதரர்களும் அயல் நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தனர். ஜெர்மனியில் எம்டன் என்ற நகரை அடைந்த போது அங்கு ஒரு ஸ்பாஞ்ச் அயர்ன் தொழிலகம் நிறுவி ஐந்து மாதங்களே ஆகியிருந்தன. ஆனால் அதன் அதிபருக்குப் பல கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுப் போக, தொழில கத்தை அடி மாடு விலைக்கு விற்று விடத் தயாராக இருந்தார். நமது இந்தியச் சகோதரர்கள் அந்த வாய்ப்பை நழுவ

* ஸ்பாஞ்ச் இரும்பு தொழிலகம்.



விடாமல் தொழிலகத்தை வாங்கி, அக்கு வேறு ஆணி வேறாகக் கழற்றி இந்தியாவுக்குக் கப்பலேற்றி விட்டனர். இங்கே சூரத்துக்கு அருகில் ஹஸிராவில் நூறு ஏக்கர் நிலப்பரப்பில் அதை இணைத்துப் பூட்டி வருகின்றனர். வெகு சீக்கிரம் இந்த இரும்பு ஆலை முழு மூச்சுடன் இயங்கத் தொடங்கும்.

இந்தச் சாமர்த்தியச் சகோதரர்களான ஸஸிரூயா, ரவி ரூயாவின் தொழில் — வர்த்தக விஸ்தரிப்புத் திட்டங்கள் வடக்கே நடந்தாலும் சென்னைக்கும் இவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு! இவர்களின் தந்தை நந்த் கிஷோர் சென்னையிலிருந்து சுரங்கக் கனிப் பொருள்கள் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தார். சகோதரர்கள் படித்துப் பட்டம் பெற்றது, சென்னை லயோலாவிலும், கிண்டி இன்ஜினீரிங் கல்லூரியிலும்தான்.

தந்தை காலமான பிறகு, புதிய தொழில் துறைகளில் புகுந்த இவர்கள், தங்கள் இருவரது பெயர்களின் முதலெழுத்துக்களையும் இணைத்து எஸ்ஸார் என்று தங்கள் குரூப் நிறுவனங்களுக்குப் பெயரிட்டனர்.


துறைமுகங்களைச் செப்பனிட வேண்டுமா? ஆழ்கடலின் அடியில் குழாய்கள் பதிக்க வேண்டுமா? ஆழ்கடலினைக் கடைந்து எண்ணெய் எடுக்க ஆவன செய்ய வேண்டுமா? ஏற்றுமதி வர்த்தகம் செய்ய கப்பல் வேண்டுமா? எல்லாவற்றுக்கும் ரூயா சகோதரர்கள் உதவத் தயாராயிருக்கிறார்கள்! தமிழ் நாட்டுடன் இவர்களுக்கு உள்ள மாணவப் பருவத் தொடர்பு ஒரு புறமிருக்க இருவர்களுக்கு நிதி ஆலோசகராக அமைந்திருப்பவரும் ஒரு தமிழரே: வேங்கடேசன்.

எஸ்ஸார் நிறுவனத்தில் ஸ்பாஞ்ச் இரும்பு தயாரிப்பு ஆலை முதன் முறையாக இயற்கை வாயுவை எரி பொருளாகக் கொண்டு இயங்கப் போகிறது என்பதும் ஒரு சாதனை. ஆலை முழுவதுமாக இயங்கும் போது 8,88,000 டன் ஸ்பாஞ்ச் இரும்பு உற்பத்தியாகி அந்நியச் செலாவணி கணிசமாக மிச்சமாகும்.

அந்த நாளைத் துரிதப்படுத்தும் நோக்கில் எஸ்ஸார் நிறுவனத்தில் அனைவருமே இரவு பகல் பாராமல் விடுமுறையை எண்ணாமல் உழைத்து வருகிறார்கள்.

— பி. எஸ். எம்.

* ஆழ்கடலைக் குடைய எஸ்ஸார் கப்பல்.



ராகுல்காந்தி அட்மிஷனிலும் பிரச்னையாமே?

* குரு செல்வசிரோன்மணி, தென்காசி.

? டி.வி.யில் பைபிள் தொடர் ஒளிபரப்பப் போகிறார்களாமே?

! இவர்கள் எதையாவது செய்து, புதிய வாதப் பிரதிவாதங்களைக் கிளப்புவதை விட, ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ள ஸெஸில் பி. டெமிலின் "டென் கமாண்ட்மெண்ட்ஸ்" போன்ற அற்புதமான மேல் நாட்டுத் திரைப் படங்களைப் பெற்றுப் பகுதி பகுதியாக ஒளிபரப்பலாம். சிறப்பாகவும் இருக்கும்; செலவும் குறையும்!

* இரா. சண்முக சுந்தரம், கல்லிடைக்குறிச்சி

? ராகுல் காந்தி அட்மிஷனிலும் பிரச்னையாமே, கவனித்திரா?

! 'ஸ்போர்ட்ஸ் கோட்டா அட்மிஷனை ஸ்போர்டிவ்வாக எடுத்துக் கொள்வோம்' என்று ராஜீவ் எதிர்பார்த்தார்... ஆனால் நாம் என்னடாவென்றால் அவருக்கு ஏமாற்றமளித்து அதிலும் குறை காண்கிறோம்!

* க. சரவணகுமார், தூத்துக்குடி.

? எனக்கு அதிர்ஷ்டமில்லை; என் தோல்விக்கு இதைத்தான் காரணமாகக் கூற முடியும்' என்கிறாரே இவான் லெண்டில்?

! சில விளையாட்டுக்களில் அதிர்ஷ்டத்தின் பங்கு அதிகம் (உம்: கிரிக்கெட்). டென்னிஸில் தம் பிடிப்பதும் ஆற்றலும் தான் முக்கியம். இரண்டுமே ஓர் உச்சக் கட்டத்தை அடைந்த பின் சரிவுப் பாதையில் தான் இறங்கத் தொடங்கும். இந்த இயற்கையை உணர்ந்து ஒப்புக் கொள்வதுதான் கௌரவம்.

* எஸ். கண்ணன், திருச்சி — 6.

? சமீபத்தில் உங்கள் மனத்தைப் பாதித்த நிகழ்ச்சி?

! வேறென்ன, அமிர்தலிங்கம், யோகேசுவரன் ஆகியோர் சுடப்பட்டு மரணமடைந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள், உமா மகேசுவரன் சுடப்பட்டு இறந்ததாகச் செய்தி வந்திருப்பதுதான்! பாம்புக்குப் பால் வார்த்தாலும் கொத்தாமல் விடாது என்பதை இலங்கை அரசும் பிரேமதாசாவும் புரிந்து கொண்டால் சரி. (கடைசிச் செய்தி: விடுதலைப் புலிகள் — ஈழ அரசு பேச்சு வார்த்தைகள் நிறுத்தம். விடுதலைப் புலிகள் திரும்பிச் சென்றனர்.)

* லீலா இராம், தக்கலை

? உண்மைக்குப் புறம்பானது எது?

! அரசியல்வாதிகள் பேச்சு.

* எல். ஆர். சுந்தரராஜன், சென்னை.

? ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி போணி ஆகுமா?

! ஓ! காங்கிரஸின் 'ஆசி' இருக்கும் வரை.

* லட்சுமி நரசிம்மன், வேலூர்.


? வீரப்பனைத் தொடர்ந்து பி.எச். பாண்டியனும் ஜெயலலிதாவிடம் சரண் அடைவாரா?


! 'உங்கள் விலாசத்தை ரகசியமாகப் பாதுகாப்பதன் மூலம் உங்களைப் பாண்டியனிடமிருந்து பாதுகாக்கிறேன்! இந்தக் கேள்வியைப் படித்தால் அத்தனை கோபம் வரும் அவருக்கு!

* கி. இலக்குவன், வேப்பங்குளம்.

? சில பெண்கள் கணவனுக்கே எமனாக அமைந்து விடுகிறார்களே?

* அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி * போணி ஆகுமா?







* சரண் அடைவாரா?

! ஆமாம் ஸார், நான் கூடப் படித்தேன். மேல் நாடு ஏதோ ஒன்றில் கணவன் — மனைவியிடையே வாக்குவாதம் முற்றி, கை கலப்பில் முடிய, இருவரும் தரையில் கட்டிப் புரண்டு சண்டையிட, மனைவி கணவன் நெஞ்சின் மேல் அமர்ந்து இரண்டு தரம் 'தம் தம்'மென்று எழும்பி விழ... ஆள் குளோஸ்!

* கே. ஆர். தேவேந்திரன், வேலூர்.

? மா—ஸே—துங்கே பல ஆண்டுகளாகத் தலைமறைவு அரசியல் நடத்தியிருக்கும் போது தானும் சில காலம் அரசியலில் ஒதுங்கியிருப்பது ஒரு பெரிய விஷயமல்ல என்று ஜெயலலிதா கூறியிருக்கிறாரே?

! 'இதனால் மாசேதுங்குடன் என்னை ஒப்பிட்டுக் கொள்வதாக எண்ணி விட வேண்டாம்' என்றும் விநயத்துடன் கூறியிருப்பதைப் பாராட்டலாம். ஆனால் ஒரு விஷயம்: மா—ஸே—துங் கம்யூனிஸ சித்தாந்தத்தை ஏற்றவர். நாம் இன்று ஜன நாயக அரசியல் நடத்துகிறோம். 'எனக்கு உடல்நிலை சரியில்லை; ஓய்வு தேவை; ஒரு மாதம் என்னை யாரும் தொந்தரவு செய்ய வேண்டாம்' என்று கேட்டுக் கொண்டு அந்த ஒரு மாதத்துக்குக் கட்சிப் பணிகளைக் கவனிக்கப் பொறுப்பான ஒருவரை நிய மித்து விட்டுப் பின்னர் தலைமறைவாவது தான் நமக்கு ஏற்றது.

* கே. வி. நாதன், நெய்வேலி.

? 'அனைவருக்கும் ஆரம்பக் கல்வி கூட நாற்பது ஆண்டு சுதந்திரத்துக்குப் பிறகும் கொடுக்க முடியவில்லை' என்று மத்திய அமைச்சர் சிவசங்கர் கூறியுள்ளாரே?

! சேம் ஸைட் கோல்!

* கே. வி. எஸ். மணியன், குடியாத்தம்.

? 'நாடாளுமன்றத் தேர்தல் நம்மை எதிர் நோக்கியிருப்பதால் காமராஜர் பிறந்த நாள் விழா முக்கியத்துவம் வாய்ந்தது' என்று வாழப்பாடி அறிக்கை விட்டிருக்கிறாரே?

! நல்லவேளை! அவ்வப்போது தேர்தல் என்று வருகிறதோ, காமராஜர், காங்கிரஸ் காரர்களின் நினைவுக்கு வருகிறாரோ! இல்லாத போனால் அவரும் அவரது நேர்மையும் இங்கே யாருக்கு வேணும்?

* ஜி. ராஜசேகர், வலங்கைமான்.


? 'கருணாநிதியை வாழ்த்தி லட்சாதிபதி யாய் வாழ்வதை விட, ஜெயலலிதாவை வாழ்த்திப் பிச்சைக்காரனாக இருப்பதையே பெருமையாக நினைக்கிறேன்' என்று காளிமுத்து பேசியிருக்கிறாரே!

நீங்கள் கேட்டவை

— தராசு



* ஸேம்ஸைட் கோல்!



* மாசேதுங் போல...

! ஆக மொத்தம், 'லட்சங்களைச் சேகரிப் பது எப்படி' என்று தெரிந்து வைத்திருக் கிறார்! முதலில் பதவிப் பிச்சை யாசிக்க வேண்டும்; பதவி கிட்டக் காத்திருக்க வேண்டும். பதவி கிடைத்த பிறகு தலை வரைத் துதிக்க வேண்டும். துதித்தபடியே லட்சங்களைச் சேர்க்க வேண்டும். அநேக மாக எல்லா அரசியல்வாதிகளுக்கும் தெரிந்த, கைவந்த கலைதான்!

* ஆர். சுப்பராவ், திருக்கோவலூர் *

? பாரத நாட்டின் பண்பாட்டுப் பெருமை யைப் பாரெல்லாம் பரப்பும் பெரும் பணியில் இளைஞர் காங்கிரஸ் இளம் ரத்தங்கள் ஆற்றி வரும் தொண்டு பற்றி?

! வடக்குக் கொரியாவில் நடந்ததைத் தானே கேட்கிறீர்கள்? தங்கள் குழுவினருக் குள்ளேயே குஸ்திச் சண்டை நடத்திக் கட்சிக்குள் கருத்துச் சுதந்திரம் இருப்பதை நிரூபித்தார்கள்! அந்த ஊரின் வழிகாட்டும் பெண்களைக் கட்டிப் பிடித்து முத்தமிட் டுச் சகோதர பாசத்தை வெளிப்படுத்தி னார்கள்! இவர்களது அன்புத் தொல்லை தாங்க முடியாமல் விமானத்தில் காலிங் பெல்களின் இணைப்புக்கள் துண்டிக்கப் பட்டன! மொத்தத்தில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதற்கு எடுத்துக் காட்டாக நடந்து கொண்டனர்! இ. காங் கிரஸின் இளம் ரத்தங்களுக்கு ஈடு இணை ஏது?

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

ஆர். சுப்பராவ்,
94, கீழ ரத வீதி,
திருக்கோவலூர்,
605 757

சொன்னது



○ நான் வியாபார நோக்கோடுதான் படங்களில் நடிப்பதாகச் சொல்லுகி றார்கள். எனக்கு 67 வயதாகிறது. எனக்கு என்ன வியாபார நோக்கம் இருக்க முடியும்?

— என். டி. ஆர்.

○○ விலைவாசி உயர்வு ஐந்து சதவீதத் துக்குள் கட்டுப்பட்டால், வங்கிக் கடன் வட்டி விகிதக் குறைப்புப் பற்றி யோசிக்க லாம்... நலிந்த தொழில்களுக்குக் கடன் கொடுப்பது நல்லதல்ல. அவர்கள் பல சலுகைகளைக் கேட்கிறார்கள். கொடுக் கிற பணத்தை வேறு வழிகளில் செல வழிக்கிறார்கள்... வங்கிகளை ஒரேயடி யாகச் சார்ந்திருப்பதைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

— ரிசர்வ் வங்கி கவர்னர் மல்ஹோத்ரா.

○○ பிரெஞ்சுப் புரட்சியால் உலகம் ஏதோ புதிதாகத் தெரிந்து கொண்டு விட்டது என்று நான் நினைக்கவில்லை. அந்தப் புரட்சியே தேவைதானா என்ற பிரச்னைக்குரியது.

— பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தாட்சர்.

○○ புறநகர்ப் பகுதிகளில் உள்ள மருத் துவமனைகளின் தரத்தை உயர்த்தினால் தான் நகரிலுள்ள பெரிய மருத்துவமனை களில் நெருக்கடி குறையும். சிவப்பு நாடா முறையினால், பல நல்ல திட்டங் கள் முடங்கித் தாமதப்படுத்தப்பட்டு விட்டன. கருணாநிதி நகரிலுள்ள புற நகர் மருத்துவமனையில் ஆபரேஷன் தியேட்டர் எல்லா வசதிகளுடனும் இயங்க வேண்டும் என்று ஆசைப்பட் டேன். ஆனால் இதுவரை அது நடக்க வில்லை.

— சுகாதார அமைச்சர் பொன்முடி.

○○ நான் சமீபத்தில் வெளிநாடுகளுக்கு எல்லாம் சென்று வந்ததைத், ஏதோ உள் நோக்கம் கற்பிக்கும் விதத்தில், அவதூறு களாகக் கதை கட்டி விட்டிருக்கிறார்கள். நான் நாட்டின் சட்ட விதிமுறைகளை மீறியிருந்தேன் என்று சந்தேகித்தால், ராஜீவ் காந்தியே, என்னைக் கைது செய்ய உமக்குத் துணிவு உண்டா?

— அருண் நேரு.

○○ எட்டாவது திட்டத்தின்படி, தொழி லகங்கள் 12 சதவீத உற்பத்திப் பெருக் கம் காண்பிக்க வேண்டுமாம். இதற்குத் தனியார் உற்பத்தித் துறை, 1,45,450 கோடி ரூபாய் முதலீடு செய்தாக வேண் டும். இதற்குத் தோதான சூழ்நிலையை உருவாக்க அரசுதான் உதவ வேண்டும்.

— நகர வர்த்தகர் சங்கங்கள் குழுத் தலைவர் வி. மோகன்ராவ்.

தொகுப்பு: சித்தார்த்



சொன்னபடி....

மாநில முதல் மாணவனுக்கு உதவிய டீ.வி.!

டீ.விக்கு நன்றி!

○○ தேர்வில் மாநிலத்திலேயே முதலாவதாக வந்த மாணவனுடன் பேட்டி.

நிருபர்: நீங்கள் முதலாவதாக வந்ததற்குக் காரணம் யார்? உங்கள் அம்மா, அப்பாவா? அல்லது பள்ளி ஆசிரியரா?

மாணவன்: யாரும் இல்லை; நம்ம டீ.வி. தான்!

நிருபர்: (ஆச்சரியத்துடன்) டீவியா? அதெப்படி?

மாணவன்: நான் தினமும் ஸ்கூல் விட்டு வந்ததும் எங்க அப்பா ''ஒழுங்கா படிக்கறயா? இல்லே டீ.வி.யைப் போட்டு விடவா?''ன்னு பயமுறுத்துவாரு. நான் பயந்துக்கிட்டுப் படிக்க உட்கார்ந்துடுவேன். அதனால் தான்.

— காரை. மகேஸ், காரைக்குடி.

கொழுப்பு இலவசம்!

○○ ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரியாத எங்கள் தாத்தா கிராமத்திலிருந்து வந்திருந்தார். அன்று டீ.வி. விளம்பரங்களில் ஒன்றான எண்ணெய் விளம்பரத்தில் **Cholestrol free** என்ற வாசகம் வந்தது. அதை என் அண்ணன் மகள் கலா உரக்கப் படித்ததும் எங்கள் தாத்தா என் அண்ணனிடம், ''ஏண்டா இந்த எண்ணெய் வாங்கினா ஏதோ ஃப்ரீயாத் தரானாமே! இதையே வாங்கினா என்ன?'' என்றவுடன் வீடே சிரிப்பில் அதிர்ந்தது.

— எஸ். மகேஸ்வரி, தூத்துக்குடி.



தங்கமென்ன, வைரமே உண்டு!

○○ என் மாமா வீட்டில் உத்தர் ராமாயணம் பார்த்துக் கொண்டிருந்தேன். ராமர் அஸ்வமேதயாகத்தைத் தொடங்கிக் கொண்டிருந்தார். பக்கத்தில் சீதையின் பொற்சிலை. அதைப் பார்த்துக் கொண்டிருந்த என் மாமி, மாமாவிடம், ''பாருங்கோ, ராமர் தன் பொண்டாட்டிக்குத் தங்கத்திலேயே சிலை செய்திருக்காரு; நீங்களும் இருக்கீங்களே! எனக்கு ஒரு மூக்குத்தியாவது தங்கத்திலே போட்டிருக்கீங்களா'' என்றாள் கிண்டலாக!

உடனே பதிலுக்கு என் மாமா, ''இப்பவே நீ என்னை விட்டுட்டுக் காட்டுக்குப் போய் இருக்கேன்னு ஒரு வார்த்தை சொல்லு... உடனே தொல்லை விட்டதென்று வைரத்தாலேயே ஒரு சிலையைச் செஞ்சி வைக்கறேன் பாரு!'' என்று ஒரு போடு போட்டார்.

— வெ. கல்யாணி, வேலூர்.

சுத்த அல்பம்!

○○ அவர்: என்ன குழந்தைகளா! கோடி வீட்டுக்கு டீ. வி. பார்க்கணும்னு போனீங்க! உடனே திரும்பி வந்துட்டீங்க!

குழந்தைகள்: அவங்க வீட்டிலே இப்போ டீ.வி. போடலியாம்!

அவர்: சுத்த அல்பமா இருப்பாங்க போலிருக்கே! சரி! சரி! நம்ம டீ.வி.யையே போடுங்க!


— எஸ். சுந்தர்ராஜ்,
பாளையங்கோட்டை.

'வாங்கு, ஒரு வாஷிங் மெஷின்'

○○ அன்று எங்கள் ஆறு வயதுப் பெண்'

ஆகான்க்ஷாவிற்கு, விலையுயர்ந்த ஒரு புது 'ஃப்ராக்' போட்டிருந்தேன். போட்ட சிறிது நேரத்திற்குள் விளையாடிவிட்டு, ஃப்ராக்கை அழுக்காக்கிக் கொண்டு வந்தாள். எனக்கோ வந்தது கோபம். இப்பொழுது இதை யார் துவைப்பது. இன்னும் சிறிது நேரத்தில் வெளியே வேறு போக வேண்டுமே என்று அதட்டினேன். ஆனால் குழந்தையோ சிறிதும் அலட்டிக் கொள்ளாமல் 'ஏம்மா, வீடியோகான் வாஷிங் மெஷின் விளம்பரத்தில், அந்தப் பெண்ணும் என் மாதிரி, ஃப்ராக் போட்டுக் கொண்ட சிறிது நேரத்திற்குள் அழுக்காக்கிக் கொண்டு வர, அவள் அம்மா சிரித்துக் கொண்டே, உடனே அதைத் துவைத்து விடுகிறாளே, நீ மட்டும் என்னைக் கோபித்துக் கொள்ளுகிறாயே' என்றாளே பார்க்கலாம்!

— பிரேமா ராவ், புது டெல்லி.



புகழடைவது சுலபம்!

OO என் பதின்மூன்று வயது மகன் ஆடாமல் அசையாமல், விம்பிள்டன் மேட்ச் பார்ப்பான். அப்படி ஒரு லயிப்பு. ஆனால் ஐந்து வருடங்களாக டென்னிஸ் விளையாடினாலும், சங்கோஜ சுபாவத்தினால் ஆட்டத்தில் முன்னேறும் வழியைக் காணோம். அவனை ஊக்குவிக்க எண்ணி, ''கிஷோர், மனிதன் பிறந்தால், புகழோடு சாக வேண்டும். நீயும் கடுமையாகப் பயிற்சி செய்து இது போல் ஓர் உலகம் புகழும் விம்பிள்டன் வீரனாக வர வேண்டும்'' என்று கூறித் திரும்பினேன். பின்னால், கண்களில் குறும்புடன் என் பதினொரு வயது மகள் இருந்தாள்.


''உனக்கும் சேர்த்துத்தான் அறிவுரை'' என்றேன் அவளிடம். அவளோ உடனே, ''மம்மி, அது ரொம்ப ஈஸி. அண்ணா விம்பிள்டன் ப்ளேயராய் ஆனவுடன், அனைவரிடமும், நான் இன்னாரின் தங்கை என்று கூறினால் போதும். **'Famous man's sister — Famous girl'** என்று ஒரு போடு போட்டாளே, பார்க்கலாம்!

— சி. வி. பத்மாகுமார், மதுரை — 20.

''வேண்டாம், குடிக்காதே!''

OO எனது சித்தியும், அவருடைய மகனும் எனது வீட்டுக்கு வந்த போது என் அம்மா எல்லோருக்கும் காம்ப்ளான் கலக்கிக் கொண்டிருந்தார். காம்ப்ளான் எப்படியிருக்கிறது என்று அம்மா வினவ, சித்தியின் மகன் தங்களுக்கு அளிக்கப்பட்டது காம்ப்ளான் என்று உணர்ந்து ''ஐயையோ! அண்ணா நீ காம்ப்ளான் குடிக்காதே. அப்புறம் உன்னுடைய சட்டை, பேண்ட்டெல்லாம் சின்னதாப் போயிடும். பின்னாடி நான் போட வேண்டியிருக்கும்'' என்றானே பார்க்கலாம் ஒரே சிரிப்புத்தான்.

— எஸ். சரவணன், சேலம்.



செய்தி விளைவித்த சிரிப்பு!

OO தொலைக்காட்சியில் செய்தியின் இடையில், மந்திரி சபையில் நிகழ்ந்த சில மாற்றங்களைப் பற்றிப் படித்துக் கொண்டு வரும் போது, 'ஜவுளித் துறை அமைச்சர்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. என் கணவர் 'அதென்ன? ஜவுளித் துறை அமைச்சர்? அப்படியென்றால் என்ன?' என்று கேட்டார். **'TEXTILE'** என்பதைத்தான் அவ்வாறு கூறுகிறார்கள்' என்று நான் விளக்கினேன்! 'சரிதான்! இன்னும் கொஞ்ச நாளில் 'நிக்கர், சொக்காய்' இவற்றுக்கெல்லாம் கூடத் தனித்தனி அமைச்சர்கள் வந்து விடுவார்கள் போலிருக்கிறது!' என்று அவர் கூறியதும்,' இருவரும் விழுந்து, விழுந்து சிரித்தோம்.

சற்று நேரம் கழித்து, மீண்டும் செய்தியில், 'பிரதமர், யாருடனோ, 'சாதாரண' பேச்சு வார்த்தை நடத்தினார்' என்று படிக்கப்பட்டது. 'இது என்னது? 'சாதாரணப் பேச்சு 'அசாதாரண'ப் பேச்சு?' என்றார் என் கணவர். **"INFORMAL"** என்பதைத்தான் சாதாரணப் பேச்சு என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள்' என்று நான் கூறினேன். 'நல்லவேளை! முறையற்ற பேச்சு என்று கூறாமல் விட்டார்களே?!' என்று என் கணவர் கூறியதும் சிரிப்பை அடக்கவே முடியவில்லை!

— எஸ். ஆர். சீதாலக்ஷ்மி,
சென்னை — 20.



ஆரஞ்சுத் தோல் அல்வா!

எதையும் வீண் என்று எறிந்து விடாமல் உபயோகப் படுத்த நல்ல யோசனைகளைப் பல பத்திரிகைகள் இல்லத் தரசிகளுக்கும் குடும்பத் தலைவர்களுக்கும் இன்று வழங்கி வருகின்றன. அந்த வகையில் ''இல்லற கீதம்'' வழங்கியுள்ள ஓர் அருமையான யோசனை:

டில்லிக்குப் போயிருந்த கணவர் திரும்பி வரும் போது, நாக்பூர் ஸ்டேஷனில் கூடை ஆரஞ்சு ஐந்து ரூபாய்க்குக் கிடைக்கிறதே என்று ஆசைப்பட்டு இரண்டு கூடைப் பழங்களை வாங்கி வந்து விட்டார். குடும்பத்தில் எல்லோரும் பழங்களை உரித்து உள்ளே தள்ளியும் ஜூஸ் பிழிந்து சர்க்கரை சேர்த்துக் (இந்த வார சர்க்கரை ரேஷன் காலி) குடித்தும் எப்படியோ சமாளித்தாகி விட்டது. ஆனாலும் என்ன? முக்கால் கூடை ஆரஞ்சுத் தோல் அப்படியே பாக்கியிருக்கிறதே, அதை என்ன செய்வது? குப்பைத் தொட்டியில் எறிய மனம் வருகிறதா? காசு கொடுத்து வாங்கியதாயிற்றே! மேலும் பழத்தை விடத் தோலில் தான் வைட்டமின் சத்து அதிகம் என்பது நமக்குத் தெரியுமே! எனவே அதைப் பயன்படுத்த இதோ ஓர் அருமையான யோசனை: ஆரஞ்சுத் தோல் அல்வா! இதைத் தயாரித்து உங்கள் கணவருக்குக் கொடுத்துப் பாருங்கள். ருசி பார்த்ததுமே உங்களை அவர் ஏகமாகப் புகழும் போது வானத்தில் 'ஜிவ்' வென்று பறப்பது போல் இருக்கும்! ஜூஸ் தயாரித்ததிலேயே சர்க்கரை ரேஷன் தீர்ந்து விட்டதே என்று கவலைப்படாதீர்கள். இந்த மாதிரி ஒரு நெருக்கடிக்காகத்தானே வெளி மார்க்கெட் செயல்படுகிறது? அதில் இரண்டரைக் கிலோ வாங்கி விடுங்கள். சர்க்கரை தவிர, அல்வா தயாரிப்பதற்கு நீங்கள் வாங்க வேண்டிய இதர அயிட்டங்களின் பட்டியல் இதோ:

i) பாதாம் பருப்பு	—	½ கிலோ
ii) பிஸ்தா பருப்பு	—	½ கிலோ
iii) முந்திரிப் பருப்பு	—	½ கிலோ
iv) முலாம்பழவிதை	—	¼ கிலோ
v) உலர்ந்த திராக்ஷை	—	½ கிலோ
vi) புத்துருக்கு நெய்	—	½ கிலோ
vii) குங்குமப்பூ	—	2 தோலா
viii) பால்	—	1 டப்பா
ix) பச்சைக்கற்பூரம்	—	2 கிராம்
x) ஜாதிக்காய்	—	1
xi) ஏலக்காய்	—	50 கிராம்

செய்முறை: ஆரஞ்சுத் தோல்களை நன்றாக அலம்பித் துடைத்து, சிறு துண்டுகளாய் நறுக்கி வைத்துக் கொள்ளவும். பாதாம், பிஸ்தா, முந்திரி பருப்புக்களை ஊறவைத்து வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ளவும். பாலில் வேண்டிய தண்ணீர் கலந்து, நன்றாகக் காய்ச்சி, ஏலக்காய், ஜாதிக்காய், பச்சைக் கற்பூரம் பொடி செய்து போட்டு, வெண்ணெய் போல் அரைத்துள்ள பாதாம், பிஸ்தா, முந்திரியைப் பாலில் கலந்து நன்றாகக் கரண்டியால் கரைக்கவும். பாகு போல் கண்டி இறுக வேண்டும். பிறகு ஒரு பாத்திரத்தில் சர்க்கரையைப் பாகாக்கிக் கொள்ள வேண்டும். இதனை அடுப்பில் Sim இல் வைத்து, மேற்கூறிய கலவையையும், ஆரஞ்சுப் பழத் தோல் துண்டுகளையும் பாகில் போட்டு நெய்யை ஊற்றி ஊற்றிக் கிளற வேண்டும். தேவையானால் கலர் சேர்த்துக் கொள்ளவும். பதத்திற்கு வந்ததும் அடுப்பிலிருந்து இறக்கி, திராக்ஷைப் பழம், முலாம் பழ விதை இவைகளை நெய்யில் வறுத்துப் போட்டுக் கிளறித் தாம்பாளத்தில் கொட்டி, தட்டி வைக்க வேண்டும். மேலே குங்குமப் பூவைப் பரவலாகத் தூவ வேண்டும். அவ்வளவுதான்! மணமும், குணமும் நிறைந்த ஆரஞ்சுப் பழத்தோல் அல்வா ரெடி.

எச்சரிக்கை: அல்வா சாப்பிடும் போது தயாரிக்க ஆன செலவைப் பற்றி யோசிக்காதீர்கள். ருசி கசந்து விடும்!

— எம்மாரெஸ்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 5154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.

உங்கள் குழந்தைக்கு
அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் மட்டும் போதும். புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது: பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து

6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

RK SWAMY/TSL/5112/TAM

STERED No. M. 4592
tered as a Newspaper in Sri Lanka